கல்கி

KALKI 21.5.95 ரூ. 3.00





சுகாசினி டைரக்ஷன் எப்படி..?

சசிகலா விவகாரம் : திரைமறைவுச் சங்கதிகள்!



புதுக்கோட்டைத் தேர்தல் ரத்தானதைத் தொடர்ந்து, டல்லடித்துப் போன தமிழக அரசியல், சசிகலா விவகாரத்தால் மீண்டும் உற்சாக நிலை அடைந்துள்ளது. ஒரு பக்கம் குமரி அனந்தன் சசிகலாவுடைய சொத்துக்களின் பட்டியலை வெளியிடுகிறார். மற்றொரு பக்கம் எஸ்.ஆர்.பி., "டெல்லிக்கு தூதனுப்பி காப்பாற்ற முயற்சிப்பதா?" என்று காட்டமாகக் கேட்கிறார். தற்போதைய ஹீரோ சு. சுவாமி சும்மா இருப்பாரா?



"2000 கோடி ரூபாயை அயல்நாட்டுக்கு கடத்திக் கொண்டு போய் விட்டார் சசிகலா" என்றும், மத்திய அரசு அதிகாரிகளின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு விருந்தினர் மாளிகையில் ஒளிந்து கொண்டிருப்பதாகவும், சூடாக அறிக்கை விட்டிருக்கிறார். பத்திரிகைகளில் இப்படி 'காரசாரமாக' செய்திகள் வந்து கொண்டிருக்க, திரைமறைவில் என்ன நடந்தது; நடக்கிறது என்பதைக் கொஞ்சம் கவனிப்போம்.

ஹவாலா ராக்கெட் :

'ஹவாலா' என்பது தற்போது அடிக்கடி கேட்கும் வார்த்தை! இந்த இந்தி வார்த்தைக்கு பொருள் 'பணமாற்றம்' அல்லது 'பண பேரம்' என்பதுதான். வெளிநாட்டுப் பணத்தை இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கும் இந்தியப் பணத்தை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கும் சில விதிமுறைகள், சட்டங்கள் இருக்கின்றன. அனுமதி இல்லாமல் செய்தால் அது 'ஹவாலா' என்று சொல்லப்பட்டு, அந்நிய செலாவணி கட்டுப்பாட்டு அமுலாக்கப் பிரிவு (Enforcement Directorate) அதிகாரிகளால் மோப்பம் பிடிக்கப்படும். மாட்டிக் கொண்டால் கடுமையான தண்டனை உண்டு.

உதாரணமாக வெளிநாட்டில் இருக்கும் ஒருவர் இந்தியாவில் உள்ளவருக்கு 50,000 ரூபாய் அனுப்ப நினைக்கிறார். இந்த 'ஹவாலா' பேர்வழிகள் என்ன செய்வார்கள் என்றால், இந்தியாவில் அந்த 50000த்தை சம்பந்தப்பட்டவருக்கு இந்தியப் பணமாகக் கொடுத்து விட்டு, வெளிநாட்டில் பணம் அனுப்ப இருந்தவரிடம் டாலர்களைப் பெற்றுக் கொள்வார்கள். இதற்கு கமிஷன் தாராளமாகத் தரப்படுவதால் டாலர் அனுப்புகிறவருக்கு நல்ல ஆதாயம் உண்டு.

இப்படிச் செய்வதால் வெளிநாட்டுப் பணம் இந்தியாவுக்கு வருவது தடைபடுவது மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள சிலரின் கறுப்புப் பணமும் கண்ணுக்குத் தெரியாமல் காலியாகி, வெளிநாட்டு வங்கியில் டாலர்களாக குடிபெயர்ந்து விடுகிறது. இந்த வித்தைகளின் சூத்ரதாரி டெல்லி எஸ்.கே. ஜெயின். அவரது சிஷ்யர் நம்ம ஊர் அமீர்.

இந்த அமீருக்கு வேண்டியவர்கள் சிலரிடம் சசிகலா சொத்துக்கள் வாங்கியதாகச் சொல்லப்படுகிறது. அமீர் தலைமறைவாகி இருக்கிறார். அவருக்கு வேண்டிய சிலர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அமுலாக்கப் பிரிவு சசிகலாவுக்கு நோட்டீஸ் அனுப்பியிருப்பதாக, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை முதலில் செய்தி வெளியிட்டது. அதைத் தொடர்ந்துதான் இத்தனை அறிக்கைகள்; மறுப்புகள்!

சசிகலா கைதா?

அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் சசிகலாவைக் கைது செய்து கொண்டு போனார்கள் என்று தமிழக போலீஸ் வட்டாரமே நம்பும் அளவுக்குச் செய்திகள் பரவுகின்றன. ஒரு பத்திரிகை, 'ஐஸ் படுக்கை விசாரணை' என்று எழுதியிருக்கிறது! இந்தச் செய்திகளைப் பார்த்து சிரித்துக் கொண்டிருப்பவர்கள் மத்திய அரசு அதிகாரிகள் மட்டுமல்ல; சசிகலாவும் கூடத்தான்!

செய்தி வெளிவந்த அன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கே ஆச்சர்யம்!

'நமக்குத் தெரிந்து ஒன்றுமே நடக்கவில்லையே' என்று தாங்களாகவே கிள்ளிப் பார்த்துக் கொண்டார்கள். சில வடநாட்டு அதிகாரிகள் "Who is Sasikala?" என்று விசாரித்திருக்கிறார்கள்.

அந்த அளவுக்குத்தான் இருக்கிறது விவகாரம்!

"அமீர் விஷயத்தை நாங்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான். சசிகலா அந்நியச் செலாவணி விதிகளை மீறி இருக்கிறார் என்று எழுத்து மூலம் எங்களிடம் புகார் கொடுத்தால் விசாரிப்போம். டெல்லியிலிருந்து எந்தப் படையும் வரவில்லை!" என்று நம் காதில் கிசுகிசுத்தார், சென்னைக்கு வந்திருந்த டெல்லி புலனாய்வு அதிகாரி ஒருவர்.

எங்கிருந்து வந்தது செய்தி?

இங்கேதான் நுழைகிறது அரசியல். 'செயலற்றவர்' என்று பிரதமரை ஜெ. குறிப்பிட்டதால்தான் ஓர் அதிர்ச்சி வைத்தியம் போல இந்தச் செய்தி டெல்லியில் இருந்து 'விதைக்கப்பட்டதாக' நம்பகமான தகவல்கள் கூறுகின்றன. இந்த 'ஒத்திகை'க்கே அலறி விட்டார் ஜெ! சசிகலா, உயிர்த் தோழியாயிற்றே!

"நிஜமாகவே தோண்டத் துவங்கினால் ஆள் அம்பேல்தான், என்று சொல்லிச் சிரித்தார் அந்த அதிகாரி. காங்கிரஸில் பிரச்னைகள் இருப்பதால், அ.தி.மு.க.வுடன் தொடர்ந்து உறவு வைத்துக் கொள்ளும் சின்ன ஆசை காங்கிரஸில் இன்னமும் சிலருக்கு இருக்கிறதாம். ஆனால் தமா. காங்கிரஸ் இதைக் கடுமையாக எதிர்த்து நிற்பதால், தானாகவே ஜெ. சரணடைவதற்கான சூழ்நிலையை மத்தியில் உள்ளவர்கள் உருவாக்கி வருகிறார்களாம்.

அந்த நடவடிக்கையின் ஒரு பகுதிதான் இந்த 'விளையாட்டாம்'.

ஆனால் அ.தி.மு.க. வட்டாரத்தில் விஷயமே வேறாக இருக்கிறது.

"சசிகலா தமக்குத் தெரியாமல் ஏகப்பட்ட சொத்துக்களைச் சேர்த்து விட்டதால் நாளை ஏதாவது பிரச்னைகள் தோன்றும் என்று ஜெ. நினைப்பதால் சசிகலாவை சங்கடப்படுத்தி வெளியேற்றி விடத்தான் இது போன்ற செய்திகள் அவரால் பரப்பி விடப்பட்டுள்ளன" என்று புதுத் தகவல்களைச் சொல்கிறார்கள்.

சுத்தமான கைகளா?

"சசிகலா பெயரில் மட்டுமல்லாமல், தினகர், திவாகர், சுந்தரவதனம், விவேகானந்தன், பாஸ்கரன், நடராஜன் என்ற பெயர்களில் வாங்கும் சொத்துக்களையும் நாங்கள் கண்காணித்துக் கொண்டுதான் வருகிறோம். அரசாங்கக் காரியங்கள் கொஞ்சம் மெதுவாகத்தான் நடக்கும்; சரியான சமயத்தில் கழுத்தைப் பிடிக்கும்" என்று சொல்கிறார், வருமான வரித் துறை உயர் அதிகாரி ஒருவர். இவர்கள் மட்டுமல்லாமல், சி.பி.ஐ., வருமானப் புலனாய்வு (Revenue intelligence) ஆகிய ஏஜென்ஸிகளும் தங்கள் பார்வைகளை சசிகலா மீது திருப்பி விட்டிருக்கின்றன.


என்ன செய்யப் போகிறார் ஜெ?


இந்தச் சூழ்நிலையில் என்ன செய்வார் ஜெ? அவரது குணாம்சத்தைத் தெரிந்தவர்கள் 'பயமுறுத்தியோ மிரட்டியோ அவரை வழிக்கு கொண்டு வர முடியாது' என்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் 'சொத்துக்களைக் காப்பாற்றியாக வேண்டிய நிர்ப்பந்தமும் அவருக்கு இருக்கிறது' என்கிறார்கள். 'மத்திய அரசு சசிகலா பற்றிய செய்திகளுக்குத் தானாகவே மறுப்பு விட வேண்டும்' என்று ஜெ.வின் ரகசியமான வேண்டுகோளை மன்மோகன் சிங் (அமுலாக்கப் பிரிவு அவர் கையில்தான்!) கண்டுகொள்ளவில்லை.

'தமக்கு அனுசரணையாக நடந்து கொள்வார் குமரி அனந்தன்' என்று ஜெ. எதிர்பார்த்தார். ஆனால் அனந்தன் அவரை எதிர்த்து அனல் கக்கும் அறிக்கைகளை அன்றாடம் வெளியிடுகிறார். இதனால் கடுப்பாகிப் போய் இருக்கிறார் ஜெ.

சிக்கல்கள் நாலு திசைகளிலிருந்தும் முற்றுகையிடும் இச் சமயம் ஜெயின் அடுத்த நடவடிக்கை என்ன என்பதுதான் மில்லியன் டாலர் கேள்வி!

— நமது நிருபர்





1995 மே 21
யுவ வைகாசி 7
மலர் : 53
இதழ் : 42

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்



தண்ணீர் ராசியும் கண்ணீர் சோகமும்!

ஜெயலலிதாவின் தண்ணீர் ராசிதானோ என்னவோ, 'அக்னி நட்சத்திரம் வெயில் கொளுத்தப் போகிறது' என்ற சமயத்தில் மூன்று நாட்கள் மழை கொட்டி, பூமி குளிர்ந்தது மட்டுமல்ல; நிலத்தடி நீர் அதிகரித்தது, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளின் மட்டம் உயர்ந்தது.

ஆனால் இந்த சந்தோஷத்தை அனுபவிக்க முடியாமல் சில விபத்துக்களும் நிகழ்ந்துள்ளன. அடையாற்றின் தரைப் பாலத்தைக் கடந்து கொண்டிருந்த பஸ், திடீர் வெள்ளத்தால் தாக்கப்பட்டு அடித்துப் போகப்பட்டது. பயணிகள், தீயணைப்புப் படையினரின் பாராட்டுக்குரிய துரிதச் செயல்பாடு காரணமாகவும் திறமையாலும் காப்பாற்றப்பட்டனர். 'நல்லவேளை' என்று பெருமூச்சு விட்டு முடிவதற்கு முன்பாகவே திருவல்லிக்கேணி கிருஷ்ணாம்பேட்டை மயானத்தில் நடந்த பெருஞ்சோகம் மூச்சு விடுவதையே மறக்கச் செய்கிறது!

இங்கே பொதுக் கழிப்பிடம் அமைத்த மாநகராட்சி, அதையொட்டி சில பள்ளங் களைத் தோண்டியிருக்கிறது. அவை மூடப்படாததால் மழை நீர் தேங்கி, மட்டம் உயர, அங்கு பள்ளம் இருப்பதே தெரியவில்லை. நாலு குழந்தைகள் இந்தப் பள்ளத்தில் விழுந்து உயிர் துறந்திருக்கின்றன. மனச்சாட்சி என்று ஒன்று இருந்தால் இந்தச் சம்பவங்கள் அதிகாரிகளை மட்டுமின்றி முதல்வரையும்



> ஒரு மழை பெய்தால் சாலைகள் ஏரிகளாக மாறுவதும் திறந்து கிடக்கும் தெரு விளக்குகள், மின்பெட்டிகளில் ஒயர்கள் எமன்களாக எட்டிப் பார்ப்பதும் இங்கு வாடிக்கை. இதையெல்லாம் கவனிக்க முதல்வருக்கு ஏது நேரம்? தோழியைக் காப்பாற்ற அறிக்கை விடுவதற்குத்தான் அவர் அவசரப்படுவார்.


உறுத்த வேண்டும்.

மழை பெய்தால் அடையாறில் திடீர் வெள்ளம் பெருக்கெடுப்பது சகஜ மாதலால் பஸ் ஓட்டுனர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கலாம். கிருஷ்ணாம்பேட்டையில் பள்ளங்கள்ளை மூடாமல் வைத்திருந்த அசிரத்தை, நிச்சயமாக கண்டனத்துக்கு மட்டுமின்றி, தண்டனைக்கும் உரியது. ஒரு மழை பெய்தால் சாலைகள் ஏரி களாக மாறுவதும் திறந்து கிடக்கும் தெரு விளக்குகள், மின்பெட்டிகளில் ஒயர்கள் எமன்களாக எட்டிப் பார்ப்பதும் இங்கு வாடிக்கை. மாநகராட்சி கவுன்சிலர்கள் இல்லாத குறை நன்றாகவே தெரிகிறது.

இதையெல்லாம் கவனிக்க முதல்வருக்கு ஏது நேரம்? தோழியைக் காப்பாற்ற அறிக்கை விடுவதற்குத்தான் அவர் அவசரப்படுவார். அப்படியே ஏதாவது நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தாலும் மாநகராட்சி ஆணையருக்கு ஒரு மாற்றல் உத்தரவு பிறப்பிப்பாரே தவிர, உள்ளாட்சித் தேர்தல்களா நடத்திவிடப் போகிறார்?

பயங்கரவாதமும் வோட்டுப் பெட்டியும்

காஷ்மீரில் சரார் ஷரீஃப் தர்கா - மசூதியை பாக். தூண்டுதலுடன் ஆஃப்




கன் பயங்கரவாதிகள் ஆக்கிரமித்துக் கொண்டனர். காவல் துறை முற்றுகை யிடவே, முதலில் சுற்றுப்புறத்தைத் தீ வைத்துக் கொளுத்தி தப்பப் பார்த்தனர். அது பலிக்காமல் போக, புனித தர்கா - மசூதியையே கொளுத்திவிட்டு தப்ப முயற்சி செய்தனர். இதில் பயங்கரவாதிகள் பலரும் ஓரிரு காவலரும் உயிர் துறக்க நேரிட்டுள்ளது.


பாகிஸ்தான், கூலிப் படைகளை ஊடுருவச் செய்து இவ்வாறு தீங்கு விளை வித்து விட்டு, 'இந்திய ராணுவம்தான் தர்கா - மசூதியை எரித்து விட்டது' என்று பொய்ப் பிரசாரம் செய்கிறது. உலகம் நம்பாது.

இந்தப் பொய்ப் பிரசாரத்துக்கு இடமின்றி, ராணுவத்தை உள்ளே அனுப்பி வழிபாட்டுத் தலத்தை மீட்டிருக்கலாம் என்று எதிர்க்கட்சியினர் சிலர் செய்யும் வாதம் சரியல்ல. ராணுவம் புகுந்திருந்தால் கூலிப் படையினர் நிச்சயம் மசூதி - தர்காவுக்கு சேதம் விளைவித்திருப்பார்கள். அது ராணுவம் செய்ததாக பொய்க் குற்றம் சுமத்துவது எளிதாகிப் போயிருக்கும். பாகிஸ்தானின் நோக்கம் வெற்றி பெற்றிருக்கும். இன்று அத்தகைய அபவாதமில்லை.

காஷ்மீரில் ஜூலை 18 இல் தேர்தல் நடக்க வேண்டும் அல்லது அதற்கு முன் ஜனாதிபதி ஆட்சி நீட்டிக்கப்பட வேண்டும். தேர்தல் நடந்து ஜனநாயகத் தீர்ப்பு பெறுவதில் அரசு வெற்றி பெற்றுவிட்டால், மக்களிடம் தங்களுக்கு ஆதரவோ செல்வாக்கோ இல்லை என்பது நிரூபணமாகிவிடும் என்பது பாகிஸ் தான் மற்றும் அதன் கூலிப்படைகளின் திகில். எனவே, 'தேர்தலுக்கு உகந்த சூழ்நிலை இல்லை' என்பதை நிரூபிக்கும் முயற்சியில் அதிதீவிரமாக இறங்கி யுள்ளனர். இந்த சூழ்ச்சியை முறியடித்து, காஷ்மீரில் மத்திய அரசு தேர்தலை நடத்திக் காட்ட வேண்டும்.



அடுத்த நூற்றாண்டில் அட்மிஷன்!
மதி...
G.M.K.COLLEGE
NOTICE BOARD
இங்கு கம்ப்யூட்டர் முறையில் அட்மிஷன்
!!
PUSH
எனது மார்க்.
மார்க் மிகக் குறைவு. ரூபாய். 3,06,72,595.66 நன்கொடை கொடுத்தால் அட்மிஷன் உறுதி
சொல்லுடா கண்ணா, உனக்குத் தம்பிப் பாப்பா வேணுமா? தங்கச்சி பாப்பா வேணுமா?
எனக்கு ஒரு ஆளுக்கு ஸ்கூல் அட்மிஷன் வாங்க துப்பு இல்லை பின்னே எதுக்கு இன்னொண்ணு?
எதுக்கு அவரை போலீஸ் புடிச்சுட்டுப் போகுது?
எல்.கே.ஜி. அப்ளிகேஷன்ஃபாரம் ப்ளாக்ல வித்துக்கிட்டிருந்தாராம்!
எல்.கே.ஜி அட்மிஷனுக்கு இங்கு ஸ்பெஷல் கோச்சிங் கொடுக்கப்படும்
!!
பெற்றோர்களுக்கான பயிற்சி
?
உங்கள் குழந்தையின் எல்.கே.ஜி அட்மிஷனுக்கு


என்ன பண்றது! இங்க உள்ள ஸ்கூல்லல்லாம் அட்மிஷன் கிடைக்கலியே! வியாழன் கிரகத்துலதான் கிடைச்சிருக்கு!
என்ன பார்க்கிறீங்க! பழைய குருகுலம் ஸ்டைல்தான். நல்ல காற்றோட்டம் மாசம் ஃபீஸ் 1லட்சம் ரூபாதான் மினிஸ்டர் பிள்ளையே இங்கதான் படிக்கிறான் தெரியுமா?
'குருகுலம்' 21 ஆம் நூற்றாண்டு
அட... இங்கயும் நம்ம ஊர் கதைதான்..!
SCHOOL
L.K.G. அட்மிஷன்





ஜெ.-சசிகலா-சென்னா!







தலைப்பிலே ஒட்டாத விஷயம் சென்னா ரெட்டி என்று உடனே சொல்லி விடலாம். கீழே தரப்பட்டுள்ள தொகுப்புக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கற்றுலா விஷயம் ஏதோ ஒரு காரணத்துக்காக விலகி ஒட்டாமல் நிற்கிறது.

எது, ஏன் என்று கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள்... எங்கள் விடைகளுடன் உங்கள் விடைகள் ஒத்துப் போனால்... ஒரு த்ரில்தான்!


1. ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு.
2. மதுரை, தஞ்சாவூர், கும்பகோணம்.
3. சோழன் எக்ஸ்பிரஸ், பாண்டியன் எக்ஸ்பிரஸ், சேரன் எக்ஸ்பிரஸ்.
4. ஜெய்பூர், உதய்பூர், பரத்பூர்.
5. பைனாகுலர், காமெரா, வரைபடம் (map).
6. திருச்சூர் பூரம், சிதம்பரம் நாட்டியவிழா, சித்திரைத் திருவிழா.
7. தரமணி சினிமா நகரம், வள்ளுவர் கோட்டம், வேடந்தாங்கல்.
8. திருப்பதி லட்டு, திருநெல்வேலி அல்வா, சிதம்பரம் சம்பா கொத்ஸு.
9. ஸ்வெட்டர், குடை, தொப்பி.
10. டிராவலர்ஸ் செக், டிமான்ட் டிராஃப்ட், கிரெடிட் கார்ட்.

விடைகள் :

1. ஊட்டி - இங்கு மட்டும் ரயிலில் போகலாம்!
2. கும்பகோணம் - மாவட்டத் தலைநகர் அல்ல!
3. சோழன் எக்ஸ்பிரஸ் - இது பகல் நேர ரயில்.
4. பரத்பூர் - பறவைகள் சரணாலயம்; மற்ற இரண்டும் புராதனப் பெருமை வாய்ந்த நகரங்கள்.
5. வரைபடம் - மற்ற இரண்டும் லென்ஸ் சமாசாரம்!
6. சிதம்பரம் நாட்டிய விழா - பாரம்பரிய விழா இல்லை; சமீபத்திய யுக்தி.
7. வேடந்தாங்கல் - அரசியல் கலப்பில்லா பறவைகள் ராஜ்ஜியம்.
8. திருப்பதி லட்டு - இது பிரசாதம் சாமி!
9. ஸ்வெட்டர் - வெயிலில் அணிய முடியாது!
10. டிமான்ட் டிராஃப்ட் - ஹோட்டலில் பணத்துக்குப் பதிலாக இதைத் தர முடியாது!

Kalki Shopping Page

‘அவர் பைபாசுக்காக அமெரிக்கா போயிருக்கார்...’ என்று அரசியல்வாதிகள் மற்றும் பெரிய மனிதர்கள் பற்றி முன்பெல்லாம் பேச்சு அடிபடும். இப்போது அமெரிக்கா போவது குறைந்து போய்விட்டது. இந்தியாவின் மருத்துவ மெக்காவான சென்னையிலேயே காரியம் கச்சிதமாக முடிந்து விடுகிறது. அடுத்த கட்டமாக, பைபாசைக் காட்டிலும் நவீன இதய அறுவைச் சிகிச்சை முறை இங்கேயே வந்துவிட்டது. அதற்குப் பெயர் Trans Myocardial Revascularisation. சௌகரியம் கருதி TMR என்று சுருக்கிச் சொல்கிறார்கள்.



• அறுவை சிகிச்சை நடக்கிறது.

இதயத்தைத் துளைத்து உயிர் தருகிறார்கள்!


பைபாஸ் மற்றும் பலூன் ஆன்ஜியோபிளாஸ்டி என்ற ஆபரேஷன்களை ஏன் செய்கிறார்கள் என்பது புரிய கொஞ்சம் அனாடமி, பிஸியாலஜி தெரிய வேண்டும்.

மூடிய உள்ளங்கை அளவே இருக்கும் இதயம்தான் உடல் முழுவதுக்கும் ரத்தம் சப்ளை செய்யும் பம்ப். இந்த இதயத்தின் தசைகள் ஒழுங்காக இயங்குவதற்கும் ரத்த சப்ளை வேண்டுமல்லவா? இந்த Self-supplyக்காகப் பிரத்தியேகமாக ‘கரோனரி ஆர்டரி’ என்ற ரத்த நாளம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் அடைப்பு ஏற்படும்போது இதயத்துக்கான ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு அதன் செயல்பாடும் பாதிப்புக்குள்ளாகிறது; ஹார்ட் அட்டாக்கில் கொண்டு விடுகிறது.

கரோனரி ஆர்டரியின் அடைப்பை நீக்குவதற்காக பலூன் போன்ற சாதனத்தை அந்த ரத்த நாளம் வழியே செலுத்தி அது அடைப்பை நெருங்கும் போது விரிவடையச் செய்வார்கள். ‘பலூன்’ விரியும் போது ரத்த நாளமும் விரிவடைய அடைப்பு தளர்ந்து நீங்கிவிடும். பிறகு பலூனைச் சுருக்கி வெளியே எடுத்துவிடலாம். இது அதிக ரத்த சேதமின்றி செய்யப்படும் பலூன் ஆன்ஜியோபிளாஸ்டி. இந்த முறை சிகிச்சைக்குப் பிறகு அடைப்பு மீண்டும் வர வாய்ப்பு உண்டு.

பைபாஸ் ஆபரேஷன் என்பது மார்புக் கூட்டை மத்தியில் திறந்து செய்யும் அறுவை சிகிச்சை. ரோட் ரிப்பேர் நடக்கும் போது பைபாஸ் சாலை அமைப்பது போல், ரத்த நாளத்தில் அடைப்பு உள்ள பகுதியை விடுத்து, அதைச் சுற்றி வளைத்து இரண்டு, மூன்று சின்னக் குழாய்கள் மூலம் ரத்தம் பாயச் செய்வது. இந்த முறையில் எல்லா நோயாளிகளுக்கும் ஆபரேஷன் செய்ய முடியாது. சர்க்கரை வியாதி, ரத்தக் கொதிப்பு, நுரையீரல் தொடர்பான வியாதி போன்றவை உள்ளவர்களுக்கு இதைச் செய்வது ஆபத்து. கரோனரி ஆர்டரியில் அடைப்பு மிக நீளமாக இருந்தாலும் இதைச் செய்வது கஷ்டம்.

• ஹார்ட் லேசர் இயந்திரம்



சமீபத்தில், மெட்ராஸ் மெடிகல் மிஷன் மேற்படி பிரச்னைகளுக்குத் தீர்வாக TMR சிகிச்சை முறையை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த முறையில் என்ன செய்கிறார்கள் தெரியுமோ? லேசர் கதிர்களைக் கொண்டு, இதயத் தசைகளுக்கான ரத்தம் பாய வேண்டிய இடத்தில் பதினைந்து முதல் இருபது துளைகளைப் போட்டு விடுகிறார்கள்! ஒவ்வொரு துளையும் ஒரு மில்லி மீட்டர் விட்டம். இந்தத் துளைகள் மூலம், இதயத்தின் இடது வென்ட்ரிகலில் வந்து விழும் சுத்தமான ரத்தம் நேரடியாகத் தசைகளுக்குப் போய்விடுகிறது. நல்ல ரத்தத்தைச் சுமந்து போய்



• டாக்டர் கே. எம். செரியன்

தசைகளுக்குத் தரும் குழாய் அடைபட்டுப் போனால் அந்த அடைப்பை நீக்குவது பற்றிய கவலையே இல்லாமல் இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்து விடலாம்.

இதில் வேறு பல அனுகூலங்களும் இருக்கின்றன.

● பைபாசுக்குத் தேவைப்படுவது போல் நான்கைந்து மணி நேரம் ஆபரேஷனுக்குத் தேவைப்படாது. இரண்டு மணி நேரத்தில் விஷயம் முடிந்து விடும். நடு மார்பைத் திறக்காமல் இடது பக்கத்தில் மட்டும்தான் திறப்பார்கள்.

● ரத்த விரயம் மிக மிகக் குறைவு. நூறு எம்.எல்லைத் தாண்டாது! இந்த எய்ட்ஸ் யுகத்தில் ரத்தம் ஏற்றுவது பற்றிய கவலை மிச்சம்.

● ஆஸ்பத்திரி வாசம் ஒரு வாரம்தான் என்பதால் செலவும் குறையும் - சுமார் ஒன்றரை லட்ச ரூபாயில் சிகிச்சை முடிந்துவிடும்.

● நீண்ட நேரம் மயக்க மருந்து கொடுக்க வேண்டாம். ஆபரேஷனின் போது 'ஹார்ட்-லங்க்' இயந்திரம் பொருத்தி பேஷண்டைக் காப்பாற்றும் அவசியமும் இருக்காது.

இந்தியாவிலேயே முதன் முறையாக டி.எம்.ஆர் அறுவை சிகிச்சை செய்து காட்டியிருப்பவர்... வேறு யார்...? டாக்டர் கே.எம். செரியன்தான்! இதுவரை ஆஸ்திரேலியா, ஆசியா கண்டங்களில் வேறெங்கும் இது செய்யப்படவில்லை. இதற்கென CO_2 Heart Laser 1000 watts என்ற நவீன இயந்திரம் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இரண்டரை கோடி ரூபாய் பெருமானமுள்ள இதை டாக்டர் செரியன் டைரக்டராக விளங்கும் மெட்ராஸ் மெடிகல் மிஷன் வாங்கியுள்ளது.

இதன் பலனை முதன் முதலில் அனுபவித்த இரண்டு பேஷன்டுகளும் பெங்களூரைச் சேர்ந்தவர்கள் - கர்னல் வெங்கடேசன் மற்றும் சமீர் பாஷா. இருவருமே உற்சாகத்துடன், புத்துணர்ச்சியுடன் இருக்கிறார்கள்.

லேசர் கதிர் என்ற அற்புதமான கண்டுபிடிப்பினால் இந்த சிகிச்சை முறை சாத்தியமாகியிருக்கிறது. மிகத் துல்லியமாக, சேதமின்றி துளைகள் போடுவது லேசரால்தான் முடியும். எனினும் இப்படி இதயத் தசைகளுக்கு நேரடியாகத் துளைகள் மூலம் ரத்தம் போகச் செய்யலாம் என்ற யோசனை எப்படி வந்தது....? இயற்கை கற்றுத் தந்த யுக்திதான் இது. பாம்பு, போன்ற ஊர்ந்து செல்லும் விலங்குகளின் இதயத் தசைகளுக்கு இந்த முறையில்தான் ரத்தம் கிடைக்கிறதாம்!

— மதுமனோ

சின்னத்திரை: குட்டி நியூஸ்!



• ஆர். வி. உதயகுமார்



• குட்டி பத்மினி



• கே.பி.

● ஜெ. ஜெ. டீ.வி. மட்டும் துல்லியமாய்த் தெரிவது ஏன்....?

"சாதாரண வி.எச்.எஸ் காசெட்டின் விலை முந்நூறு ரூபாய். நாங்கள் உபயோகிப்பது சிறப்பு காசெட் - விலை ரூ. மூவாயிரம்! தரத்தின் காரணமாகத் துல்லியம்....!" என்கிறார் ஜெ.ஜெ. டீ.வியில் புரோகிராம் எக்ஸிகியூடிவாக இருக்கும் முரளி.

ஜெ.ஜெ.வில் ஜேஜே என்று வரவிருக்கும் தொடர்கள் :

● வடிவேலுவுடன் ஆர்.வி. உதயகுமார் நடிக்கப் போகிறார் - அவரே தயாரித்து வரும் தொடரில். பெயர் 'விடாக் கொண்டன் கொடாக் கொண்டன்' - பெயர்தான் புராண காலத்தது. தொடர் - சொட்டச் சொட்ட நகைச்சுவை - நவீனம்.

● புராணப் பெயருடன் புராணத் தொடரும் வருகிறது. இந்திரஜித். ஆர்.எஸ். மனோகரின் மேடை நாடகம் சின்னத் திரைக்கு மேக்அப் போட்டுக் கொண்டிருக்கிறது. ஸ்டார் வால்யூவுக்கு மனோகருடன் விஜய்குமார், சேர்க்கப்படுகிறார். இசை: ஆதித்யன்.

● பி.சி. ராமகிருஷ்ணா - ஆங்கில நாடகங்களுக்காக மேடையேறியவர் - இவர் தோன்றவிருக்கும் 'புனித பூமி' தொடரில் ஸ்ரீவித்யாவுடன் பப்லு, சிவகுமார் ஆகியோரும் உண்டு. பெயரைப் பார்த்தாலே புரிகிறதல்லவா தேச பக்தி தொடர் என்று.....?

● Candid Camera, FIR என்றெல்லாம் ஆங்கிலப் பெயர்களுடன் தமிழ்த் தொடர்கள் தயாரித்து வருகிறார் குட்டி பத்மினி.

● வானவில் வாழ்க்கை, பூவா தலையா, ஜன்னல் என்று டீ.வி. டிரேட் மார்க் தலைப்புடைய தொடர்களுடன் 'spotlight' என்றொரு தமிழ்த் தொடரையும் உருவாக்குகிறார் கே. பாலசந்தர். லேட்டஸ்ட் செய்தி : இதே இதழில் வேறு பக்கங்களில் இயக்குனர் சிகரம் எழுதி வரும் நினைவலைகள் கூட.....

- வாக்கியத்தை நீங்களே பூர்த்தி செய்து கொள்ளலாம்.

— உல்லாசப் பறவை

பணம் பண்ணலாம் வாங்க!

பங்கு மார்க்கெட்டை பாதிக்கும் 'பாலிடிக்ஸ்'!

வி. கோபாலன்

ரங்கராஜன் குமாரமங்கலத்துக்கும் 'மும்பாய்' (இனிமேல் அப்படித்தானே சொல்லணும்!) பங்கு மார்க்கெட்டுக்கும் என்ன சம்பந்தம்? அமாவாசை அப்துல் காதர் காம்பினேஷன் இல்லை இது. சாட்சி: மே மாத முதல் வாரத்தில் சருக்கு மரத்தில் இறங்கிய மும்பாய் பங்குமார்க்கெட் குறியீடு. Sensitive index என்று இந்தக் குறியீடுக்குப் பெயர் - செல்லமாக sensex!

சென்செக்ஸ் என்பதை முதலில் விளக்க வேண்டும். ஒவ்வொரு பங்குமார்க்கெட்டிலும் பல நூறு கம்பெனிகளின் ஷேர்கள் வியாபாரத்துக்கு வருகின்றன. அவற்றுள் சுமார் முப்பது முதல்தர நிறுவனங்களின் ஷேர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இந்த முப்பது ஷேர்களுக்கு நூறு பாயின்டுகளைப் பிரித்துத் தருவார்கள். சராசரியாக 3.3 பாயின்ட்கள் ஒரு நிறுவனத்துக்குக் கிடைக்க வேண்டும். ஆனால் ரிலையன்ஸ் போன்ற ஓரிரு நிறுவன ஷேர்களுக்குக் கூடுதல் பாயின்டுகள் தரப்படும்; அதற்கேற்ப வேறு சில நிறுவனங்களுக்குப் பாயின்டுகள் குறையும். இந்த நூறு பாயின்டுகளுக்குரிய நிறுவனங்களின் ஷேர்கள் நல்ல விலைக்கு வியாபாரமானால், அவற்றுக்கு 'டிமான்ட்' அதிகமானால், 'சென்செக்ஸ்' என்ற தர்மாமீட்டரில் பாயின்டுகள் ஏறும்; 'டிமான்ட்' குறைந்து ஷேர்கள் வாங்குவோரின்றிக் கிடந்தால் சென்செக்ஸில் பாயின்டுகள் கிடுகிடுவென்று இறங்கும்.

இந்த சென்செக்ஸ் அமைப்புக்கு 1978/79 இல் உருவம் கொடுத்த போது நூறு பாயின்ட் என்பதே அதிகபட்சமாக இருந்தது. ஆனால் சமீபத்தில் - சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் - அந்தக் குறியீடு 4600 பாயின்டுகளை எட்டியது! அப்படியானால் கடந்த பதினேழு ஆண்டுகளில் பங்குமார்க்கெட் எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்று பாருங்கள்!

இப்படியே சென்னை, டெல்லி, என்று மற்ற நகரங்களின் பங்குமார்க்கெட்டுகளுக்கும் குறியீடு உண்டு. ஆனால், பொருளாதாரத் தலைநகரமான பம்பாய் ஷேர் மார்க்கெட்டின் சென்செக்ஸுடைய போக்குதான் நாட்டின் ஒட்டுமொத்த ஷேர்மார்க்கெட் போக்குக்கும் கன்ட்ரோல் ரூம் மாதிரி.

திரும்பவும் மே மாத முதல் வாரத்துக்கு வருவோம். அப்போது சென்செக்ஸ் ஒரேயடியாக 118 பாயின்டுகள் குறைந்து போயிற்று. அந்தச் சமயத்தில் ஷேர் மார்க்கெட் படு 'டல்'! 'இன்னும் கொஞ்சம் ஏறட்டும், வித்துடலாம்' என்று காத்திருந்த முன்னணி கம்பெனி பங்குதாரர்களுக்குச் சரியான பயம் பிடித்துக் கொண்டது. ஒரு வாரம் இப்படி பயம் காட்டிவிட்டு சென்செக்ஸ் மீண்டும் சுதாரித்துக் கொண்டு ஏற ஆரம்பித்தது. ஆனால் விழுந்த வேகத்தில் ஏறாததால் இன்னும் பழைய நிலையை அடையவில்லை.



"சரி, ரங்கராஜன்குமாரமங்கலத்தை ஏன் சும்மா வம்புக்கு இழுத்த...?" என்கிறார் சிகாமணி. விளக்கிச் சொல்றேன்.

'வெட்டுத் தீர்மானம்' அப்படின்னு பேப்பர்ல பெரிசா அடிபட்டது இல்லையா? அதாவது மத்திய அரசு தயாரித்த பட்ஜெட், ஆளும்கட்சியின் கொள்கையையொட்டி அமையலை என்கிறதுக்காக பட்ஜெட் விவாதத்தின் போது சில செலவினங்களை எதிர்த்தும் குறைக்கச் சொல்லியும் கேட்கும் தீர்மானம். இந்தத் தீர்மானத்தை எதிர்க்கட்சிக்காரங்கதான் சாதாரணமா கொண்டு வருவாங்க. ஆளும்கட்சிக்குப் போதுமான பலம் இருந்தா தீர்மானம் விழுந்து போயிடும். ஆனால் ஆளும்கட்சி உறுப்பினரே வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்தால்....? கூட இருந்தே குழிபறிக்கும் கதைதான்!

இப்படி ஒரு நிலைமை வரும் போது ஆட்சிக்கே அபாயம் வந்துரும்னு நம்புறத்துக்கு இடம் இருக்கு. ஆட்சிக்கு அபாயம் வந்தா, அந்த ஆட்சி ஆதரிக்கும் பொருளாதாரக் கொள்கைக்கும் ஆபத்து. அதனாலே தொழில், வர்த்தகத் துறைக்கு அச்சுறுத்தல். அதனாலே அந்தத் துறைகளில் உள்ள நிறுவனங்களின் மதிப்பும் குறைகிறது. எனவே பங்குமார்க்கெட்டில் அந் நிறுவனங்களின் ஷேர் விலை குறைகிறது, மார்க்கெட்டே மந்தமாகிறது! (மந்த நிலைக்கு எம்.எஸ்.ஷூஸ் விவகாரமும் காரணம் என்று சொன்னேன்... எம். எஸ். ஷூஸ் ஆரம்பித்து வைத்த போக்கை குமாரமங்கலம் வேறொரு 'ரூட்'டில் வந்து தொடரச் செய்திருக்கிறார்.)

அரசியல் எந்த அளவுக்குப் பொருளாதாரத்தை - நமது பர்ஸை - பாதிக்கிறது பாருங்கள்!

ஷேர் மார்க்கெட்டில் சென்செக்ஸ் உயரக் காத்திருக்கும் நேரத்தில் கொஞ்சம் டிராக் மாறி, சேமிப்புத் திட்டங்களை கவனிப்போம்!

ஆயுள் இன்ஷூரன்ஸ் செய்து கொண்டால் குடும்பத்தின் எதிர்காலம் பற்றிக் கவலையில்லை என்பது ஒரு ஆதாயம். நாம் ப்ரீமியத்தை மட்டும் ஒழுங்காகக் கட்டிக் கொண்டு வந்தோமானால் இன்ஷூரன்ஸ் என்கிறது ஒரு சுலபமான, நூறு சதவிகிதம் பாதுகாப்பான சேமிப்பு. அத்துடன் பல்வேறு இன்ஷூரன்ஸ் திட்டங்களுக்குச் செலுத்தப்படும் ப்ரீமியம் தொகைக்கு வருமான வரி விலக்கும் உண்டு. தபால் துறை சேமிப்புத் திட்டங்கள் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரங்கள், பப்ளிக் பிராவிடன்ட் ஃபண்ட் முதலியவற்றில் பணம் போட்டாலும் வரி விலக்குக் கிடைக்கும்.

இதுபற்றி மேலும் விவரமாக அடுத்த வாரம் சொல்கிறேனே...

(பணம் பெருகும்)


எம்.எல்.ஏக்களின் உள்ளங்களை ஏ.சி.பண்ணு...!

அமைச்சர்களுக்கும் எம்.எல்.ஏ.க்களுக்கும் சம்பளத்தை உயர்த்தி, அலவன்சுகளைக் கூட்டியிருக்கிறார் நிதி அமைச்சர். அவர்கள் உள்ளங்களை ஏ.சி. பண்ண மேலும் சில அலவன்ஸ் யோசனைகள்:

தட்டலவன்ஸ் : மேசையை இடைவிடாமல் தட்டிச் சத்தம் போட்டு, மாற்றுக் கட்சியினரை வாயடைக்க வைக்கிற எம்.எல்.ஏக்களுக்கு, மாதம் 250 ரூபாய். தோளில் அல்லது முதுகில் 'அன்புடன்' ஓங்கித் தட்டும் நபர்களுக்கு மாதம் 500 ரூபாய்.

புகழ்ச்சி அலவன்ஸ் : முதலமைச்சரை அளவுக்கு மீறிப் புகழ்ந்து பேச வேண்டும். அல்லது தினசரிகளில் முழுப்பக்க விளம்பரங்கள் மூலம், இதற்கு மேல் புகழ்பாடத் தமிழில் வார்த்தைகளே இல்லை என்கிற அளவுக்குத் துதி பாடியிருக்க வேண்டும். கேசட்டாக வெளியிட்டிருந்தால் அதற்கும் அலவன்ஸ்.

குண்டுக்கட்டு அலவன்ஸ் : சபாநாயகரின் ஆணைப்படி வந்து, எம்.எல்.ஏ.க்களை குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியே கொண்டு வந்து விரட்டி விடும் மார்ஷல்களுக்கு மட்டும். அப்படி வெளியேற்றியதும், அந்த உறுப்பினர்கள் தங்களைத் தாக்கினார்கள் என்று போலீசில் புகார் செய்யும் மார்ஷல்களுக்கு, கூடுதல் இன்க்ரிமென்ட்.




மைக் உடைப்பு அலவன்ஸ் : ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் ஒரே வீச்சில் மைக்கைப் பிடுங்கி, சாதனை புரிபவருக்கு ரூ. 100. மாற்றுக் கட்சி உறுப்பினர் எவருடைய மண்டையிலாவது ஒரு தடவையேனும் ஓர் அடி அடித்திருந்தால் மாதம் 200 ரூபாய் ஸ்பெஷல் அலவன்ஸ்.

தொகுதியில் தலை காட்டா அலவன்ஸ் : விளக்கம் தேவையில்லை. மாதம் 500 ரூபாய்.

அலவன்ஸ் அலவன்ஸ் : இத்தனை அலவன்சுகளையும் வாங்க முயற்சி செய்து அதிகபட்ச வெற்றி பெற்றவருக்கு வழங்கப்படும் சிறப்பு அலவன்ஸ்!

— சித்தார்த்



இந்திரா

— விமர்சனம்

உலக சினிமா ஓட ஆரம்பித்து, வருஷம் நூறைக் கடந்திருக்கும் வேளையில், நாற்றுப் பழங்கதைகளையே இன்னும் நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்கிற எண்ணம் லேசாக எட்டிப் பார்ப்பதைத் தவிர்க்க முடியவில்லை.

''ஆனால் ஐயா, அதுதானே இன்னும் வயல்காட்டுப் பிரதேசங்களில் நடந்து கொண்டிருக்கிறது?'' என்று மூக்கு சிவக்கப் படம் முழுசும் கேட்கிறார் சுகாசினி.

புரிந்திருக்கும்.... ஜாதிப் பிரச்னை.

மேல் சாதி - கீழ்சாதி, நீ செருப்பு போடாதே, இது ஐயமார் குளம், நீ குளிக்க வேறு இடம் பார் - குளித்தாயா? மொட்டை அடித்து செருப்பு மாலை!

- சாதிப் பிரச்னை இன்னும் இருக்கலாம்; ஆனால் இத்தனை மெருகு குலையாத புராதனமாகவா?

தொட்டதற்கெல்லாம் அரிவாள் தூக்கும் முரட்டு கிராம மாந்தர்களை சீர்திருத்த வியர்வை, also ரத்தம் சிந்தும் கேரக்டர் ஏன் ஒரு பெண்ணாக இருக்கக் கூடாது என்று சுகாசினி யோசித்ததன் விளைவு 'இந்திரா'.

சரேலென்று அந்த கேரக்டரை ஒரே ஃபிரேமில் புரட்சித் தலைவி ஆக்காமல் படிப்படியாக, உயர்ந்த, இயல்பான அணுகு முறையைக் கையாண்டிருப்பது இதர கிராமப் பட இயக்குநர்களிலிருந்து சுகாசினியைப் பிரித்துக் காட்டுகிறது. அதாவது, so called cinematic approach இல்லை. முதல் படத்திலேயே இது கைவந்திருப்பது சத்தியமாக சாதனை.

சிறந்த உதாரணம் அந்த இடைவேளைக் காட்சி. கொலை செய்யப்பட்டுக் கிடக்கும் அப்பா. 'ஆண் வாரிசு இல்லை; நீ வா நீ

சுகாசினி டைரக்ஷன் எப்படி..?



• இயக்குனர் சுகாசினி

மூட்ட' என்று கூப்பிடும் ஊர் & உறவு. உடனே, புரட்சிகர உக்கிரத்துடன் டைட்டுளோஸப்பில் எழுந்து நிற்காமல் குப்புறப் படுத்துக் குலுங்கி அழுவது தமிழ் சினிமா காணாத யதார்த்தம்.

அவ்வண்ணமே, மந்திரியின் ஆலோசனைப்படி எலெக்ஷனில் நிற்க முடிவெடுத்த சமயம், கலவர சாதிக்காரர்களால் 'கேரோ' செய்யப்படும் காட்சி.

'மென்மை' குலையாத பெண்மையை கவித்துவத்துடன் அதேசமயம், புதுமைப் பெண்ணாகவும் சித்திரிக்கும் முயற்சியில் இயக்குநர் ரொம்பவும் உழைத்திருக்கிறார். வெகு நேர்த்தியான வெளிப்பாடு.

டைட்டில் நாயகி அனுஹாஸன், சுகாசினியின் ஸெக்கண்ட் எடிஷன் - நடிப்பிலும். பாவங்கள் அநாயாசமாக வருகின்றன. வெட்கப்பட்டு, அரவிந்த் சுவாமியுடன் காதல் பாடும் அந்த ஒரு காட்சி தவிர, மிச்சமெல்லாம் வெறும் புத்திசாலித்தன வெளிப்பாடுகள்தான்.

படத்தின் ஒரே குறையாகத் தோன்றுவது அடுத்தடுத்து வரும் அந்த சாதிக் கலவரக் காட்சிகள். திரைக்கதை அமைப்பில் மணிரத்னமும் இணைந்திருப்பதால் - அச்சம்பவங்கள் 'பம்பாயை'ப் பெரிதும் ஞாபகப் படுத்துகின்றன. ஒரே சம்பவத்திற்கு (களன்கள் வேறானாலும்) இங்கே கலவரத்துக்கு வேட்டியும் அங்கே பேண்ட்டும் மாட்டிவிட்டிருப்பதாகத் தோன்றுகிறது - தவிர்த்திருக்கலாம்.

கல்யாண ஜோரில் இசையமைத்திருக்கும் ரகுமான், இரண்டு பாடல்களில் கொடி கட்டிப் பறக்கிறார். மெல்லிய இந்துஸ்தானி சாயலில், 'நிலா காய்கின்ற' போது - நிஜமாகவே புல்லரிக்கின்றது.

சினிமாத்தனமில்லாத வைர(முத்து) வரிகள், அசத்தும் கேமரா - கூடுதல் சிறப்பு.

நடைமுறை சாத்தியமா என்கிற கேள்வி எழுந்தாலும், சாதிப் பிரச்னைக்குச் சின்னஞ் சிறுவர்கள் முற்றுப்புள்ளி வைப்பதாக வரும் க்ளைமாக்ஸ், பாஸிடிவ் சிந்தனை வளர்க்கத் தூண்டுவதைக் குறிப்பிட வேண்டும்.

சுகாசினிக்கு ஆரோக்கியமான சிந்தனைப் போக்கு இருப்பது புரிகிறது. தமிழ் சினிமா தலையெழுத்தை இவர் மாற்றுகிறாரோ இல்லையோ, அது, இவரை மாற்றிவிடாமல் இருந்தாலே லாபம்.

— ஆர்.பி.ஆர்.



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி–1995

முதல் பரிசு ரூ. 1,500;
இரண்டாவது பரிசு ரூ. 1,000;
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 500 வீதம்) ரூ. 1,000.

ஆக மொத்தம் ரூ. 3,500 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி : ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்டு 6 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

வாசன்

“நீலா... ஏதோ துணையாக வரும் என்னிடம் நீ பேசணும்னு கட்டாயமில்லை” என்றான் மூர்த்தி.

அவன் எதிர்பார்த்த பதில் வந்தது நீலாவிடமிருந்து. “மூர்த்தி ஐம் ஸாரி... ஏதோ என் குடும்ப நினைவு... இன்னைக்கி சாயங்காலம் என்ன நடந்தது தெரியுமா?” என்று தொண்டையைச் சரி செய்து கொண்டாள்.

“செங்கோடன் சார் என்னை ஆறு மணிக்கு வீட்டில் கொண்டு விட்டார். எனக்கு முன்னாலேயே சேது வீட்டுக்கு வந்திருந்தார். உள்ளே போனதும் மேசைமேல் நிறைய மல்லிகைப் பூ. செய்தித்தாளைப் புரட்டியபடி சேது உட்கார்ந்திருந்தார்.” என்று தொடங்கி நீலா விவரித்தாள்....

“என்ன நீலா, இன்னைக்கி இவ்வளவு நேரம்? மறந்துட்டியா?”

நீலா துணுக்குற்றாள். “அடடே, சேது உண்மையிலேயே எனக்கு நினைவு இல்லை... இருந்திருந்தால்...” என்று அவள் முடிக்கும் முன் சேது செய்தித்தாளைக் கீழே போட்டான். எழுந்து நின்றான். அவன் முகம் சிவந்தது.

“நீலா..... நமக்கு என்னைக்கி முக்கிய நாளோ அன்னைக்கித்தான் உனக்கு வேலை அதிகமாகும்.... எல்லாம் மறந்து போகும் - வேலையைத் தவிர” என்று கோபமாகப் பேசினான். நீலா மௌனமானாள்.

அன்று நீலா - சேதுவின் வாழ்க்கையில் முக்கிய நாள்தான். அவர்களுக்குத் திருமணமாகி நான்காண்டுகள் ஆகியிருந்தன.



மௌனப் பூகம்பம்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் நீலா கருத்தரித்த சில மாதங்களில் கருவை இழந்து விட்டாள். அந்த நாள் சேதுவின் மனத்தில் பெரிய குறையை ஏற்படுத்தியிருந்தது. நிகழ்ச்சி நடந்த மறு ஆண்டு அதே நாளில் இருவரும் கோயில் பிரார்த்தனைக்குப் போய், ஒவ்வொரு ஆண்டும் அதே நாளில் சிறப்புப் பிரார்த்தனை செய்வதாய் உறுதி எடுத்துக் கொண்டனர்.

மேசை மேலிருந்த மல்லிகைப் பூ நீலாவைக் கேலி செய்வது போலிருந்தது. நீலா துவண்டு சோபாவில் சரிந்தாள். சேது குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தான்; அவன் எதுவும் பேச விருப்பப்படவில்லை என்பதை அவனுடைய நடையின் வேகமே உணர்த்தியது. அவன் வேகத்துக்கு இணையாக கடிகாரமும் ஓடியது. நீலா கண் விழித்த போது மணி ஏழரை ஆகிவிட்டது.

துள்ளியெழுந்த நீலா, "எனக்குப் புது 'அசைன்மெண்ட்' இன்னக்கி இருக்கிறதே.. நேரமாகிவிட்டதே'' என்று சொல்லிக் கொண்டே முகம் கழுவ உள்ளே போனாள்.

அவள் கைப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்ட போது, சேது அவளைத் தன் குரலால் தடுத்தான். "நீலா.... ஆறு மணிக்கு வந்தே.... ஏழரை மணிக்கு மறுபடியும் புறப்படறியே.... குடும்ப வாழ்க்கைன்னா என்னன்னு தெரியுமா உனக்கு?"

நீலா நின்று சேதுவைப் பார்த்தாள்.

"எனக்குக் குடும்ப வாழ்க்கை ரொம்பவும் முக்கியம் சேது. இல்லைன்னா நான் கல்யாணமே செய்துகிட்டு இருக்க மாட்டேன். ஆனால் செங்கோடன் சார் எனக்கு முக்கிய வேலை ஒண்ணு கொடுத்திருக்கிறார். அந்த உற்சாகத்தில்தான்..."

"அப்படி என்ன 'அசைன்மெண்ட்'?"

''டாக்டர் பிரபு என்ற ஆராய்ச்சியாளருக்கு ஒரு பாராட்டு விழா. அதைப் பற்றி நான் எழுதணும். தேனாம்பேட்டை மைதானம் வரை போகணும்.... வந்து விவரங்கள் சொல்லட்டுமா, சேது?'' குழைந்தாள் நீலா.

"சரி, சரி... உன் இஷ்டப்படியே நடக்கட்டும்... நானாவது கோயிலுக்குப் போய் வர்ரேன்'' என்று சேது ஒப்புக் கொண்டான்.

சேதுவிடம் பேசிவிட்டாளே தவிர நீலாவின் மனம் அமைதியை இழந்து தவித்தது. தேனாம்பேட்டை மைதானத்துக்கு ஆட்டோவில் வரும்வரை அவள் சேதுவைப் பற்றியும், சேது கோபித்துக் கொண்டதைப் பற்றியும் நினைத்துக் கொண்டே வந்தாள். ஒரு வேளை சேது சொல்வது உண்மை தானோ? தாயாக வேண்டுமென்ற எண்ணமே என்னிடம் இல்லையோ? நான் ஏன் இப்படி இருக்கிறேன்? என்னுடன் கல்லூரியில் படித்த பெண்கள் இப்போது கையில் ஒன்றும் இடுப்பில் ஒன்றுமாக இருக்கிறார்கள். நான்... நானோ இந்தச் செய்தி, அந்தக் கட்டுரை என்று ஓடியாடி எழுதிக் கொண்டிருக்கிறேன். குடும்பமா? வேலையா? எது பெரிது? குழப்பந்தான் மிஞ்சியது நீலாவுக்கு.

இதைச் சொல்லி முடித்த நீலாவுக்கு மூர்த்தி ஆறுதல் சொன்னான். சேதுவிடம் பொறுமையாக நடந்து கொள்ளும்படி நண்பன் என்ற முறையில் கேட்டுக் கொண்டான்.

ஆட்டோ நீலா-சேது வசித்து வந்த ஃபிளாட் முன்னால் நின்றதும் நீலா இறங்கினாள்.

"சொன்னது நினைவிருக்கட்டும், நீலா.... நாளைக்குப் பார்க்கலாம்'' என்ற மூர்த்தி ஆட்டோவைத் திருப்பச் சொன்னான்.

உள்ளே நுழைந்த நீலாவுக்கு ஓர் ஆச்சர்யம் காத்திருந்தது.

மணி பதினொன்று அடித்தும் சேது தூங்காமல் ஒரு புத்தகத்தில் மூழ்கியிருந்தான்.



"என்னய்யா விவரம் புரியாத ஆளா இருக்கியே! எல்.கே.ஜி. ஸீட் வேணும்னா ஐயாயிரம் டொனேஷன் கொண்டா, போ! Eye டொனேஷனுக்கெல்லாம் ஸீட் தர முடியாது!"

— வெ. ராஜாராமன்

"என்ன நீலா, உன் திருபர் வேலை எல்லாம் வெற்றிகரமாக முடிந்ததா?"

''முடிந்ததா? இன்னைக்கித்தானே இது ஆரம்பித்து இருக்கிறது.... டாக்டர் பிரபு பூச்சிக் கொல்லி மருந்து ஆராய்ச்சி செய்து வருகிறவர். நீங்க கூட செய்திகளில் படித்திருப்பீர்களே. அவர் பேசும் போது ஒரு புது மருந்து பூச்சிக் கொல்லியாக மட்டுமில்லாமல் வேறொரு காரணத்துக்கும் பயன் படலாம் என்று சொன்னார். அது என்ன என்று நான் கண்டுபிடிக்குவரை என் திருபர் வேலை முடியாதே'' என்று சேதுவின் அருகில் உட்கார்ந்தான்.

"டாக்டர் பிரபு ஆராய்ச்சி செய்த பூச்சிக் கொல்லி மருந்துகளைத்தானே நாங்கள் விற்கிறோம்."

"அப்படியா? என்ன மருந்து? எனக்கு விவரம் சொல்ல முடியுமா?" நீலாவின் உற்சாகம் சேதுவுக்கு சிரிப்பூட்டியது.

''விஞ்ஞானம், ஆராய்ச்சி, புது கண்டுபிடிப்பு, செய்தி, கட்டுரை.... இப்படியே இரவு முழுக்கப் பேசி கழித்து விட்டால் எப்படி நீலா?"

"அதுவும் சரிதான்... நீங்க சாப்பிட்டாச்சா?"

"இப்பவாவது கேக்கிறயே."

சமையலறைக்குப் போனவனிடமிருந்து சில நிமிடங்களில் 'ஹையா' என்ற மகிழ்ச்சிக் கூவல் வந்தது.

"சேது... ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்.... நீங்க சாப்பிட்டாச்சா?"

"இல்லை.... நீ வந்ததும் சேர்ந்து சாப்பிடலாம்னு இருந்தேன்."

கோயிலிலிருந்து திரும்பும் வழியில் சேது ஓட்டல் சாப்பாடு வாங்கி வந்திருந்தான். இனிப்பு வகைகள் வேறே. சேது தன் மீது வைத்துள்ள அன்பை நினைத்து அவள் உள்ளூர இறைவனுக்கு நன்றி சொன்னாள்.

'குடும்ப வாழ்க்கை எத்தனை இனிமையானது' என்ற எண்ணத்துடன் இருவருமே சாப்பிட ஆரம்பித்தனர். பேச்சு டாக்டர் பிரபுவின் ஆராய்ச்சியைப் பற்றித் தொடர்ந்தது.

பிரபு, சாந்தி, குழந்தைகள் இவர்களுடன் கார் அடையாறு நோக்கி போய்க் கொண்டிருந்தது. பிரபுதான் காரை ஓட்டிக் கொண்டிருந்தார். குழந்தைகள் பின் சீட்டில் தூங்கிக் கொண்டிருந்தனர்.

''என்ன சாந்தி எதுவுமே பேசாம வர்றியே!'' பிரபு பேச்சைத் தொடங்கினார்.

''உங்களுக்கு பாராட்டு தெரிவிக்க நிறைய பேர் வந்திருந்தாங்க... அதை நினைச்சு நான் ரொம்ப சந்தோஷமாயிருக்கேன். அமைச்சர் ரங்கதுரையே வந்தது இன்னும் சிறப்பு, இல்லையா?"

"அவர் விவசாயத் துறையையும் கவனிக்கிறார். அதனாலேதான் அவரை ஏற்பாடு செய்தாங்க போல இருக்கு."

"ஆமா, யார் இந்த பாராட்டு விழாவை ஏற்பாடு செய்தாங்க?"

"எனக்குத் தெரியாது சாந்தி!"

"என்னங்க இது.... பாராட்டு உங்களுக்கு. யார் உங்களுக்கு இதைச் செய்தாங்கன்னு தெரியலையா?"

"எனக்கு ஒரு 'இன்விடேஷன்' வந்தது... நிச்சயம் இதை ஏற்றுக் கொள்ளணும்னு அமைச்சர் ரங்கதுரையின் காரியதரிசி சொன்னார்... சரின்னு சொன்னேன்."

''அப்ப, ரங்கதுரையே இதை ஏற்பாடு செய்திருப்பார்னு நினைக்கிறீங்களா?"

"தெரியலையே...."

"நீங்க உண்மையிலேயே அப்பாவிதான்!"

"என்னைப் பொறுத்தமட்டில் பாராட்டு முக்கியமில்லை, சாந்தி. ஆனா, என் உழைப்புக்கெல்லாம் பக்கபலமாய் இருந்த உனக்கும், நம்ப குழந்தைகளுக்கும் இந்தப் பாராட்டு என்று நினைச்சேன்'' என்று பிரபு சொன்ன போது சாந்தி அவருடைய இடது தோளை மெல்லத் தொட்டாள்.

"நீங்க பேரும் புகழும் பெற்றால் அதில் எங்களுக்கும் பெருமை இல்லீங்களா?'' என்ற சாந்தியின் வலது கையை ஒரு முறை மெல்லப் பிடித்து விட்டார்.

"இருக்கட்டும்... நீங்க பேசும்போது புது மருந்து பூச்சி ஒழிப்புக்கு மட்டுமில்லாமல் வேறு ஒரு காரணத்துக்கும் பயன்படும்னு சொன்னீங்களே.... அது என்னங்க?"

"சாந்தி.... நான் பூச்சிக் கொல்லி ஒன்றின் தன்மைகளை விவரமாக ஆராய்ச்சி செய்து



வெற்றி பெறும் வகைகள், நீடித்துழைக்கும் நிறங்கள்
பாம்பேடையிங்
பள்ளிச்
சீருடைத்துணிகள்.
வெற்றி வாகை சூடி என்றும் முன்னணியில் உள்ள இத்துணிகள் கீழ் கண்ட சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன:
■ துவைக்க மற்றும் உடுக்க எளிதானது
■ நிறங்கள் மங்காது
■ ஒவ்வொரு சலவைக்குப் பின்னும் புத்தம் புதியது போல் தோன்றும்.
■ சுருக்கங்கள் ஏற்படாது.
■ உங்களுக்குத் தேவையான நிறங்களில் கிடைக்கிறது.
பாம்பே டையிங் பள்ளிச் சீருடை அணிவரிசையில் சூட்டிங்ஸ் மற்றும் தூய பருத்தி மற்றும் பாலியெஸ்டர் ப்ளெண்டுடன் கூடிய ஷர்ட்டிங்ஸ், பள்ளிப் பைகள் மற்றும் ஸாக்ஸ்களும் உட்பட்டதாகும்.
SEASONS/BD/487/TAM
பள்ளிச் சீருடைத்துணிகள்
பாம்பே டையிங்

வருகிறேன். பூச்சிக்கொல்லியை நெல், சோளம், போன்றவைகளுக்கு மட்டுமில்லாமல் பழச் சோலைகளிலும் பயன்படுத்துகிறோம்... சில நேரங்களில் இம் மருந்துகள் பழங்களில் மிகச் சிறிய அளவில் தங்கிவிடலாம். பழங்களைச் சாப்பிடுவோருக்கு மருந்துகள் சில நோய்களை உண்டு செய்யலாம் இல்லையா?"

"பூச்சிக்கொல்லி மனிதர்களையும் கொன்று விடுமா?"

"அந்த அளவு இல்லை, சாந்தி. ஆனால் சில பிரச்னைகளை ஏற்படுத்தலாம். என்ன மருந்து எந்தவித பிரச்னையை உண்டாக்கும் என்பது பற்றி மேல் நாடுகளில் நிறைய ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அவைகளைப் படித்த போது நான் ஆராய்ச்சி செய்துவரும் மருந்து ஒன்றைப் பற்றி கொஞ்சம் தெரிய வந்தது. அதைப் பற்றி மேலும் நான் மும்முரமாக பரிசோதனை செய்து வருகிறேன்."

"இந்த மருந்து வேறு எந்த காரணத்துக்காகப் பயன்படும்?"

"பரிசோதனைகள் முடியும் முன்னாலேயே முடிவுகளைச் சொல்வது விஞ்ஞானத்துக்கு சிறப்பில்லை; அது போன்றவர்கள் என்றுமே விஞ்ஞானிகளாக முடியாது."

"நான் சாதாரணமாகக் கேட்டேன்."

"அது எனக்குத் தெரியுது சாந்தி... ஆனால் நீ கேட்டதுக்கு பதில் சொல்ல இன்னும் பல மாதங்கள் ஆகும்... என் பரிசோதனைகள் முடியவில்லையே."

"உங்களுடன் ஆராய்ச்சிக்கு உதவும் டாக்டர் பாலுவும் டாக்டர் சாலமனும் இதில் பங்கு எடுத்துக் கொள்கிறார்களா?"

"பாலு, சாலமன் இரண்டு பேரும் கடுமையான உழைப்பாளிகள்தான். நான் சொல்லும் எந்தப் பரிசோதனையையும் முறைப்படி நேரத்தில் முடித்துத் தருகிறார்கள். அதனால்தானே என்னால ஒரே சமயத்தில் நாலு, ஐந்து என்று பரிசோதனைகளை ஏற்றுச் செய்ய முடிகிறது."

"நீங்க சொன்ன அந்த மருந்தின் பரிசோதனைகளில் அவர்களுக்கும் பங்கு உண்டா?"

"உண்டு.... ஏன் கேட்கிறாய்?"

"சும்மாத்தான் கேட்டேன்" சாந்தி சமாதானம் சொன்னாள். அவள் மனசில் ஒரு உளைச்சல். 'பாலுவும் சாலமனும் இவரை எப்படியும் பின்னுக்குத் தள்ளணும்னு நினைக்கறாங்கன்னு இவரே சொல்லியிருக்கிறாரே. ஒருவேளை இவருடைய புது கண்டு பிடிப்புகளை இவரிடமிருந்து பாலுவும், சாலமனும் எடுத்துத் தங்களுடையதுன்னு சொல்லிட்டா....' என்று அவளால் எண்ணாமலிருக்க முடியவில்லை.

கார் வீட்டு முன்புறத்தில் வந்து நின்றது. சாந்தி பெண்ணைத் தூக்கிக் கொண்டாள். கதவைத் திறந்து உள்ளே குழந்தைகளைப் படுக்கையில் விட்டுவிட்டு இருவரும் சிற்றுளத்துக்கு வந்தார்கள்.

"சாந்தி எனக்கு ஒரு கப் டீ போட்டுக் கொடு. நான் கொஞ்சம் ஆராய்ச்சிக் குறிப்புகளைப் படிக்கணும்... நாளைக்குப் புது பரிசோதனைகள் ஆரம்பம்."

பிரபு அன்று வந்த தபால்களைப் புரட்டினார். எதுவும் முக்கியமாகத் தெரியவில்லை. வழக்கமானவைதான்.

சாந்தி கையில் டீ கப்புடன் வந்தாள்.

"உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேனே...."

"என்ன?"

"இன்னக்கி பகல் மூணு மணி அளவிலே மாலதின்னு ஒரு பெண் இங்கே வந்தாள். உங்களைப் பார்க்கணும்னு சொன்னாள்."

"மாலதியா?" பிரபு சாந்தியைப் பார்த்துக் கொண்டே பேசினார்.

"மாலதிதான்... என்னைவிட ஒரு பிடி உயரம். கொஞ்சம் கலர் கூட... . சுமார் முப்பத்திரண்டு வயசு இருக்கும்."

"நல்லா கவனிச்சிருக்க போல இருக்கே?"

"கவனிக்காம இருக்க முடியுமா? உள்ளே வந்து என் கூட அரை மணி நேரம் பேசிக்கிட்டு இருந்தாளே."

"எதுக்காக வந்தாளாம்?" ஒரு ஜர்னலைப் புரட்டிக் கொண்டே பிரபு கேட்டார்.

"உங்கள் ஆராய்ச்சிக் கூடத்தில் ஏதாவது வேலை இருக்கான்னு கேட்க வந்தாளாம்."

"அதுக்கு அங்கேதானே வரணும்... வீட்டுக்கு எதுக்கு வரணுமாம்?" என்று சாந்தியைப் பார்த்தார் பிரபு.

"நானும் அதையேதான் அவகிட்ட கேட்டேன். அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுமா?"

"என்ன சொன்னா?"

"நீங்கதான் அவளை வீட்டுக்கு வரச் சொல்லி இருந்தீங்களாம். இந்த 'பயோ-டேட்டா'வை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாள்."


அதை பிரபு வாங்கிப் பிரித்தார். படித்தார்.

மாலதி எம்.எஸ்ஸி. - ஒரு கல்லூரியின் பெயர் போட்டிருந்தது. மாலதி... மாலதி.. யார்... அந்த மாலதியா? அடக்கடவுளே! பிரபுவுக்கு வியர்த்துக் கொட்டியது.

(தொடரும்)

நிறம் மாறும் பூக்கள்

துளசி என்கிற நான், பாலாமணி, ஜெயந்தி மூவரும் காலேஜின் 'த்ரீ மஸ்கடியர்ஸ்' என்று அழைக்கப்பட்டோம். சந்தேகமில்லாமல் பாலாதான் ராணி. மூன்று பேரும் முதலாம் வருஷம் கல்லூரியில் சேர்ந்தபோது எங்களுக்கு ஹாஸ்டலில் ஒரே அறை ஒதுக்கப்பட்டிருந்தது. சம்பிரதாயமான அறிமுகங்கள் முடிந்த போது பாலாமணியும் ஜெயந்தியும் எனக்கு சாதாரணப் பெண்கள் போலத்தான் தோற்றமளித்தனர். தான் வித்தியாசமானவள் என்று முதல் வாரத்திலேயே நிரூபித்தாள் பாலா. இப்போது தொலைக்காட்சியில் பிரமாதப்படும் வார்த்தை விளையாட்டு. அப்போது கல்லூரி விழாக்களில் ரொம்ப பிரபலம். நாங்கள் சேர்ந்த ஒரு வாரத்திலேயே ஏதோ கல்லூரி விழாவில் வார்த்தை விளையாட்டுப் போட்டி நடந்தது. கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் ஒரு நிமிடம்



தொடர்ந்தாற்போல பதில் சொல்ல வேண்டும். ஆம் அல்லது இல்லை என்று சொல்லக் கூடாது. சில நொடிகளுக்கு மேல் மௌனம் கூடாது. ஒரே சொல்லை மூன்று முறைக்கு மேல் பயன்படுத்தக் கூடாது. இவைதான் போட்டியின் விதிகள். கேள்விகளைக் கேட்டுத் திணறடித்தவன் சீனியர் மாணவன் மனோஹர். போட்டியாளர்களை அவன் மடக்கிய விதத்தில் யாரும் பத்து நொடிகள் கூடத் தாக்குப்பிடிக்காமல் திணறினார்கள். அனுபவம் வாய்ந்த சீனியர் மாணவிகள் மேடைக்குப் பக்கத்தில் கூட போகாமல் நின்றிருக்க, அப்போதுதான் கல்லூரியில் சேர்ந்திருந்த பாலாமணி மேடையேறவும் எனக்கு பயத்தில் நா உலர்ந்து போனது. காகித அம்புகளும் விசில் சத்தமும் வரவேற்க மைக்கைப் பிடித்தாள்.

'நீங்கள் சமீபத்தில் பார்த்த சினிமா எது?' மனோஹர் கேள்வியை ஆரம்பித்தான். 'நீ நேற்று சேர்ந்த கண்டைக்காய்' என்ற அலட்சியமும் ஆணவமும் கேள்வியில் இருந்தது. 'நம்ம ரெண்டு பேரும் தானே போனோம். அதுக்குள்ளே மறந்துட்டீங்களா?' என்று பதில் சொன்னாள் பாலா! அரங்கம் முழுதும் ஸ்தம்பித்து, பின் கைதட்டி ஓய்ந்த பின்பும் கூட சமாளித்துக் கொண்டு அடுத்த கேள்விக்குப் போக மனோஹருக்கு முப்பது வினாடியாயிது. பாலா எளிதில் வென்றாள். கல்லூரியின் ஜான்ஸி ராணியானாள்.

ஜெயந்தியும் சாதாரணமானவளல்ல. ரொம்ப வசதிக்குறைவான குடும்பத்தில் இருந்து வந்து எவ்வளவோ கஷ்டங்களுக்கு நடுவில் படிப்பவள். படிக்கிற காலத்திலேயே ஒரு பத்திரிகையின் பார்ட் டைம் நிருபராக வேலை பார்ப்பவள்.


பாலா வகுப்பில் இருக்கும் நேரம் மிகக் குறைவே. கல்லூரி விழாக்கள், பட்டி மண்டபங்கள், பேச்சுப் போட்டிகள், கல்லூரித் தேர்தல் என்று சதா வகுப்புக்கு வெளியேதான் அவள் வேலை. இது போதாது என்று பத்திரிகையில் வந்த ஆபாச ஜோக், சினிமாவில் கல்லூரிப் பெண்களைத் தாக்கிய ஆபாச வசனம் என்று எல்லாவற்றையும் கண்டித்து ஊர்வலம், கமிஷனருக்கு மனு என்று முன்னால் நிற்பாள்.

நான் ஜெயந்திக்கும் பாலாவுக்கும் பரம விசிறி. வகுப்பில் அவர்களுக்காய் நோட்ஸ் எடுப்பது, பிராக்ஸி கொடுப்பது, இடதுகையால் அசைன்மெண்ட் எழுதுவது எல்லாம் நான்தான். அவர்களுக்கு இதற்கெல்லாம் நேரம் ஏது? வெறும் ரூம் மேட்ஸ் ஆக இருந்த எங்களை இணைத்தது - எங்கள் மூவருக்கும் பொதுவாக இருந்த ஒன்று - ஆண் எதிர்ப்பு. ஹார்ட் கோர் ஃபெமினிஸம். சின்ன வயசில் வீட்டை விட்டு ஓடிப் போன அப்பாவால் எனக்கும், பிளஸ் டூ படிக்கையில் காதல் என்று சொல்லி ஏமாற்றிய ஒரு பையனால் ஜெயந்திக்கும் ஆண்கள் என்றாலே வெறுப்பு. பாலாமணி தனிப்பட்ட காரணங்கள் ஏதுமின்றி கொள்கை ரீதியாய் மேல் ஷாவினிஸத்தை எதிர்ப்பவள். காலம் காலமாய் பெண் ஆணால் நசுக்கப்பட்டவள் என்ற தார்மீகக் கோபம். இன்னமும் கூட தகப்பனாய், காதலனாய் அல்லது கணவனாய் ஆண், பெண் மேல் ஆதிக்கம் செய்கிறானே என்ற கொதிப்பு. ஈவ் டீஸிங், வரதட்சணை, கற்பழிப்பு என்று ஆண்களின் வக்ரத்திற்கு எத்தனை முகங்கள் என்ற

பாரதி பாஸ்கர்

வெறுப்பு. ஹாஸ்டலின் எல்லா அறைகளிலும் சட்டை போடாத கமல்ஹாசனும், ரவி சாஸ்திரியும், சில்வெஸ்டர் ஸ்டேலோனும் படம் படமாய்த் தொங்க, எங்கள் அறையில் இருந்த இரண்டே ஆண்கள் வெங்கடாஜலபதியும் சுப்ரமண்ய பாரதியும். ஹாஸ்டல் டீவியில் 'அத்தான், என்னைக் கைவிட்டுறாதீங்க' என்று தமிழ் சினிமா வசனம் கேட்கும் போது பாலாமணி குதிரை மாதிரி கனைத்துப் பழிப்புக் காட்ட, ஜெயந்தி விசில் அடிப்பாள். ஹாஸ்டலில் யாராவது ஒரு பெண் காதல் வசப்பட்டால் ஹாஸ்டலே விழாக் கோலம் பூணும். சம்பந்தப்பட்ட ஆண், காதலியின் தோழிப் பட்டாளத்திற்கு ட்ரீட் கொடுக்க வேண்டும் என்பது எழுதாத விதி. காதலர்கள் சந்திக்க, அடிக்கடி அவர்கள் போனில் பேசுவதை வார்டன் மோப்பம் பிடிக்காமல் இருக்க அல்லது அந்தப் பெண் இரவில் நேரம் கழித்துத் திரும்பினால் சுவர் ஏறிக் குதிக்க மொத்த ஹாஸ்டலும் உதவி செய்யும். என்ன பேசினான், எங்கே முத்தமிட்டான் என்று அத்தனை





''எம்.எல்.ஏக்கள் எல்லாம் ஏன் தோளில் துண்டு போட்டு சட்டமன்றத் துக்குப் போறாங்க?''

''வேஷ்டியை யாராவது உருவிட்டாங்கன்னா துண்டை எடுத்துக் கட்டிக் கிடலாம்லா, அதுக்குத்தான்!''

- பாளை பசும்பொன்

பேரும் சம்பந்தப்பட்ட பெண்ணை ஓயாமல் துளைப்பார்கள். நாங்கள் மூவர் மட்டும் இந்தக் கொண்டாட்டங்களில் ஒட்டாது தனியே நிற்போம். 'என்ன, அடிமைகள் லிஸ்ட்ல சேர்ந்தாச்சா?' என்று ஜெயந்தி மட்டும் நக்கலாய் துக்கம் விசாரிப்பாள்.

பாலாமணி எந்தக் கல்யாணத்திற்கும் போவதில்லை. பட்டுப் புடவை, நகைகள், பூ, பொட்டு, காதல், கல்யாணம் எல்லாமே அவளைப் பொறுத்தவரை அடிமைத்தனத்தின் சின்னங்கள். கல்யாணம் ஆன பிறகு புருஷன் பெயரை கூட ஒட்டவைத்துக் கொள்வது அவளுக்கு சுத்தமாய்ப் பிடிக்காத விஷயம். அவன் கலாட்டா செய்தான். இவன் கலாட்டா செய்தான் என்று ஹாஸ்டலில் யாராவது வந்து அழுதால் உடனே பாலாமணி பிரின்ஸிபிடம் போய் அந்தப் பையனுக்கு வேட்டு வைப்பாள். ஃபயர் பிராண்ட் என்று முகத்திற்கு நேராகவும் பஜாரி என்று மறைவாகவும் விமர்சிக்கப்பட்டாள்.

படிப்பு முடியும் தறுவாயில் காலேஜிலேயே எனக்கு லேப் அஸிஸ்டெண்ட் ஆகவும், ஜெயந்திக்கு முழு நேர நிருபராகவும் பாலாமணிக்கு தொலைக்காட்சியில் ப்ரோக்ராம் எக்ஸிக்யூடிவ் ஆகவும் வேலை அமைய, வீடெடுத்து மூவரும் தங்கினோம். கல்யாணம் ஆகாத பெண்களுக்கு வீடில்லை என்று சொல்ல வந்த வீட்டுக்காரர், பாலாமணியைப் பார்த்ததும் 'உங்களை டீவி பட்டிமண்டபத்தில் பார்த்திருக்கேனே' என்று வீடு கொடுத்தார். நினைத்தால் இரவு ஒன்பது மணிக்குக் கூட வெளியே போய் சாப்பாடு, நைட் ஷோ, காலை எட்டு வரை தூக்கம், தோன்றினால் துணி துவைப்பது இல்லாவிட்டால் அப்படியே வீடெங்கும் போடுவது என்று திகட்டத் திகட்ட சுதந்திரமாய் இருந்தோம். பாலாமணியின் பெண் உரிமை மாநாட்டுப் பேச்சுகளுக்கும், ஜெயந்தியின் ஆண் ஆதிக்க எதிர்ப்புக் கட்டுரைகளுக்கும் மூவருமாய் தயார் செய்வோம். சலனமில்லாத இந்த வாழ்வில் முதல் தடங்கல் ஜெயந்தியினால் வந்தது.

ஒருநாள் அதிசயமாய் ஐந்து மணிக்கே வீட்டிற்கு வந்தாள் ஜெயந்தி. 'என்னடி அதிசயம்?" என்றேன்.

"உன்னோட பேசணும்" என்றாள்.

"கொஞ்ச நாளுக்கு முன்னால நான் தொழிலதிபர் சூர்யகுமாரை இண்டர்வ்யூ செய்து பத்திரிகையில் எழுதியிருந்தேன், படிச்சியா?"

நானும் படித்திருந்தேன். கட்டுரை நன்றாக வந்திருந்தது.

"ஆமாம். படிச்சேன்!"

"அவர் இன்னைக்கி என்னைப் பார்க்க ஆபீஸுக்கு வந்திருந்தார்."

"என்ன, கட்டுரைக்கு தாங்க் பண்ணவா?"

''இல்லை. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேக்க வந்தார்."

"அடி செருப்பால, நாய்" என்றேன்.

''ஏண்டி அவரைத் திட்டறே. அவர் அபிப்ராயத்தை அவர் சொன்னார். அவருக்கென்ன, பணக்காரர். அவர் நினைச்சா நான் வேலை செய்யற பத்திரிகையையே விலைக்கு வாங்கி என்னை எடிட்டராகவே ஆக்க முடியும்!"

என் கண்களைத் தவிர்த்தபடி பேசும் ஜெயந்தியை நான் மௌனமாய்ப் பார்த்தேன். 'இப்ப பாலாமணிகிட்ட சொல்ல வேண்டாம். அவ வேற குழப்புவா' என்றாள்.

நகரை கிடுகிடுக்க வைத்த ஆடம்பரக் கல்யாணமாக ஜெயந்தியின் திருமணம் நடந்த போது பாலா வரவில்லை. நான் மட்டும் போய் வந்தேன். ஹை சொஸைட்டியின் வழக்கமான சோம்பேறி மனைவி ஆகிப் போனாள் ஜெயந்தி என்று தெரிந்து கொள்ள எனக்கும் பாலாவுக்கும் ஆறு மாதமானது. த்ரீ மஸ்கடியர்ஸ் இரண்டாகியது.

அடுத்த பலி நான். அம்மா, என் மாமா பையன் அஷோக்கை மணக்கச் சொன்னாள்.

என் ஆண் வெறுப்புக்குக் காரணமான என் அப்பாவால் அடித்து விரட்டப்பட்டு, போராடி எங்களை வளர்த்த அம்மாவின் அழுகையா, கஷ்டத்தில் அவளுக்கு உதவி செய்த என் மாமாவிடம் நான் பட்ட நன்றிக் கடனா, 'உனக்கு ஆம்பிளைன்னா பிடிக்காதா? என்னைக் கூடவா' என்று கேட்டு அட்டகாசமாகச் சிரித்த அஷோக்கின் மேல் வீசிய ஆஃப்டர் ஷேவ் லோஷன் மணமா

தூய்மையான பண்ணைப் பால்

இலவசமாக

தினந்தோறும், அடுத்த 10 ஆண்டுகளுக்கு பெறுவது எப்படி.......



இன்று பாலின் விலை என்ன என்பது உங்களுக்குத் தெரியும்... இனிவரும் காலத்தில் அது இன்னும் எவ்வளவு உயரும் என்பதை யாரால் சொல்ல முடியும்? ஆனால் **பாலுக்காக** நீங்கள் பெரும் தொகை செலவு செய்ய வேண்டியிருப்பது நிச்சயம். ★ இதில் உங்கள் பிரச்னையைத் தீர்க்க உதவுகிறது **காமதேனு**. இது ஓர் உயர் தொழில்நுட்பப் பால் பண்ணை ஆகும். பால் மற்றும் பணம் - இரண்டிலுமே உங்கள் தேவைகளை நிறைவேற்ற இது பொருத்தமான திட்டங்களை வழங்குகிறது. ★ **அம்ருத் யோஜனா திட்டம்** - இதில் ரூ. 11,000 முதலீடு செய்யுங்கள். அடுத்த 10 ஆண்டுகளுக்கு உங்களுக்கு **உயர்ந்த தரமான, தூய்மையான, புத்தம் புதிய பண்ணைப் பால் - இலவசமாக - ஒவ்வொரு நாளும் ஒரு லிட்டர்** கிடைக்கும். **இப்படி பாலாக பெறும் பொழுது உங்கள் முதலீட்டிற்கு வருவாய் 36%** க்கு மேலும் இருக்கும். நீங்கள் 'வருமானத்தை ரொக்கமாகப்' பெற விரும்பினாலும் அது சாத்தியமே. பத்தாவது ஆண்டின் இறுதியில் உங்கள் அசல் தொகை திருப்பியளிக்கப்படும். ★ அது மட்டுமல்ல... **NMSS-II, ஆரோக்கிய யோஜனா மற்றும் காஃப் திட்டங்களையும்** வழங்குகிறது காமதேனு. இவை உங்கள் தேவைக்கு ஏற்ற வகையிலும், எளிதில் முதலீடு செய்யும் வகையிலும் திட்டமிடப் பட்டுள்ளன. முக்கியமாக, காமதேனு திட்டங்கள் எல்லாமே, எளிதில் ரொக்கமாக்கும் வசதியைக் கொண்டவை. மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

KADF

காமதேனு அக்ரோ & டெய்ரி ஃபார்ம்ஸ் லிட்.,
குணா பில்டிங், 304-305, மவுண்ட் ரோடு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 456565, 452080.

காமதேனு - இங்கே பாலைப் பணமாய்க் கறக்கலாம்.

APARNA/KADF/738/95

அல்லது எல்லாம் சேர்ந்த ஏதோ ஒன்றா, நான் சரியென்று சொல்லி விட்டேன்.

பத்திரிகை வரும் வரை நான் பாலாவிடம் சொல்லவில்லை. பயந்து பயந்து விஷயத்தைச் சொன்னதும் பாலா தன் பெரிய கண்களால் என்னை நிதானமாய்ப் பார்த்தாள். சொல்ல முடியாத வேதனை அந்த முகத்தில் தெரிந்தது. தன் கொள்கையை விட்டு என் கல்யாணத்திற்கு வந்திருந்தாள் பாலா. 'இனிமே அங்க தனியா எப்படி இருப்ப பாலா? உன் நண்பர்கள் யாரையாவது கூட வந்து இருக்கச் சொல்லு' என்றேன்.

"சீ, நாம இருந்த இடத்திலே வேற ஒருத்தரா..." என்றாள் பாலா.

புது வீடு அமைக்க, அஷோக்கிற்கு பிடித்த விதமாய் சமையல் செய்ய, அவரின் சட்டைக்கு பித்தான் தைக்க என்று என் வாழ்வு வேறுவிதமானது. ரொம்ப நாட்களுக்குப் பின் பாலாமணி ஃபோன் செய்தாள். பாலாமணியே ஃபோன் செய்து சொல்லவும் தான் நான் நம்பினேன். வேறு யாரும் சொல்லியிருந்தால் நம்பியிருக்கவே மாட்டேன். பாலாமணிக்குக் கல்யாணமாம். கூட வேலை செய்யும் பிரகாஷாம். நாலு நாளில் திருப்பதியில் கல்யாணமாம்.

கல்யாணம் நடந்த சமயம்தான் எனக்கு பிரக்னென்ஸி உறுதிப்பட்டதால் நான் கல்யாணத்திற்குப் போக முடியவில்லை. பாலாவைப் பார்க்க அவளின் புது வீட்டிற்குப் போனபோது வாசலில் பிரகாஷ் - பாலாமணி பிரகாஷ் என்ற பெயர்ப் பலகை வரவேற்றது. பாலாவும் பிரகாஷும் தேன் நிலவுக்காய் கோடைக்கானல் போயிருந்ததால் வீட்டில் இருந்த உறவுக் கூட்டம் சொன்னது. மெதுவாய் விசாரித்ததில் நடந்தது வழக்கமான காதல் கல்யாணம்தான். அலுவலகத்தில் பக்கத்து பக்கத்து மேசை. நிகழ்ச்சிகளுக்காய் ஒன்றாய் பயணம் அடிக்கடி. பிரகாஷ் கேட்க, பாலாமணி ஒத்துக் கொண்டாள். ஒரே ஜாதியாய் போனதில் உறவுகளுக்கு சந்தோஷம். "வேலை செய்யட்டும், எழுதட்டும். ஆனால் மேடையிலே போய் பேசறது வாணாம்னுட்டு மருமககிட்ட சொல்லிட்டேன். உன் சிநேகிதி ஒத்துப்பாளில்ல?" என்ற பிரகாஷின் தந்தையிடம் "நிச்சயமா" என்றேன். ஹாலில் பெரிது பண்ணி மாட்டியிருந்த படத்தில் தலை நிறைய பூவோடும் போனஸாய் நெற்றி வகிட்டில் குங்குமத்தோடும் தோற்றமளித்த பாலாவைப் பார்த்தபடியே.

திரும்பி வருகையில் என்னுள் கேள்விகள் புரண்டன. என்ன ஆயிற்று பாலா? எப்படி இந்த மாற்றம்? பரிபூரண சரணாகதி? ஜெயந்தியும் நானும் விட்டு விலகியதும் கூட்ட தனிமையா? எதிர்கால முதுமை பயமா? பயலாஜிகல் தேவைகளா? அல்லது எல்லாப் புரட்சிக்காரர்களையும் போல பாலாவும் லட்சியங்களை விற்று வாழ்க்கையை வாங்கி விட்டாளா? பாலா, இருபது வயதில் புரட்சி பேசி முப்பது வயதில் பணத்தைத் துரத்தும் சில ஆண்கள் போல உன் ஃபெமினிஸமும் தாற்காலிகப் புரட்சியா? அல்லது பரிபூரணமாய் ஆண்கள் மேல் வெறுப்பு என்பது குறுகிய கண்ணோட்டம் என்று தெரிந்து, உன் பார்வையை விசாலப் படுத்திக் கொண்ட உன் முதிர்ச்சியின் அடையாளமா இந்த முடிவு? பாலா, உன்னைக் கேட்டால் என்ன சொல்வாய்? பிரகாஷ் என்னை மாற்றி விட்டார் என்று நாணிக் கண் புதைப்பாயா அல்லது உன் வழக்கமான விவாதத் திறமையோடு நீ ஒன்றும் மாறவில்லை என்று சாதிப்பாயா... இரண்டுமே போலியாகத்தான் இருக்கும் பாலா...

வீட்டுக்கு வந்ததும் எனக்கு ரொம்ப தனிமையாய் இருந்தது. ஜெயந்திக்கு ஃபோன் செய்தேன். உலக டூர் போயிருக்கிறாளாம். எப்போது திரும்புவாள் என்று தெரியாதாம். எனக்கு திடீரென்று ஞாபகம் வந்தது - ஹாஸ்டலில் பரீட்சைகள் முடிந்தும் பிரிய மனமில்லாமல் ஊருக்குப் போவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகும் அந்த பாலா, துளசி, ஜெயந்திக்கும் இன்று வகிட்டுக் குங்குமத்தோடு தோன்றும் பாலா, கணவனுக்குக் காத்திருக்கும் துளசி, உலக டூர் போயிருக்கும் ஜெயந்தி இவர்களுக்கும் கொஞ்சமும் சம்மந்தமில்லை என்று. எங்களின் மாற்றம் வீழ்ச்சியா, வளர்ச்சியா அல்லது வாழ்க்கைச் சட்டமா? கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்தேன் - விளக்கேற்ற, வீடு பெருக்க, உலை வைக்க, துணி மடிக்க...

"அந்தப் பையன் நல்லாத்தானே படிச்சான். பின்ன ஏன் பெயிலாயிட்டான்?"

"ரஜினி ஸ்டைல்ல, 'நான் ஒரு கேள்விக்கு பதில் எழுதினா நூறு கேள்விக்கு எழுதின மாதிரின்னு' ஒரு கேள்விக்கு மட்டும் பதில் எழுதிட்டு வந்திருக்கான்!"


— ராஜா திருவேங்கடம்



ரவிகுமாரின் நிலைமை தலைகீழான கதை!



• புருஷ லட்சணம் படப்பிடிப்பில்....



தொடர்ந்து வெற்றிப் படங்களைத் தந்து கொண்டிருக்கும் கே. எஸ். ரவிகுமார் (சமீபத்தில் நாட்டாமை), ஒரு காலத்தில், ராசி யில்லாத உதவி இயக்குநர் என்று முத்திரை குத்தப் பட்டவர் என்றால் நம்ப முடிகிறதா?

"அது நிஜம்தான்" என்கிறார் ரவிகுமார்.

"நான் பணியாற்றிய படங்களில் பூஜையுடன் நின்று போனது, ஓரிரு ஷெட்யூலுடன் பெட்டிக் குள் முடங்கியது, தோல்வி யடைந்தது, சுமார் ஓட்டம் என்று பலவும் உண்டு. தெலுங்கு, தமிழ் என்று சுமார் அரை டஜன் டைரக் டர்களிடம் உதவி இயக் குநராகப் பணியாற்றி இருக்கிறேன். பட்டியலில் ராமராஜன், கே. ரங்கராஜ், விக்கிரமன், நாகேஷ் -(ஆமாம்! நாகேஷ் 'பார்த்த ஞாபகம் இல் லையோ' என்று ஒரு படத்தை இயக்கியிருக்கிறார்) ஆகியோர் அடக்கம். எனக்கும் விழா எடுத்து ஷீல்டு கொடுக்க நான் பதினோரு வருடங்கள் காத்திருந்தேன்."

இன்றைக்கு, 'ராசியில்லாத டைரக்டரின்' நிலைமை தலை கீழ். கே.எஸ். ரவிகுமாரின் இயக் கத்தில் ரஜினிகாந்த் நடிக்கப் போகிறார். தயாரிப்பாளர் : மோதிரக்கை கே. பாலசந்தர்.

"புதுவசந்தம் படத்திற்கு உதவி டைரக்டராய்ப் பணி புரிந்து கொண்டிருந்தபோது, தயாரிப்பாளர் ஆர்.பி. செளத்ரி யிடமிருந்து அழைப்பு வந்தது. கன்னடத்தில் வெற்றிபெற்ற ஒரு கிரைம் சப்ஜெக்டைச் சொல்லி, தமிழ் திரைக்கதை எழுதித் தரச் சொன்னார். எழுதிக் கொடுத்த ஸ்கிரிப டைப் பார்த்துவிட்டு, படுகேஷுவலாக, 'நீங்களே டைரக்ட் பண்ணிவிடுங்கள்' என்ற போது எனக்கு இன்ப அதிர்ச்சி.

"புரியாத புதிர் என்ற பெயரில் அந்தப் படத்தை எடுத்து முடித்தபின், இன்னொரு பாடலைப் படத்தில் சேர்க்கலாம் என்று அபிப் பிராயப்பட்டார் செளத்ரி. காலையில் பாடல் பதிவு முடிந்ததும், 'எப்போ பாடல் ஷூட்டிங் வெச்சுக்கலாம்?' என்று கேட்டார். 'ஷூட்டிங் கெல்லாம் வேண்டாம், இந்தப் பாடலுக் கான காட்சியை இரவு உங்களுக்குப் போட் டுக் காட்டுகிறேன்' என்றேன். அவருடைய முகத்தில் அவநம்பிக்கை ரேகை. ஹீரோ யினின் சோக குளோஸ்அப் காட்சிகள் ஏற்கெனவே நிறைய எடுத்து வைத் திருந்ததால், அதைப் பயன்படுத்தி, பாடலுக்குரிய காட்சிகளை அமைத்து, அன்று மாலை தயாரிப்பாளருக்குப் போட்டுக் காட்டியபோது, என்னை ரொம்பப் பாராட்டினார்."

"உங்களுடைய சக்ஸஸ் ஃபார் முலா?"

"கடும் உழைப்பு, நல்ல நேரம் இரண்டையும் மிக்ஸ் செய்து, சம விகி தத்தில் பிடிவாதம் பிளஸ் விட்டுக் கொடுக் கும் தன்மை இவற்றை இடத்துக் கேற்ப புத்திசாலித்தனமாகச் சேர்த்துச் சமைத் தால், கிடைக்கிற சுவையான உணவுதான் 'வெற்றி'! இந்த ரெசிபியைக் கண்டறிய நான் ரொம்பக் கஷ்டப்பட்டிருக் கிறேன்."

குடும்பத்தில் மற்றவர்கள் எல்லோரும் பிசினஸ், மருத் துவம், சி.ஏ. என்று இருக்கும்போது, இவர் மட்டும் சினிமா



"உன் கணவர் உன்னைத் தூக்கி எறிஞ்சு பேசறாரா? நம்ப முடியலையே?"

- லலிதா செல்லப்பா

வில் வந்தது எப்படி?

"ஜெயின் காலேஜில் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு சிங்கப்பூர் இந்தியரின் தொடர்பு கிடைத்தது. படிப்பை முடித்து விட்டு, அவருக்காகத் தமிழ்ப் படங்களை வாங்கி, மலேசியா, சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்தேன். பிசினஸ் படுடல். இப்படி ஆரம்பித்த சினிமா அறிமுகம், என் அப்பா சில தயாரிப்பாளர்களுக்கு ஃபைனான்ஸ் செய்யும் பிசினஸிலும் இருந்ததால், என் ஆர்வத்தைத் தூண்டியது. என் அப்பாவிடம் ஃபைனான்ஸ் வாங்கிவிட வேண்டும் என்பதற்காகவே, 'படத்தை நீங்களே டைரக்ட் செய்யுங்கள்' என்று என்னிடம் ஆசை காட்டியவர்கள் பலர். ஆனால் நான் அந்தத் தவறைச் செய்யவில்லை. முறையாக, உதவி டைரக்டராய்ப் பணியாற்றி, தொழில் கற்றுக் கொண்டு, அப்புறம் டைரக்ட் செய்வது' என்று தீர்மானித்துக் கொண்டேன்."

டைரக்டர் ரவிகுமார் நடிகரானது எப்படி?

"ஸ்டண்ட் மாஸ்டர், நடிக்க வேண்டிய ஒரு சண்டைக் காட்சி எடுக்கப்பட இருந்தது. அவருக்கோ வேறு ஒரு படப்பிடிப்பில் வேலை இருந்ததால், தம் அசிஸ்டெண்ட்டை அனுப்பி வைத்தார். எனக்குத் திருப்தியாய் இல்லை. வேறு யாரும் கிடைக்காத சூழ்நிலையில் நானே நடிப்பது என்று முடிவு செய்தேன்."

"தொடர்ந்து வில்லத்தனமான ரோல்களிலே நடிக்கிறீர்களே!"

"என் மூஞ்சிக்கு ஹீரோவாகவா நடிக்க முடியும்?" என்று சிரித்தபடி கேட்கிறார்.

"ரஜினி படத்தை நான் டைரக்ட் செய்யப் போவது தீர்மானமானவுடன் ரஜினி சாரே என்னைக் கேட்டார். 'நான் நடிக்கப் போவதில்லை' என்று சொல்லிவிட்டேன்."

"என்ன காரணம்?"

"நடிக்கும்போது, டைரக்ஷனில் என்னால் முழுமையாய்க் கவனம் செலுத்த முடியவில்லை. இதை நான் உணர்ந்தாலும், தயாரிப்பாளர்களுடைய வற்புறுத்தல், என் ஆழ்மனத்தில் என்னையும் அறியாமல் இருந்து கொண்டிருக்கிற நடிப்பு ஆசை - இவை என்னை நடிக்க வைக்கின்றன."


"உங்களுடைய ஸ்டிராங் பாயிண்ட் திரைக்கதை இல்லையா?"

"ஆமாம்; திரைக்கதையைப் பக்காவாய்த் தீர்மானம் பண்ணியபின்தான் நான் நடிக, நடிகையரைப் பற்றி யோசிப்பேன்."

"இதுவரை அதுசரி! அடுத்து வரும் ரஜினி படத்திற்கு அது எப்படி சாத்தியம்?"

"இதுவரைக்கும் கதைக்காக ஆர்ட்டிஸ்ட் என்று இருந்த நிலை மாறி, இப்போது, ரஜினி சாருக்காகக் கதை என்ற நிலையில் நான் இருப்பது நிஜம்தான். ஆனால், அதுவும் வித்தியாசமானதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுவேன்."

சந்திப்பு : **எஸ்.சந்திரமௌலி**



"புதுசா சேர்ந்த அட்டெண்டர் பையனை ஏன் டாக்டர் விரட்டி அனுப்பிட்டீங்க?"

"யாராவது டோக்கன் கேட்டால், 'ஆமா... இங்கே கூட்டம் பொரளுது... இதுக்கு டோக்கன் ஒண்ணுதான் குறைச்சல்'னு முணுமுணுத்தா கோபம் வராதுங்களா?"

- சீர்காழி வி. ரேவதி

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

21. வஸந்தத் தீவில்

ஒரு வார காலமாக விக்கிரமன் நரகத்திலிருந்து சுவர்க்கத்துக்கும் சுவர்க்கத்திலிருந்து நரகத்துக்குமாக மாறிக் கொண்டிருந்தான்.

நாலாபுறமும் பயங்கரமாகத் தீ கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கிறது. பார்த்திப மகாராஜா விக்கிரமனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "குழந்தாய்! உன்னுடைய ஜன்ம தேசத்துக்காக நீ இந்தத் தீயில் இறங்குவாயா?" என்று கேட்கிறார். அருகில் அருள்மொழி ராணி கண்ணும் கண்ணீருமாய் நிற்கிறாள். "இறங்குவேன், அப்பா!" என்று விக்கிரமன் துணிந்து விடை சொல்கிறான். தந்தையின் கைப்பிடி தளர்கிறது. விக்கிரமன் நெருப்பில் இறங்கிச் செல்கிறான்; உடம்பெல்லாம் கொதிக்கிறது; சுடுகிறது, வேகிறது; எரிகிறது. ஆனால் உணர்வு மட்டும் அப்படியே இருக்கிறது. "ஐயோ! இப்படி எத்தனை காலம் எரிந்து கொண்டிருப்பது? ஏன் உயிர் போகமாட்டேனென்கிறது? ஏன் உடம்பு அப்படியே இருக்கிறது?" என்று எண்ணி விக்கிரமன் துடிதுடிக்கிறான். திடீரென்று ஒரு குளிர்ந்த கை அவனுடைய எரியும் கரத்தைப் பற்றுகிறது; இன்னொரு குளிர்ந்த கை அவனுடைய கொதிக்கும் மார்பைத் தொடுகிறது. எரிகிற அந்தத் தீயின் நடுவில் செந்தாமரையையொத்த குளிர்ந்த முகம் ஒன்று தோன்றி அவனைக் கருணையுடன் நோக்குகிறது. சற்று நேரத்துக்கெல்லாம் அவன் அத்தீயிலிருந்து வெளியே வருகிறான். தன்னை அவ்விதம் கையைப் பிடித்து அழைத்து வந்த தெய்வப் பெண்ணுக்கு நன்றி செலுத்த அவன் விரும்புகிறான். ஆனால், அத் தெய்வப் பெண்ணைக் காணவில்லை.

விக்கிரமன் புலிக்கொடி பறக்கும் பெரிய போர்க் கப்பலில் பிரயாணம் செய்கிறான். கப்பலில் நூற்றுக் கணக்கான சோழ நாட்டு வீரர்கள் அங்குமிங்கும் உலாவுகிறார்கள். கப்பல் துறைமுகத்தை விட்டுக் கிளம்பிய போது பார்த்திப மகாராஜாவும் அருள்மொழி ராணியும் விக்கிரமனை ஆசீர்வதித்து, "வெற்றி வீரனாய்த் திரும்பி வா!" என்று வாழ்த்தி அனுப்பிய காட்சி அவன் மனக்கண் முன்னால் அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கிறது. திடீரென்று பெரும் புயலும் மழையும் அடிக்கின்றன. கப்பல் கவிழ்கின்றது. விக்கிரமன் கடல் அலைகளுடன் தன்னந்தனியாகப் போராடுகிறான். உடம்பு ஜில்லிட்டுப் போய்விட்டது. கைகால்கள் மரத்துவிட்டன. "இனித் தண்ணீரில் மூழ்கிச் சாக வேண்டியதுதான்" என்று தோன்றிய சமயத்தில் இந்திர ஜாலத்தைப் போல் ஒரு படகு எதிரே காணப்படுகிறது. படகில் பூரண சந்திரனையொத்த முகமுடைய பெண் ஒருத்தி இருக்கிறாள். எங்கேயோ, எப்போதோ, எந்த ஜன்மத்திலோ பார்த்த முகந்தான் அது. அந்தப் பெண் அவனுக்குக் கைகொடுத்துத் தூக்கிப் படகில் விடுகிறாள். அவள் முகமெல்லாம் நனைந்திருக்கிறது. அலைத்துளிகள் தெறித்ததனாலா, கண்ணீர் பெருகியதனாலா என்று தெரியவில்லை. அவளுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று விக்கிரமன் ஆசைப்படுகிறான். பேச முயற்சி செய்கிறான். ஆனால் பேச்சு வரவில்லை.




தொண்டையை அடைத்துக் கொள்கிறது.

விக்கிரமன் ஒரு கொடிய பாலைவனத்தில் நடந்து கொண்டிருக்கிறான். வெயிலின் கொடுமை பொறுக்க முடியவில்லை. கால் ஒட்டிக் கொள்கிறது. உடம்பெல்லாம் பற்றி எரிகிறது. நா வரண்டு விட்டது. சொல்ல முடியாத தாகம். கண்ணுக்கெட்டிய தூரம் மரம், செடி, நிழல் என்கிற நாமதேயமே கிடையாது. எங்கேயோ வெகு தூரத்தில் தண்ணீர் நிறைந்த ஏரி மாதிரி தெரிகிறது. அதை நோக்கி விரைந்து செல்கிறான். எவ்வளவு விரைவாகச் சென்றாலும் ஏரி இன்னும் தொலை தூரத்திலேயே இருக்கிறது. "ஐயோ! கானல்நீர் என்றும், பேய்த் தேர் என்றும் சொல்வது இதுதானா?" என்று நினைக்கிறான்; பிறகு அவனால் நடக்க முடியவில்லை. திடீரென்று கண் இருளுகிறது, சுருண்டு கீழே விழுகிறான். அந்தச் சமயத்தில் 'இவ்வளவு கஷ்டங்களையும் நமது பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு, சோழ நாட்டின் மேன்மையை முன்னிட்டுத் தானே அநுபவிக்கிறோம்!' என்ற எண்ணம் உண்டாகிறது. கீழே கொதிக்கும் மணலில் விழுந்தவனை யாரோ மிருதுவான கரங்களினால் தொட்டுத் தூக்கும் உணர்ச்சி ஏற்படுகிறது. யார் என்று பார்ப்பதற்காகக் கண்ணைத் திறக்க முயற்சி செய்கிறான். கண்கள் திறந்துதானிருக்கின்றன - ஆனால் பார்வை மட்டும் இல்லை. "ஐயோ! இந்தக் கொடிய வெப்பத்தினால் பார்வை இழந்து விட்டோமோ?" என்று எண்ணி மனம் வெதும்புகிறான். தொட்டுத் தூக்கிய கரங்கள் அவனை மிருதுவான பஞ்சணை மெத்தையின் மேல் இடுகின்றன. வாயில் அமுதம் போன்ற இனிய நீரை விடுகின்றன. "ஆகா! காவேரி நதியின் ஜலம்போல் அல்லவா இனிக்கின்றது!" என்று எண்ணுகிறான்.

அதே சமயத்தில், அவனுக்குச் சுற்றுப்புறமெல்லாம் குளிர்கிறது. காவேரி நதி தீரத்தில் குளிர்ந்த தோப்புக்களினிடையே இருக்கும் உணர்ச்சி உண்டாகிறது. தன்னைத் தூக்கி எடுத்து வாயில் இன்னமுதை இட்டு உயிர் கொடுத்த தெய்வம் தன் முகத்துக்கருகிலே குனிந்து பார்ப்பதாகத் தோன்றுகிறது. முல்லை மலர்களின் திவ்ய பரிமள வாசனை அவனைச் சூழ்கிறது. சட்டென்று அவனுடைய கண்கள் ஒளி பெறுகின்றன. 'ஆகா! எதிரில் தன் முகத்தருகில் தெரியும் அந்த முகம், மாதுளை மொட்டைப் போன்ற செவ்விதழ்களில் புன்னகை தவழ, விரிந்த கருங்கண்களினால் தன்னைக் கனிந்து பார்க்கும் அந்த முகம், தான் ஏற்கெனவே பார்த்திருக்கும் அந்த முகம்தான். எவ்வளவோ ஆபத்துக்களிலிருந்து தன்னைத் தப்புவித்த தெய்வப் பெண்ணின் முகந்தான். அந்த இனிய முகத்தைத் தொட வேண்டுமென்ற ஆசையுடன் விக்கிரமன் தன் கையைத் தூக்க முயன்றான்; முடியவில்லை. கை இரும்பைப் போல் கனக்கிறது. மறுபடியும் கண்கள் மூடுகின்றன, நினைவு தவறுகிறது.

இப்படியெல்லாம் சுவர்க்க இன்பத்தையும் நரகத்துன்பத்தையும் மாறி மாறி அநுபவித்து பிறகு கடைசியில் ஒருநாள், விக்கிரமனுக்குப் பூரணமான அறிவுத் தெளிவு ஏற்பட்டது. கொஞ்சங் கொஞ்சமாகப் பழைய நினைவுகள் எல்லாம் வந்தன. காட்டாற்றங்கரையில் மகேந்திர மண்டபத்தில் அன்றிரவைத் தானும் பொன்னனும் கழித்தது வரையில் நினைவுபடுத்திக் கொண்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். ஏதோ ஏற்கெனவே தெரிந்த இடம் போல்



தோன்றியது. நன்றாக ஞாபகப்படுத்திக் கொண்டு பார்த்த போது அவனுடைய ஆச்சரியத்துக்கு எல்லையில்லாமற் போயிற்று. ஆமாம்; உறையூரில் காவேரித் தீவிலுள்ள வஸந்த மாளிகையின் ஒரு பகுதிதான் அவன் படுத்திருந்த இடம். 'இங்கே எப்படி வந்தோம்? யார் கொண்டுவந்து சேர்த்தார்கள்? இந்த மாளிகையில் இப்போது இன்னும் யார் இருக்கிறார்கள்?"

பொன்னனுடைய நினைவு வந்தது. அவன் எங்கே?

தாபஜ்வரத்தின் வேகத்தில் தான் கண்ட பயங்கர - இன்பக் கனவுகளெல்லாம் இலேசாக ஞாபகம் வந்தன. அந்த அதிசய மாயக் கனவுகளில் அடிக்கடி தோன்றிய பெண்ணின் முகம் மட்டும் கனவன்று - உண்மை என்று அவனுக்கு உறுதி ஏற்பட்டிருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் பாதச் சிலம்பின் ஒலி கேட்டபோது, அவள் தானா என்று ஆவலுடன் திரும்பிப் பார்த்தான். இல்லை; யாரோ பணிப்பெண்கள், முன்பின் பார்த்தறியாதவர்கள்.

இன்னும் வைத்தியர் ஒருவர் வந்து பார்த்தார். பணியாட்களும் பணிப் பெண்களும் அடிக்கடி வந்து வேண்டிய சிசுருஷை செய்தார்கள். ஆனால், பொன்னன் வரவில்லை; அந்தப் பெண்ணையும் காணவில்லை.

பணியாட்களிடமும் பணிப் பெண்களிடமும் விவரம் எதுவும் கேட்பதற்கும் அவன் மனம் இசையவில்லை. அவர்களோ ஊமைகளைப் போல் வந்து அவரவர்களுடைய காரியங்களைச் செய்துவிட்டுத் திரும்பினார்கள். அவனுடன் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

இவ்விதம் ஒரு பகல் சென்றது. இரவு தூக்கத்தில் கழிந்தது. மறுநாள் பொழுது விடிந்ததிலிருந்து விக்கிரமனுக்கு அங்கே படுத்திருக்க மனம் கொள்ளவில்லை. உடம்பில் நல்ல பலம் ஏற்பட்டிருப்பதைக்

அருள்வாக்கு



மனுஷ்யர்களாக இருந்து ரொம்பவும் நிறையப் புண்ணியம் செய்ததால் தேவர்களாகவே ஆகி தேவலோக வாஸம் பெற்ற சிலரைப் பற்றியும் புராணங்களில் இருப்பது வாஸ்தவந்தான். ஆனால் தேவர்களுக்குமேகூட தேவலோகத்தில் நிரந்தர வாஸமில்லை என்றும் அந்தப் புராணங்களே சொல்கின்றன. தேவர்களை சூரபத்மன் அடித்துத் துரத்தினான், மஹிஷாஸுரன் அடித்துத் துரத்தினான், இந்திரன் உள்பட தேவர்கள் பூலோகத்திலே வந்து திண்டாடினார்கள் என்றெல்லாமும் புராணத்தில் இருக்கிறது. அதனால் தேவலோகத்தில் எப்பொழுதும் இருக்க முடிந்தால் சாச்வத ஸந்தோஷமாக இருக்கும் என்று hypothetical ஆக வேண்டுமானால் சொல்லலாமே தவிர அப்படி யாரும் இருந்ததில்லை; இருக்கவும் முடியாது என்றுதான் தெரிகிறது.

இந்திரியத்தால் ஸந்தோஷம் என்கிறபோது, வெளியிலே உள்ளவற்றை அநுபோகம் பண்ணுவதால்தான் இது கிடைக்கிறது. வெளியிலே இருப்பதை, எப்படி எப்போதும் நம்மிடம் தக்கவைத்துக் கொள்ள முடியும்? அது கையை விட்டுப் போனாலும் போகும்தான். காமதேனுவும் கல்பக விருக்ஷமும் ஐராவதமும் இந்திராணியுமே கூட இந்திரன் கையை விட்டுப் போய், அவன் தனியாகத் தவித்த ஸந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. ஆகையால், வெளியிலிருப்பதை depend பண்ணுகிற (சார்ந்திருக்கிற) தேவலோக இந்திரிய ஸௌக்யம் நிஜத்தில் சாச்வதமேயில்லை. வெளி - உள் என்று எதுவுமே இல்லாமல் ஆத்மாவிலேயே - ஸ்தித பிரக்ஞன் என்று பகவான் (கீதையில்) சொன்னது போல் - ஆணி அடித்த மாதிரி ஊன்றி விடுகிறவனுக்குத்தான் ஸதானந்தம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கண்டான். எழுந்து நடமாடினான். ஒருவிதக் களைப்பும் உண்டாகவில்லை, திடமாகத்தான் இருந்தது. அறைக்கு வெளியே வந்து தோட்டத்தில் பிரவேசித்தான். அங்கிருந்த பணியாட்கள் யாரும் அவனைத் தடுக்கவில்லை. விக்கிரமன் மேலும் நடந்தான். நதிக்கரையை நோக்கி மெதுவாக நடந்து சென்றான். பல வருஷங்களுக்குப் பிறகு அந்தக் குளிர்ந்த காவேரித் தீவைப் பார்க்கப் பார்க்க, அவன் மனம் பரவசமடைந்தது. அந்த மாமரங்களின் நிழலில் நடப்பது அளவற்ற ஆனந்தத்தை அளித்தது. மெள்ள மெள்ள நடந்து போய்க் காவேரிக் கரையை அடைந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். அவனுடைய மனதில் சாந்தியும் இன்ப உணர்ச்சியும் மேலிட்டிருந்தன.

காவேரி நதியின் இனிய நீர்ப்பிரவாகத்தை விக்கிரமன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். தண்ணீரில் ஒரு முகம் பிரதிபலித்தது! அது அந்தப் பழைய தெய்வப் பெண்ணின் முகந்தான். காஞ்சியிலும் மாமல்லபுரத்திலும் தன்னைக் கருணையுடன் நோக்கிய முகந்தான். தாபஜ்வரக் கனவுகளில் தோன்றிச் சாந்தியும் குளிர்ச்சியும் அளித்த முகமும் அதுதான். அந்தப் பெண்ணை மறுபடியும் காணப் போகிறோமா என்று விக்கிரமன் பெருமூச்சு விட்டான். அதே சமயத்தில், அவனுக்குப் பின்புறமாக வந்து ஒரு மரத்தடியில் சாய்ந்து கொண்டு குந்தவிதேவி நின்றாள்.

(தொடரும்)

பாலம்

●● உடல்நலம் பாதிக்கப்பட்டு வீட்டில் இருக்கும் என் கணவருக்கு டைப்(தமிழ்) தெரிந்த உதவும் நண்பர்கள் தேவை. நல்மனம் கொண்டோர் எழுதவும்.

திருமதி ரோஸிலின், த.பெ.எண். 80, மதுரை - 625 002

●● ரூஸோ எழுதிய 'சமுதாய ஒப்பந்தம்" (Social Contract) புத்தகம் தேவை. விலை குறிப்பிட்டு எழுதவும்.


**சுவாமி சுந்தரானந்தா, 121ஏ, விநாயகர் கோயில் வீதி,
ஜவஹர் புரம், வேலாண்டிபாளையம் - 641 025**

●● தேங்காய் சிரட்டை, (Shell chips), சிரட்டை பவுடர், இதிலிருந்து தயாரிக்கப்படும் activated corbon ஆகியவை வாங்கவும் விற்கவும் தொடர்பு கொள்ளவும்.

**ஜி. நாகரத்தினம், 41 B, சோமநாதர் கோவில் வடக்கு,
வடகட்டளை, வேதாரண்யம் (அ) 614 810.**

●● எனக்கு தன பைரவர் படம் தேவை. குபேர பூஜை செய்யும் முறைகள் பற்றிய கட்டுரை அல்லது அதன் ஜெராக்ஸ் பிரதி தேவை. தொடர்பு கொள்ள முகவரி:

**டாக்டர் ஆர். வேங்கடராமன், கௌரி இல்லம்,
நத்தகாடையூர்-638 108.**



●● வீணைவாத்தியம் - வாங்கி ஒரு வருடம் ஆனது - விற்பனைக்கு உள்ளது.

ஆர். ராமலிங்கம், 17, வாகீச நகர், 2வது மெயின் ரோடு, சிதம்பரம்.

●● ஆழ்நிலை தியானம், பிராணாயாமம் பற்றிய முழு விவரம். செய்முறை விளக்கம் அடங்கிய புத்தகம் தேவை.

**ச. கிருஷ்ண மூர்த்தி, டைப் I, 8/8 அனல்மின் நகர் II,
தூத்துக்குடி - 628 004.**

●● "தமிழனென்று சொல்லடா", "காணி நிலம் வேண்டும்" ஆகிய பாடல்களின் இசைத் தட்டுக்கள் கே.ஆர். ராமசாமி, பி.ஏ. பெரிய நாயகி பாடியது தேவை. விலைக்கு அல்லது பதிவு செய்து கொள்ள இரவலாகத் தர விரும்புவோர் தொடர்பு கொள்ள முகவரி:

எஸ். வேலுச்சாமி, 48, நேதாஜி ரோடு, பொள்ளாச்சி - 642 001

●● "முதியோர் சேவை மகேசன் சேவை" எனக் கொண்டு "ரக்ஷா முதியோர் நல்வாழ்வு இல்லம்" துவங்கப்பட்டுள்ளது. விவரங்களுக்கு:

சாரதா ராஜன், 15/2 பாரதி பார்க் ரோடு, கோயமுத்தூர் - 641 043

●● "என் தகப்பனார் ராஜாமணி நடத்தி வந்த "தாரை குரல்", "உடுமலை வாசி" ஆகிய பத்திரிகைகளின் பழைய பிரதிகள் யாரிடமாவது இருந்தால் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கக் கோருகிறேன். திருப்பித் தர வேண்டுமெனில் நகல் எடுத்துக் கொண்டு தருகிறேன்.

**வி.எஸ். காயத்ரி, 3, சிவன் கோயில் தெற்கு மாட வீதி,
வில்லிவாக்கம், சென்னை - 49.**

●● சாதத்தை மீண்டும் அரிசி ஆக்கும் முறையை மேல் நாட்டவர் கையாள் கின்றனர். அந்த விஞ் ஞான முறை தெரிந்தவர்கள் தொடர்பு கொண்டால் நம் நாட்டிலும் இதை நடைமுறைப்படுத்த ஆவல்.

**ஆர். ரங்கராஜன், நடராஜா ரைஸ் மில்,
பாளையப்பாடி,
அரண்மனை குறிச்சி, 621 851.**

பாலம்

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது. - ஆர்.)

சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத் சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத்

சரியான விடைகளைச் பார்த்துக் கொள்ளுங்கள்!

26 வார மோட்டார் சைக்கிள் பரிசுப் போட்டிக் கேள்விகளுக் கான சரியான விடைகளை இந்த இதழில் அறிவிப்பதாகச் சொல்லியிருந்தோம். இதோ விடைகள் :

11.9.94 இதழ் : 1. வேண்டுமென்றே செய்த தவறு.
பக்கம் 64 - வட்டமேஜை தலைப்பு :
'விட்டீரே!'
- 'ட்'க்குப் புள்ளி இல்லை.

18.9.94 : 2. கேள்வி பதில் பரிசு பெற்றவர்: **உபேந்திரன், தஞ்சை.**

25.9.94 : 3. ஜெயராஜ் போல் படம் வரைந் தது : **அரஸ்.**

2.10.94 : 4. இரு படங்களில் ஒற்றுமை - **5 & 9 பட்டாம்பூச்சிகள்**

9.10.94 : 5. சம்பந்தமில்லாத வரி :
இன்று பஸ்கள் ஓடாது.
(கவர் ஸ்டோரி, பக்கம் 16)

16.10.94 : 6. எந்த டயலாக் - எந்தப் படம்?
1. சிந்து பைரவி, 2. வேதம் புதிது, 3. இத யத்தைத் திருடாதே, 4. கல்யாணப் பரிசு, 5. நாயகன்.

23.10.94 : 7. சொன்னது யார்?
1. மரியோ மிராண்டா
2. சேஷன்
3. தென்கச்சி கோ. சுவாமிநாதன்

30.10.94 : 8. யார் யாரை எதற்கு ஒப்பிட லாம்?
மத்தாப்பு - ஜெயலலிதா (5)
தீபாவளி மருந்து - மன்மோகன்சிங் (6)
எண்ணெய் குளியல் - நரசிம்மராவ் (1)
புஸ்வாணம் - சுப்பிரமணியசுவாமி (2)
சரப்பட்டாசு - மு. கருணாநிதி (3)
ஊசிவெடி - வாழப்பாடி (4)

6.11.94 : 9. குழந்தைகளுக்குப் பிடித்தது.
1. இனிப்பு
2. விளையாட்டு
3. அப்பா - அம்மா
4. கோகுலம்

13.11.94 : 10. சினிமா பாடல் - 4 வரி
தேன் சிந்துதே வானம்
உனை எனை தாலாட்டுதே
மேகங்களே தரும் ராகங்களே
எந்நாளும் வாழ்க!

20.11.94 : 11. ஜோக் படத்தில் ஆறு தவறுகள்:
1. ஃபோன் ஒயர்
2. மூக்குக் கண்ணாடியின் மத்தியில் இணைப்பு இல்லை.
3. ஒரு காலில் செருப்பு - ஒரு காலில் ஷூ
4. வலது கை அமைப்பு
5. ஸ்டெத் முனை
6. செஞ்சிலுவைச் சின்னம்.

27.11.94 : 12. நாலு கேள்விகளுக்கான பதில்கள் :
1. சிரஞ்சீவி
2. வீரபாண்டிய கட்டபொம்மன்; சத்திர பதி சிவாஜி சிலை.
3. வீரமாமுனிவர், போப், கால்டுவெல்
4. கோவிந்தன் குட்டி

4.12.94 : 13. கத்திரிக்கோல் போட்டி (சில கத்திரிகள் கட்டிங்கில் போனதால்)
30, 31 அல்லது 32

11.12.94 : 14. படத்தில் ஒளிந்திருக்கும் பெயர்: **தேனார்மொழிவல்லி**


18.12.94 : 15. கட்டங்களை நிரப்பவும்
பாலமுரளி
கண்ணன்
ஜால்ரா
தானம்
நடராஜன்
சுப்புடு
கடம்
சபா
பழமொழி : பாடப் பாட ராகம்

25.12.94 : 16. ஜோடி சேர்க்க....

தரிசனம் - அபூர்வா
பணியாரம் - அங்கு
கன்ஸோல் - ராதாகிருஷ்ணன்
ஏணிப்படிகள் - அகிலாண்டேஸ்வரன்
லவ் - அமராவதி
கிரெடிட் கார்ட் - சௌகார்

1 f | 2 e | 3 a | 4 b | 5 c | 6 d

1.1.95 : 17.



8.1.95 : 18. தமிழ் தப்பிக்கட்டும்.

15.1.95 : 19. பொங்கல் ரிலீஸ் படங்கள் :
சின்ன கவுண்டர்
தர்மதுரை
ஜாதிமல்லி
சிறகடிக்க ஆசை
சுந்தரகாண்டம்
தையல்காரன்

22.1.95 : 20. வழி தெரியாமல் புகுந்த விஷயங்கள் (10)

1. மத்து, 2. கிளிக்கூண்டு, 3. ஆந்தை, 4. டைப் ரைட்டர், 5. ஒட்டடைக் கொம்பு, 6. மாங்காய், 7. தராசு, 8. இந்தியா மேப், 9. ஸ்கேல், 10. குழாய்.

29.1.95 : 21.

ஹௌஸ்தட் ? - சு. சுவாமி.
ஹிட் விக்கெட் - வாழப்பாடி
பௌன்ஸர் - அர்ஜுன்சிங்
ஆஷஸ் - மொய்லி
சுக்லி - ஜெயலலிதா
மெய்டன் ஓவர் - சோனியாகாந்தி
நைட்வாட்ச்மேன் - குமரிஅனந்தன்


5.2.95 : 22. வட்டமேஜை தலைப்பிலிருந்து வார்த்தைகளைப் பொறுக்கிச் சேர்த்தால் கிடைக்கும் வாக்கியம் :


இந்த வாரம் வட்டமேஜை தலைப்பு எங்கே சார்?

12.2.95 : 23. எதிரும் புதிரும்

என். டி. திவாரி X முலாயம்சிங்
ஜெ X சென்னாரெட்டி
லல்லுபிரசாத் X டி.என்.சேஷன்
கருணாகரன் X உம்மன்சாண்டி
சுஜாதா X அந்துமணி
குஞ்சுமோன் X ஷங்கர்

19.2.95 : 24. இரட்டைப் புதிர்





26.2.95 : 25. சினிமா தலைப்புக்கள்
1. ஆலயதீபம்
2. சின்னதம்பி பெரியதம்பி
3. இரு கோடுகள்
4. வட்டத்துக்குள் சதுரம்
5. கல்யாணப் பரிசு
6. ஆறிலிருந்து அறுபது வரை

5.3.95 : 26. மோட்டார் சைக்கிள் உதிரி பாகங்கள் :

1. பிரேக், 2. சீட்டு, 3. சோக், 4. டயர், 5. கியர், 6. டியூப், 7. லைட், 8. கேபிள், 9. கண்ணாடி, 10. ஸ்போக்.

பணம்


ஏற்றுமதி, ரிசார்ட்டுகள், மலைத்தோட்டப் பயிர்கள் முதலிய பல்வேறு லாபகரமான தொழில்களில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் குறிஞ்சிப்பாளை குரூப்பின் ஓர் அங்கம்தான் - பெட்டர் கெயின்ஸ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்.

எனவே உங்கள் முதலீடு சிறந்த முறையில் பெருகி வளரச் சிறப்பான, மிகமிகப் பாதுகாப்பான இடம் - பெட்டர் கெயின்ஸ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்.

இருக்க வேண்டிய இடத்தில்
இருக்க வேண்டும்
வளர வேண்டிய இடத்தில்
வளர வேண்டும்!

30% வட்டி

வட்டியானது, மாதம்தோறும் / காலாண்டுக்கு ஒருமுறை / அரையாண்டுக்கு ஒருமுறை, பின்-தேதியிட்ட செக்குகளாக அல்லது ரொக்கமாகக் கொடுக்கப்படும்.



விழாக்கால வாய்ப்பு
May 31st,1995 வரை.

எங்களின் 'வைரச் சுரங்கம்' 'தங்கச் சுரங்கம்' மற்றும் 'வெள்ளிச் சுரங்கம்' போன்ற திட்டங்களில் சேர்ந்து 'வைர மோதிரம்', 'வைர தோடு' 'தங்க மோதிரம்' மற்றும் 'தங்க தோடு' போன்ற ஆச்சரியமான பரிசுகளையும் மற்றும் வேறு பல பரிசுகளையும் வென்றிடுங்கள்.

மேலும் விவரங்களுக்கு நேரிலோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும்:

BETTER GAINS FINANCE & INVESTMENTS
(பெட்டர் கெயின்ஸ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்.)

தலைமை அலுவலகம்: 311, சிவாலயா காம்ப்ளெக்ஸ், A பிளாக், 3வது மாடி, எத்திராஜ் சாலை, (கமாண்டர்-இன்-சீஃப் ரோடு), எழும்பூர், சென்னை 600 105 தொலைபேசி: 8250173.

கிளை அலுவலகம்: RKP கார்ப்பரேட் ஹவுஸ், 19, சரவணன் தெரு, தெற்கு போக் ரோடு பிரிவு, தி.நகர், சென்னை 600 017. தொலைபேசி: 4348256, 4347437.

ஜோதிட சாஸ்திரம் கற்க இளைஞர்களுக்கு ஓர் அழைப்பு!



மகரிஷி மகேஷ் யோகி

மகரிஷி மகேஷ் யோகி அவர்களின் பெருங்கருணையால் வைதீக ஜோதிடத்தைப் பற்றிய அறிவு உலக முழுவதும் பரவியுள்ளது. நமது நாட்டின் ஒவ்வொரு நகரத்திலேயும், மேலை நாடுகளிலேயும் ஜோதிட சாஸ்திர வல்லுனர்கள் தேவைப்படுகின்றனர். ஆகவே தவத்திரு மகிரிஷி மகேஷ் யோகி அவர்களின் ஊக்குவிப்பினால், மயிலாப்பூர் ஸமஸ்கிருத கல்லூரியின் முன்னாள் முதல்வர் திரு. சேஷாத்திரி நாதன் அவர்களின் ஆலோசனைப்படி மகரிஷி ஜோதிட வித்யாபீடம் இயங்க உள்ளது. அதன்படி வருகிற கல்வி ஆண்டின் வகுப்புகள் ஜூன் '95 முதல் ஆரம்பமாக உள்ளன.

படிக்க வேண்டிய ஆண்டுகள்	—	5 முதல் 7 ஆண்டு வரை.
தகுதி	—	மெட்ரிகுலேஷன் தேர்ச்சி அல்லது அதற்குச் சமமான படிப்பு. ஏதாவது ஒரு வேதத்தின் சம்ஹிதையைப் பற்றிய முழுமையான அறிவு
வயது	—	அதிகபட்சம் 18 ஆண்டுகள்.

கல்வி முறை குருகுல முறைப்படி அமைந்திருக்கும். உணவும், உறைவிடமும் மகரிஷி இயக்கத்தினரால் ஏற்பாடு செய்யப்படும்.

மாணவர்களின் தினசரி கடமைகளாக வைதீக முறைப்படி திரிகால சந்தியா, யோகாசனப் பயிற்சி, பிராணயாம பயிற்சி, ஆழ்நிலை தியான பயிற்சி முதலியன ஜோதிட படிப்போடு இன்றியமையாததாக இருக்கும்.

படிப்பில் தேர்ச்சி அடைந்தோர்க்கு, அவர்கள் மகரிஷி இயக்கத்திற்குச் சேவை செய்ய விரும்பினால், இவ்வியக்கத்தின் மூலம் கௌரவ சம்பளமும் கிடைக்கும்.

விருப்பமுள்ளப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அதி விரைவில் மகரிஷி ஜோதிட வித்யா பீடத்தில் சேர்க்கக் கோரப்படுகின்றார்கள்.

ஜோதிட சாஸ்திர வல்லுநர்களுக்கு ஓர் அழைப்பு

நமது நாட்டிலும், மேலைநாடுகளிலும் ஜோதிட சாஸ்திர கல்வியினைப் போதிக்கவும், எதிர்கால பலன்களை கணிக்கக் கற்றுத் தரவும் ஜோதிட சாஸ்திர வல்லுனர்கள் தேவைப்படுகின்றனர். மேலைநாடுகளில் பணிபுரிய விரும்பும் ஜோதிட சாஸ்திர வல்லுனர்கட்கு ஆங்கில அறிவு அவசியம் இல்லை. மொழிபெயர்ப்பாளர்களும், சமையல்காரர்களும் உடன் செல்வர்.

விருப்பமுள்ள ஜோதிட வித்வான்கள் தங்களைப் பற்றிய முழு விவரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி கோரப்படுகின்றார்கள்.

மகரிஷி ஜோதிட வித்யா பீடம்,
மகரிஷி வேத விஞ்ஞான வித்யா பீடம்,
மகரிஷி தோட்டம்,
28, டாக்டர் குருசாமி சாலை,
சேத்துப்பட்டு, சென்னை - 600 031.

சென்னை நகரைச் சுற்றி சுமார் 15-25 கி.மீ. சுற்றளவில் 5000 - 10000 சதுர அடி கட்டிடம் வாடகைக்கு தேவை! சிட்டி பஸ் - ரயில் போக்குவரத்துள்ள சாலையில் அமைந்திருத்தல் விரும்பத்தக்கது. விவரங்களுக்கு மேலே உள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

மரணதண்டனை: மாறிவரும் பார்வை!

ஆட்டோ சங்கருக்கும் அவன் கூட்டாளி எட்வினுக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப் பட்டு விட்டது. திட்டமிட்டு ஆறு பெண்களைக் கொலை செய்தது மட்டுமல்லாமல், ஜெயிலில் இருந்த போது இடையில் தப்பி ஓடியதால் தான் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று நீதிமன்ற வட்டாரங்களில் சொல்கிறார்கள்.

ஒன்பது பேரைக் கொன்ற ஜெயப்பிரகாஷ்"க்கு முதலில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

கொலை செய்தவர்களுக்குத் தண்டனையை என்ன அடிப்படையில் நிர்ணயிக்கிறார்கள்...? கிரிமினல் வழக்குரைஞர் ஏ.பி. சூரியபிரகாசம் சொல்கிறார் :


• சூர்ய பிரகாசம்

“இப்போதெல்லாம் நூற்றுக்கு ஒரு சதவிகித வழக்குகளில் தூக்கு (மரண தண்டனை) விதிக்கப்படுகிறது. பச்சன்சிங் என்பவருக்கும் பஞ்சாப் மாநிலத்துக்குமிடையே நடந்த ஒரு வழக்கில் உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. மிகவும் அரிதான வழக்குகளில் (Rarest of rare) மட்டுமே மரண தண்டனை அளிக்கலாம் என்று அது கூறியது. அந்த அரிய சூழல்கள் என்ன?

“பெண்களைக் கற்பழித்துக் கொலை செய்வது, கூலிக்குக் கொலை செய்வது, நகை, பணத்துக்கு ஆசைப்பட்டு கொலை செய்வது, தேசியத் தலைவர்களைக் கொலை செய்வது, அப்பாவி மக்கள் கூட்டத்தை குரூரமாகக் கொலை செய்வது, மற்றும் வரதட்சணைக் கொடுமைக் கொலைகள்.

“இந்தக் கொலைகளுக்கெல்லாம் மரண தண்டனை கொடுக்கலாம் என்று சுப்ரீம் கோர்ட் வழிகாட்டியிருந்தாலும், வழக்கின் தன்மை, சாட்சியங்கள் ஆகியவற்றைக் கொண்டுதான் தீர்ப்பு வழங்க முடியும்.

“ஒரு கைதிக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டால் விரைவில் அதை நிறைவேற்றி விட வேண்டும். அவனைத் தனிமைக் கொட்டடியில் நீண்ட வருடங்கள் மரண பயத்தோடு வைத்திருப்பதே கொடிய தண்டனையாகும். அது அவனை மனரீதியாகச் சாகடித்து விடும் என்பதையும் ஒரு வழக்கில் சுப்ரீம் கோர்ட் சுட்டிக் காட்டியுள்ளது. இதுபோன்ற கைதிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும் சொல்லியிருந்தது. இந்தத் தீர்ப்பைச் சுட்டிக் காட்டி கொட்டடியில் இருக்கும் போதே "இறந்து" கொண்டிருந்த பல மரண தண்டனைக் கைதிகள் ஆயுள் தண்டனைக்கு மாறினார்கள்.

“மரண தண்டனை கைதிகளுக்குக் கருணை காட்டுவதையும் நீதிமன்றம் ஒரு வழக்கில் குறைகூறியுள்ளது. 'தேவையற்ற கருணை கூடாது. பின்னர் சட்டத்தின் பேரிலும், நீதியின் பேரிலும் உள்ள நம்பிக்கை மக்களுக்குப் போய் விடும்' என்று ஒரு வழக்கில் உயர்நீதி மன்றம் கருத்து தெரிவித்தது.

“ஒவ்வொரு வகையான கொலைக்கும் ஒவ்வொரு தண்டனை என்று சட்டத்தில் இல்லை. மனநிலை சரியில்லாதவர் கொலை செய்தால், அப்படிச் செய்த சமயத்தில் மனநிலை சரியில்லை என்று கோர்ட்டில் நிரூபித்தாக வேண்டும். அப்போது தண்டனை கொடுத்து மனநல மருத்துவமனைக்கு அனுப்பி விடுவார்கள்.

“சூழ்நிலையின் தாக்கத்தால் (Spur of the movement) கொலை செய்தவர் ஆயுள் தண்டனை மட்டுமே பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்னர் கர்நாடகா வங்கி மானேஜர் ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மானேஜர் ஏகப்பட்ட பணத்தைத் தனியொரு ஆளாக எண்ணிக் கொண்டிருப்பதைப் பார்த்தவன் பணத்தாசை மேலிடச் செய்த கொலை அது.

“உலகம் முழுக்க மரணதண்டனை பற்றிய பார்வை மாறி வருகிறது. பல ஐரோப்பிய நாடுகளில் இப்போது மரண தண்டனை கிடையாது. ஆயுள் தண்டனை என்றால் 14 வருடங்கள்தான்! முன்பெல்லாம் தலைவர்களின் பிறந்த நாள், நூற்றாண்டு விழா சமயங்களில் தண்டனைக் காலத்தைத் தள்ளுபடி செய்து வந்தார்கள். அதனால் பலர் 8, 10 வருடங்களில் வெளியே வந்து விட்டார்கள். இப்போது நிலை வேறு. ஆயுள் தண்டனையில் தள்ளுபடி கிடையாது. 14 வருடம் அனுபவித்தே ஆக வேண்டும். அந்தக் காலம் முடிந்த பிறகும் தானாகவே விடுதலை கிடைத்து விடாது. முறைப்படி அரசாங்கத்துக்கு மனு போட்டு, அனுமதி பெற்றே விடுதலை பெற முடியும்!”

சந்திப்பு : ப்ரியன்

• ஆட்டோ சங்கர்




• ஜெயப்பிரகாஷ்

உறவு சொல்ல இருவர்

தகவல் வந்து விட்டது.

கோபியின் தம்பிதான் வந்து சொல்லி விட்டுப் போனான்.

"மன்... ஸ்ஸ்... வந்து... ரெண்டு மணிக்குன்னு சொல்லச் சொன்னாங்க."

வத்சலாவிடம் நின்று பேசவில்லை. அவசரமாய் ஓடி விட்டான். இரண்டு பேருக்குமே கண்ணீர் தளும்பி விட்டது.

"என்னவாம்?"

அப்பா வெளியில் வந்தார்.

"அவங்க வீட்டுலேர்ந்து வந்தாங்க."

"ஓ..."

"ரெண்டு மணிக்காம்..."

"இருக்கட்டும். நமக்கென்ன?"

"இல்லப்பா. எனக்கு போய்ப் பார்க்கணும்னு.."

அப்பா அவளை நிமிர்ந்து பார்த்தார்.

"என்ன உளர்றே?"

"ப்ளீஸ்..."

அம்மாவும் வந்து விட்டாள்.

"என்னடி பைத்தியமாட்டம்... அப்பா மட்டும் போயிட்டு வரட்டும்! நீ போகக் கூடாது."

வத்சலா அறைக்குள் போனாள். அலமாரியில் 'இதோ' என்றன இரு கடிதங்களும். கூடவே 'பிறந்த நாள் வாழ்த்தும்.'

'கோபி' என்ற கையெழுத்து சற்றே சரிவாய் கீழிருந்து மேலாக எழுதப்பட்டு அடிக்கோடும் இரண்டு புள்ளிகளுமாய் காட்சியளித்தது.

"உங்க கையெழுத்து ரொம்ப நல்லா இருக்கு!"

"என் தம்பி தினகர் என்னை விட அழகா எழுதுவான்!"

"தினகர் யாரு... திவாகர் யாருன்னு வித்தியாசமே புரியலே."

"ட்வின்ஸ். எங்களுக்கே குழப்பம் வரும்."

"என்னமா பழகறாங்க. இவ்வளவு பிரியமாய் பேசறதைக் கேட்டப்போ எனக்கு ஒரே ஆச்சர்யம்!"

"பிகாஸ்... எங்க கூடப் பிறந்தவள்னு யாரும் இல்லே. முதல் 'பெண்' வரவு நீதான். சித்தப்பா, பெரியப்பாவுக்கும் பசங்கதான்!"


"அதனாலதான் என்னை மன்னின்னு கூப்பிடறதை விட 'அக்கா'ன்னு கூப்பிட ரொம்ப ஆசைன்னாங்களா?"

"ம்... நீயும் அதே மாதிரி அவங்களோட பழகணும் வத்ஸலா!"

கோபியின் குரலில் வேண்டுகோள்.

பெண் பார்த்தல் ஒரு சம்பிரதாயத்திற்கு மட்டுமே. இந்த நிமிஷமே பூரண சம்மதம் என்று கண்களும் சேர்ந்து சிரிக்க... சொல்லி விட்டுப் போனவன். இவள் பிறந்த தினம் அறிந்து ஏழெட்டு கடைகள் சுற்றி அலைந்து வாழ்த்து தேடியவன். அழகாய்.. முத்து முத்தாய்... இரண்டு கடிதங்கள் எழுதியவன். இன்னும் ஒரே மாதத்தில் திருமணத் தேதி என்றிருந்த போது... எதிரும் புதிருமாய் வந்த இரண்டு லாரிகளுக்கிடையே சிக்கித்துப் போய் கூழானவன்.

போகாதே... பார்க்க வேண்டாம் என்ற போது வத்சலாவுக்கு எதிர்க்கத்தான்



தோன்றியது. என் கோபி... என்னை எப்படி யெல்லாம் வைத்துக் கொள்ளப் போகிறேன் என்று சொன்னவன்... 'அக்கா' ஸ்தானம் தரு கிறோம் என்ற வித்தி யாசமான இரு தம்பிகள். நேசத்திற்காய் ஏங்கும் ஜீவன்கள்.

அப்பா மட்டும் தான் போய் விட்டு வந்தார்.

கல்யாணப் பத்திரிகை 'புரூப் ரெடி' என்று தகவல் வந்ததும் 'வேண்டாம்' என்று சொல்ல வேண்டி யிருந்தது.

வத்சலா ஒரு வாரமாய் யாரோடும் பேசவில்லை. 'கோபிக்குத்தான்' என்று தீர்வான விஷயம் சட்டென்று கலைந்த அதிர்ச்சி இன்னும் விடவில்லை.

"அந்தப் பையன் வந்திருக் கான்மா.."

அம்மா வந்து சொன்னாள்.

தினகர் காத்திருந்தான். அவளைப் பார்த்ததும் சிநேகமாய்ச் சிரித்தான்.

"அக்கா... எப்படி இருக்கீங்க?"

கண்ணில் மளுக்கென்று நீர் தளும்பியது. அதைப் பார்த்து அவனிடமும் இறுக்கம். சில வினாடி களில் சுதாரித்துக் கொண்டான்.

"நீங்க வரணும்னு பிரியப்பட்டதா அப்பா சொன்னார். அவர்தான் வர வேணாம்னு தடுத்ததாகவும் சொன்னார்."

மெல்லிய குரலில் பேசிக் கொண்டி ருந்தான்.

"நல்லாத்தான் இருந்திருக்கும். இப்படி ஒரு விபத்து நிகழாம.. நீங்களும் எங்க வீட்டுக்கு வந்து... எங்களுக்கும் புது உறவு அமைஞ்சு... ஏதோ விதி... வேற மாதிரி ஆயிருச்சு. அதனால என்ன... சொந்தம்னு நாமதானே ஏற்படுத் திக்கிறோம்? நம்ம மனசு தானே நிர்ணயிக்குது? இப்பவும் நீங்கதான் எங்க அக்கான்னு சொன்னா... வேணாம்னு சொல்வீங்களா என்ன?"

நிமிர்ந்து அவனையே பார்த்தாள்.

"கோபி ஆசைப்பட்டது என்னங்க, உங்களுக்கு நல்ல வாழ்வு அமையணும். அதானே. போன வனை நினைச்சு துக்கப்படறது... அவன் மேல வச்ச பிரியத்துக்கு செய்யிற மரியாதை. வருங் காலத்தை நிர்ணயிச் சுக்கறது அதைவிட இன்னும் முக்கியம். இல்லியா.. அதானே கோபியோட நிஜமான ஆசை? அதையும் கௌரவப்படுத்தணும். இல்லியா.. வீணா மனசை குழப்பிக்காமே.. உங்கப்பா கிட்டே சொல்லுங்க. வேற தேதியிலே.. வேற எடம் பார்த்து.. நடக்கட்டும்."

வத்சலா ஆச்சர்யமாய்ப் பார்த்தாள்.

"எங்க அக்கா கல்யாணத்தை சீக்கிரம் நடத்தணும் நல்லபடியா. அதுலதாங்க இப்ப எங்களோட சந்தோஷம் இருக்குது."

எழுந்து நின்று சிநேகமாய் சிரித்த போது வத்ஸலாவின் கண்கள் தளும்பி இருந்தன.

7

ஏலம், தாழையின் குடும்பம். பூமியின் விளிம்பிலிருந்து சாண் அகலத் தழை இரண்டு கை நீளத்திற்கு வளரும். எல்லா பக்கமும் கிளம்பி, பச்சையாய் துவங்கி, மெல்ல மெல்ல மஞ்சளாகி பிறகு பழுக்கும். சின்ன நாற்று செடியாகி, புதராகி, செழிப்பாய் வளர்ந்த மூன்று வருடங்களுக்குப் பிறகு, புதரின் மையத்தில் இருந்து கால் நரம்பு பருமனுக்கு ஒரு கொடி வெளிவரும். இதற்கு வள்ளி என்று பெயர். இந்த வள்ளி என்ற சொல்லுக்குக் கொடி என்றுதான் அர்த்தம்.

இந்த 'வள்ளி' வந்த செடிதான் பருவம் கொண்ட செடி. இந்த வள்ளியிலிருந்து சிறு மொட்டுகள் போல ஏலம் காய்க்க ஆரம்பிக்கும். செடியில் உள்ள தழைகளுக்கு ஏற்ப வள்ளியில் நிறைய ஏலக்காய் கிளம்பும். அப்படி உருண்டு விளைந்த ஏலக்காயை சரியான நேரத்தில் பார்த்து விட வேண்டும். டீ கொழுந்து பறிப்பது போல ஏலக்காய் பறிப்பதும் ஒரு வித்தை. ஒரு கைப் பக்குவம். கொத்து கொத்தாய் முளைத்திருக்க, ஏலக்காயில் பிஞ்சு நசுக்காது, கால் மட்டும் பறிக்க பழக்கம் வேண்டும்.

புதர் போன்ற ஏலச்செடியின் அமைப்புக்குள் விஷ ஜந்துக்கள் சுருண்டு கிடக்கலாம். கடித்தால் துடிக்க வைக்கின்ற எறும்புகள் இருக்கலாம். ஆகவே பறிக்கிறவர்கள் பேசிக் கொண்டேதான் நடப்பார்கள். தடங்களைப் பார்த்துக் கொண்டு தான் பேசுவார்கள். நல்ல வெளிச்சத்தில் தான் ஏலக்காய் பறிப்பார்கள். அனேகமாய் பறிக்கிறவர்கள் பெண்களாய்த்தான் இருப்பார்கள். பத்து பிஞ்சுகளுக்கு நடுவே ஒரு முற்றிய பழத்தை எடுக்க பெண்களுக்குத்தான் பொறுமை இருக்கும்.

விஷஜந்துக்கள் குரல் கொடுத்தால் ஓடிவிடும். எறும்புகள் தட்டி விட்டால் நகர்ந்து விடும். இந்தப் பெண்கள் மிகவும் பயப்படுவது முள்ளம்பன்றிக்குத் தான்.

மலைச்சரிவில் சூரியனை மறைக்கும் மரங்களுக்கு நடுவே பத்தடிக்கு ஒரு புதராய் இருக்கின்ற ஏலச் செடிகளை வளைந்தும், நெளிந்தும், குனிந்தும் தாண்டிப் போகின்றபோது தடேலென்று ஒரு கால்பந்து அளவிற்கு முள்ளம்பன்றி குறுக்கிட, ஏலம் பறிக்கும் பெண்கள் பெரிதாய் அலறுவார்கள். அலறினால் முள்ளம்பன்றி ஓடாது. அசையாது நிற்கும். என்ன என்பது போல உற்றுப் பார்க்கும். முன்னேறினாலோ, கை வீசினாலோ, கல் எடுத்து வீசினாலோ, கொம்பு காட்டினாலோ எந்த சத்தமும் இல்லாமல் தன் முட்களைச் சிலிர்ப்பிக் கொண்டு இருக்கும்.

கருமையும், தேன் கலரும், வெண்மையும் கொண்ட அந்த முட்கள் பூமியைத் தவிர மற்ற எல்லா இடங்களை நோக்கியும் குத்திட்டு நிற்பது ஒரு அழகான காட்சி. முள்ளம் பன்றிக்கு எலி முகம். பக்கவாட்டுக் கண்கள். முட்களைச் சிலிர்ப்பி எல்லா பக்கத்து அசைவையும் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிற முள்ளம்பன்றியை நோக்கி விவரம் தெரியாதவர்கள் நகர்ந்து விடுவது உண்டு.

"மொழுங்கா ஓசரந்தானே, அருவாளால ஒரு போடு போட்டால் போச்சு. இல்லா, உண்டாந்தடிய மூஞ்சிப் பாத்து வீசணமுனா ஒத்த அடியில நகங்கிடும்!" என்று கணக்குப் போடுவதுண்டு.

அருவாளின் பிடி இருகுகிற நேரம், தரையில் ஊன்றி இருந்த தடி பூமியிலிருந்து ஒரு அடி எழும்பின நேரம், முள்ளம் பன்றி மின்னல் வேகத்தில் செயல்படத் துவங்கி விடும். எதிரியிடம் நேரிடையாக வராது. இரண்டடி வலதோ, இடதோ ஒரு பெருச்சாளி வேகத்தில் ஓடும். எதிரியைக் கடக்கிற போது தன் தோளை இறுக்கி உதறும்.

மனிதர்கள்



ஒரு கோணியை தூசு போக உதறுகின்ற வேகத்தில், முள்ளம் பன்றி தன் தோளை உதறும். விறைத்து நின்ற அதன் முட்கள் சடக்கென்று இரண்டு திசைகளிலும் பாயும். இரண்டடி தூரத்திலிருந்து ஒரு கத் தியை வீசினால், கூர்மையான கத்தி உடம் பிற்குள் பாயாதா? முழங்கால், இடுப்பு, தொடை என்று நாலு ஐந்து இடத்தில் குறைந்த பட்சம் நான்கு முட்களாவது குத்தி நிற்கும்.

ஒரே நேரம் நாலு கத்திக்குத்து வாங்கிய வன் பெரிதாய் ஒன்றும் செய்து விட முடியாது. குத்திய முள்ளம் பன்றியை புதர் புத ராய்த் தேடிவிட முடியாது. அதற்கு பிறகு ஏற்படும் கருப்பு வலியை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

எனவே தான் ஏலக்காய் பறிக்கிற பெண் கள், ஏன் ஆண்கள் கூட எதிரே நிற்கிற முள் ளம் பன்றிக்கு வழி விட்டுவிடுவது வழக்கம். மலைச்சரிவின் மேலோ, கீழோ நகர்ந்து விட, முள்ளம் பன்றி கண நேரத்தில் காணாமல் போய் விடும். அது பின் தொடர்ந்து தாக் காது. மனிதர்களை மடக்கித் தொந்தரவு செய்யாது. எவரையும், எதன் பொருட்டும் பயமுறுத்தும் எண்ணம் முள்ளம் பன்றிக்கு இல்லை. இப்படி சிலிர்த்து நிற்பதும், முட் களால் தாக்குவதும் தற்காப்பின் பொருட்டே. ஒரு முறத்தை, அல்லது பிரம்புக் கூடையை மறைப்பாக வைத்துக் கொண்டு பெரிய முள்ளுப் பந்தாய் முள்ளம் பன்றி எதிரே நிற்பதை சிலர் பார்த்திருக்கிறார்கள். எதிரியின் பார்வை தன்மீது இல்லை என்று தெரிந்தால் போதும், முள்ளம் பன்றி கருக்கிக் கொண்டு ஓடி விடும்.

வழியில் மடக்கி விசாரிக்கிற செயலுக் காய் ஏல விவசாயிகள் முள்ளம் பன்றியை வெறுக்கவில்லை. முள்ளம் பன்றி 'வள்ளி' யின் மீது வாய் வைத்து விடும். ஒரு ஸ்ட்ரா போட்டு கொக்ககோலா குடிப்பது போல, வள்ளியின் நுனியை மென்று விட்டு அந்த செடியின் சத்து முழுவதும் உறிஞ்சிக் குடித்து விடும். மூன்று வருடங்கள் காத்திருந்து வளர்ந்த வள்ளி, நூறு நூத்தியிருபது காய்கள் காய்க்கும் அந்தக் கொடி, இந்த முள்ளம் பன்றியின் வாய் பட்டதெனில், இந்த எலி இனத்துப் பகைவனால் தாக்கப்பட்டதெனில், பெருத்த நஷ்டம் உண்டாகும். ஒரு வள்ளி யோடு முள்ளம்பன்றி திருப்தியடை வதில்லை. அங்கங்கே வாய் வைத்து உலரச் செய்து விடும். பூச்சி விழுந்து அழிப்பதை விட மோசமான அழிப்பாக இருக்கும்.

மனிதர்கள் தங்கள் லாபத்திற்கு குறுக்கே நிற்கும் எந்த உயிரினத்தையும் வாழ விட மாட்டார்கள். நீயா? நானா? என்பது போல் இறங்கிவிடுவார்கள்.

முள்ளம் பன்றியை பொறியிலோ, வலையிலோ பிடிக்க முடியாது. அப்படியே அது சிக்கிக் கொண்டாலும் அதைப் போய்

பாலகுமாரன்

யார் எடுப்பது? நடந்து போகும் போதே நான்கு முட்கள் வீசும் முள்ளம் பன்றி, கண்ணியில் சிக்கிக் கொண்டால் எத்தனை முட்கள் வீசும்? எனவே முள்ளம் பன்றியை ஒழிக்கும் மிகச் சிறந்த வழி, வெடி. நூல் கட்டி இயங்கும் கண்ணிவெடி. முள்ளம் பன்றி போகின்ற பாதைகளை ஒருவாறு அறிந்து கொண்டு தரையிலிருந்து ஆறு அங்குல உயரத்தில் சணல் கட்டி, அந்த இரண்டடி சணல் நூலின் இருபுறமும், மூங்கில் குழாயினை நட்டு வைத்திருப்பார்கள். அந்த மூங்கில் குழாயிற்குள் வெடி மருந்து இணிக்கப்பட்டிருக்கும். கயிறு இழுபடும்போது கந்தகம் தடவிய இரு முனைகளும் வேகமாக இழுபடும். இழு படலில் உராய்வு வர, கந்தகம் பற்றிக் கொள்ளும். கந்தகம் பற்றிக் கொள்ள வெடி மருந்து சூடாகி, புகைந்து திணறி படீரென்று வெடிக்கும். இரண்டடி அகலமுள்ள வழியில் ஒரு அடி அகலமுள்ள முள்ளம்பன்றி வேகமாய்க் கடக்க, கண நேரத்தில் வெடித்து, துண்டு துண்டாய்ச் சிதறும். அல்லது மிகக் கடுமையாய் அடிபட்டு மல்லாக்கக் கிடக்கும்.

இரவு நேரங்களில் வள்ளியை உறிஞ்சப் போகும் முள்ளம் பன்றிக்கு வெடி வைப்பார்கள். இதில் மனிதர்கள் மாட்டிக் கொண்டு அலறுவதுமுண்டு. மலையில் ஏலக்காய் திருடர்கள் உண்டு. ஒரு ரூபாய்க்கு மூன்று அல்லது நான்கு ஏலக்காய் தரையில் விற்பனை ஆகும். அப்படிப்பட்ட காயை ஒரு கையளவு பறித்துப் போனால் சுலபமாய் இருபது முப்பது ரூபாய் தேறிவிடும்.

பகலில் நடமாடினால் தெரிந்து விடுமென்று விடியலில், அரையிருட்டில் ஏலக்காய் திருடுவார்கள். பிஞ்சும் பழமுமாய் உருவிக் கொண்டு போவார்கள். பக்குவமாய் பறிக்க வேண்டியவற்றை திருட்டு பயத்தில் விவரமற்று உருவிக் கொள்வார்கள். வள்ளியைச் சேதப்படுத்துவார்கள்.

இப்படிப்பட்டவர்கள் முள்ளம் பன்றிக்காக வைத்த வெடிகுண்டுப் பொறியில் சிக்கிக் கொள்வார்கள். சிக்கி சாகட்டும் என்றே முள்ளம்பன்றிக்காக வைத்திருப்பதாய்ச் சொல்லி விசேஷமான வெடி இவர்களுக்கும் வைப்பதுண்டு. இரண்டு லட்சுமி வெடியின் பரிமாணத்தில் முள்ளம்பன்றி செத்து விடும். மனிதர்களுக்கு இன்னும் அதிகமான வெடிமருந்து கட்டுவிப்பார்கள். கால் சிதறிப் போகிற அளவிற்கு மருந்து திணித்திருப்பார்கள்.

இந்த வெடி மருந்து ஏலம் விளையும் இந்த மலைகளில் பல உயிர்களை காவு கொண்டிருக்கிறது. நாய், குதிரை, பசு என்று

ஈஸ்வரி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்

ஈஸ்வரி குரூப் நிறுவனங்கள்

4 எல்டாம்ஸ் ரோடு, முதல் மாடி, ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018.
தொலைபேசி: 455349, 459557, 457583.



கிளைகள் : பாரிமுனை ஃபோன்: 560767, தி.நகர் ஃபோன்: 8259661, புரசைவாக்கம் ஃபோன்: 5324937, 5324940, குரோம்பேட்டை ஃபோன்: 405845, திருவல்லிக்கேணி ஃபோன்: 841187, நங்கநல்லூர் ஃபோன்: 2345891, சாலிக்கிராமம் ஃபோன்: 428650, பாண்டிச்சேரி ஃபோன்: 31830.

டெபாசிட் திட்டங்கள்

ஃபிக்சட் டெபாசிட்

காலம்	வட்டி விகிதம் (ஆண்டிற்கு)	குறைந்த பட்ச டெபாசிட் தொகை
1 ஆண்டு 2 ஆண்டு 3 ஆண்டு	**24%**	ரூ. 10,000/-

ஊக்கத்தொகை 1%

க்யூமுலேடிவ் டெபாசிட்

காலம்	டெபாசிட் தொகை	முதிர்வுத் தொகை	வருடாந்தர வட்டி	ஊக்கத் தொகை
13 மாதம்	ரூ.10,000/-	ரூ.13,000/-	27.70%	1.5%
25 மாதம்	ரூ.10,000/-	ரூ.16,000/-	28.80%	3.0%
37 மாதம்	ரூ.15,000/-	ரூ.30,000/-	32.4%	4.5%

ஈஸ்வரி பாண்ட்	திருமலா பாண்ட்
குறைந்த பட்சத்தொகை	குறைந்த பட்சத்தொகை
ரூ.25,000 இரு மடங்காகிறது 37 மாதங்களில் ரூ.50,000/- ஊக்கப்பரிசு	ரூ.50,000 மும் மடங்காகிறது 60 மாதங்களில் ரூ.1,50,000/- ஊக்கப்பரிசு
4 கிராம் தங்கக்காசு	8 கிராம் தங்கக்காசு

எல்லா ஞாயிறு அன்றும் அலுவலகம் இயங்கும்

LOTUS/95

உங்கள் வளர்ச்சி ஈஸ்வரியுடன் வளரட்டும்.



''இந்த பர்சின் சொந்தக்காரர் பத்திரிகை ஆசிரியர்னு நினைக்கிறேன்.''

''எப்படி சொல்றே?''

'' 'பர்சில் காசு வைக்க இயலாததற்கு வருந்துகிறோம்'னு துண்டுச் சீட்டை பர்சில் வைத்திருக்கிறார்!

-லலிதா செல்லப்பா

மிருகங்களையும், அம்மாவின் இடுப்பு விட்டு முன்னே ஓடிய குழந்தையையும், எந்தப் பக்கம் குண்டு வெச்சோம் என்று தேடின வனையும், புருஷன் இருக்க, வேறு ஒருவனோடு உறவு வைத்துக் கொண்ட பெண்ணின் கள்ளக் காதலையும், உரம் விற்க வந்த பட்டணத்து ரெப்ரசன்டேட்டிவையும் தாக்கி நாசப் படுத்தியிருக்கிறது.

மனிதர்களை இப்படி காயப்படுத்தி விடுகிறதே என்று இதைக் கை விட்டால் முள்ளம் பன்றிகள் பெருகி விடுகின்றன. எனவே வெடி மருந்து விஷயத்தை யாரும் கைவிடுவதாக இல்லை.

நாராயணன் வீட்டை விட்டு ஓடும் போதே கெட்டி மூங்கில் கழியை எடுத்துக் கொண்டு ஓடினான்.

கொல்லை தாண்டியதும் சரிவு. அந்த சரிவில் ஆட்கள் அவ்வளவு சுலபமாக இறங்கிவிட முடியாது. கழி ஊன்றிக் கொண்டோ அல்லது புதர்களை கவனமாக பற்றிக் கொண்டோதான் இறங்க வேண்டும். ஆனால் முள்ளம் பன்றிகள் நெட்டு குத்தலின் சரிவில் மிகச் சாதாரணமாக இறங்கும். ஒரு வேளை கால் நொடித்தால் முட்களை சிலிர்ப்பி பந்தாக்கி பாயின்றி உறுமிக் கொண்டு போகும். புதர்களில் முட்டி நின்று இறங்கும்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று ஒரு முள்ளம் பன்றியின் குடும்பமே அந்த சரிவில் முட்பந்துகளை இறக்கி ஓடின. நாராயணன் திகைத்தான். சரிவில் உட்கார்ந்து சறுக்கியபடியே இறங்கினான். ஒன்றறை பனை சரிவிற்கு பிறகு ஐந்தடி அகலத்திற்கு ஒரு சமதளம் கிடைத்து நாராயணன் தொப்பென்று அடியோடு குதிக்க, அடுத்த சரிவின் விளிம்பிலிருந்து ஒரு முள்ளம்பன்றி நகர்ந்து வந்தது. நின்றது. சிலிம்பியது. அசையாது நாராயணனையே பார்த்துக் கொண்டது.

"வாடி, வா, வதவதன்னு பெத்து போட்டு தோட்டத்த அழிக்கலாமுனு பாக்குறியா? ஒன்று நீ. இல்ல நான், வாடி!''

கம்பை இறுக்கிக் கொண்டு பின்னடைந்தான். எதிரி முன்னேறுவான் என்று நினைத்த முள்ளம்பன்றி திகைத்தது. விறைப்பைச் சற்று தளர்த்தியது. இரண்டடி பின்னே போன நாராயணன் கொம்பை தரையில் ஊன்றி பத்தடி தாண்டி முள்ளம்பன்றி முன்னே குதித்தான். குதித்த உடனே வானத்திற்கு எகிறினான். எகிறும் போது மூங்கில் கழியால் முள்ளம் பன்றியின் முகத்தில் அடித்தான். முள்ளம்பன்றி கீச்சென்று கத்தியது. மல்லாக்கப் புரண்டு துடித்து. சுதாரித்துக் கொண்டு, முழு விறைப்போடு பெரிய முள் பந்தாய் நின்றது. நாராயணனுக்கும் முள்ளம்பன்றிக்கும் இடையே பத்தடி இடைவெளி இருந்தது. இருவரும் பாயத் தயாராக இருந்தார்கள். மேலேயிருந்து 'நாராயணா' என்று ஆச்சியின் உறவுக்கார செட்டியார் குரல் கேட்டது.

சரிவின் நுனியில் வருவது ஆபத்தானது. எப்போது வேண்டுமானாலும் மண் இளகி ஆளை சறுக்க வைத்து விடும். நாராயணன் அந்த ஆளைப் பற்றிக் கவலைப்பட்டான். ஆனால் முள்ளம் பன்றி, தலைக்குமேல் ஆபத்திருப்பதை கவனித்து விட்டது. நாராயணனை நோக்கி வேகமாய் நகர்ந்தது.

-தொடரும்




''இனிமே தன் காலில் விழுந்து யாரும் வணங்கக் கூடாதுன்னு கட்சித் தலைவி உத்தரவு போட்டுட்டாங்களாமே ஏன்?''

''அவங்க காலில் போட்டிருந்த தங்கக் கொலுசை காணோமாம்!''

– து. பூவராகன்


புது மனைவியின் முதல் சமையல்!



• டாக்டர் ஸ்ரீதர்-உமா

புது மனைவி பிரமாதமாக சமைக்க வேண்டும் என்ற முனைப்புடன் முதன் முதலாகச் செய்து தருவதைச் சாப்பிட்டுவிட்டு 'எங்கம்மா செய்ற மாதிரி இல்லையே...' என்று ஆன்ட்டி கிளைமேக்ஸாகச் சொல்பவர்களும் உண்டு; உப்பு சப்பில்லாமலிருந்தால்கூட, 'பிரமாதம்' என்று பாசாங்கு செய்து சாப்பிடுபவர்களும் உண்டு. ஒரு சிலரின் 'முதல் சாப்பாடு' அனுபவத்தைக் கேட்டோம்.

• சிவகுமார்-கிருஷ்ணவேணி



டாக்டர் என். ஸ்ரீதர்-கண் மருத்துவர். நாம் கேட்டதுமே "நானே சொல்கிறேனே..'' என்று வாய்தா வாங்கிக் கொண்டார். அவர் அனுபவத்தை விளக்கிய பிறகுதான் வாய்தாவுக்கான காரணம் புரிந்தது. எலக்ட்ரிக் குக்கரில் மனைவி உமா மகேஸ்வரி பொங்கல் செய்திருக்கிறார். பயத்தம் பருப்பும் மிளகு சீரகமுமாக மணம் ஆளைத் தூக்கியது.

"ஆனால் குக்கரைத் திறந்த போதுதான் தெரிந்தது பொங்கலுக்குப் போதுமான அளவு தண்ணி வைக்கலைன்னு... அப்படியே விறைத்துப் போய் சாப்பிட முடியாமல் இருந்தது! எனக்கு அன்னைக்கு முக்கியமான ஆபரேஷன் வேற இருந்தது. கோபம் வந்து 'இது கூட செய்யத் தெரியலையே'ன்னு கத்திட்டேன். அப்புறம் ஹோட்டலிலிருந்து டிஃபன் வரவழைச்சு சாப்பிட்டோம்..." என்றார் டாக்டர் ஸ்ரீதர்.



• விஜயகுமார்-சுபா

"இந்த அனுபவத்தைச் சொல்லணும்னா 'அவளு'டைய பர்மிஷன் வேணுமில்ல..." என்று புன்னகையுடன் சொன்னார்.

பர்மிஷன் கொடுக்கத் தயங்காத உமாமகேஸ்வரியைப் பாராட்ட வேண்டும்.

"படித்துக் கொண்டிருக்கும்போதே திருமணம் ஆகிவிட் டது. சமைக்கவே தெரியாது. அந்த முதல் அனுபவத்தன்று மேல் வீட்டில் குடியிருந்த அம்மாள் தாமாகவே முன் வந்து மதியச் சமையலுக்கு உதவினார். சீக்கிரமே தேறி விட்டேன்'' என்கிறார் உமா. "ஆமாமாம்" என்று ஒப்புக் கொள்கிறார் ஸ்ரீதர்.



சிவகுமார்-கிருஷ்ண வேணியின் காதலுக்கே காரணமாக இருந்தது கிருஷ்ண வேணியின் நளபாகம்தான்!

"நான் மதுரையில் படித்துக் கொண்டிருந்தபோது கிருஷ்ணவேணி எனக்கு ஜூனியர் மாணவி. ஒரு நாள் மட்டன் பிரியாணியும் சிக்கன் ஃப்ரையும் செய்து டிபன்பாக்ஸில் எடுத்து வந்தாள். அன்றே மயங்கிட் டேன்...." என்கிறார் சிவகுமார்! இவர்கள் திருமணம் ஆனதும் புகுந்த வீட்டில் இந்த விஷயம் தெரியவர, எல்லோரும் கிருஷ்ண வேணியைக் கிண்டல் செய்து தள்ளி விட் டார்கள்!

"நிலைமையைச் சமாளிக்க, அன்னைக்கே எல்லாருக்கும் அதே பிரியாணி செய்து கொடுத்து விட்டேன்" என்கிறார் கிருஷ்ணவேணி.

"முக்கியமாய் ஒன்று சொல்லணும்.. இவள் அசைவம் சாப்பிட றதை நிறுத்தி ஒரு வருஷமாயிடுச்சு. ஆனாலும் எங்களுக்குச் செய்து கொடுத்துக் கிட்டுத்தான் இருக்கா...'' -மாறாத காதலுடன் சொல்கிறார் சிவகுமார்.

"சுபாவுக்கு காஞ்சிபுரத்தில் வேலை. தினமும் அவசர அவசர மாகக் கிளம்பிப் போகத்தான் சரியாக இருக்கும். என் அம்மாதான் சமைக்கிறார். ஆனால் லீவு நாட்களில் சமையல் அறையில் புகுந்து அசத்தி விடுவான்! முதல் அசத்தல் அவளுடைய கத்திரிக்காய் சாதம்..." என்று சொல்பவர் விஜயகுமார்.

"கத்திரிக்காய் கூட்டு, பிட்லை, ரசவாங்கி என்று அந்த காயில் பல வகைகள் என் மாமியார் செய்து வந்தார். இவருக்குக் கத்திரிக்காய் பிடிக்கும் என்று புரிந்தது. அதனால் மாறுபட்ட கத்திரிக்காய் dish செய்ய முடிவெடுத்தேன்..." என்கிறார் சுபா விஜயகுமார்.


"செய்து போடறவங்க ஆசையும் பரிவுமா செய்து போடும்போது ருசியெல்லாம் இரண்டாம் பட்சம்தானேங்க..." என்பது விஜயகுமாரின் சித்தாந்தாம்.

புது மனைவிக்குக் கணவன் சமைத்துப் போட்டால் இதே சித்தாந்தம் செல்லுபடியாகுமா?

– நிர்மலா சக்ரவர்த்தி

படங்கள் : கேமரா திருஞானம்

யோகி



கணற்றுக் கூச்சல்

சுதாகர் வீட்டுத் திருமணத்தில் திரும்ப கௌசல்யாவை சந்திக்க நேர்ந்தது. நான் காதலித்து, ஏமாற்றிய கௌசல்யா. அவளும் என்னைப் பார்த்தாள். என்னைக் கண்டு கொண்டதற்கு அடையாளமாய், சின்னதாக ஒரு புன்னகையை வீசினாள்.

எல்லாம் நடந்து முடிந்தபின் - முடிந்து போனதைப் பற்றி நினைப்பதால் என்னவாகப் போகிறது! கௌசல்யாவுக்குக் கணவன் கிடைத்தாயிற்று. எனக்கும் மனைவி வாய்த்தாயிற்று. இனி கௌசல்யாவை எண்ணுவதாலோ, ஏங்குவதாலோ யாதொரு பிரயோஜனமும் இல்லை என்று தெரிகிறது. ஆனால் அதற்காகக் கௌசல்யாவை எண்ணாமல் இருக்க முடியவில்லை. அடிக்கடி அவளைப் பார்க்க வேண்டும் போல் கூடத் தோன்றுகிறது.

அந்தக் கல்யாண மண்டபத்தில் கௌசல்யா பளிச்சென்று இருந்தாள். அழகினால் மாத்திரம் அல்ல. ஒவ்வொரு பெரிய மனிதர்களைக் கண்டதும் முகம் மலர வரவேற்றுப் பேசுவது... அழும் சிறு குழந்தைக்கு சமையலறையில் இருந்து பால் கொண்டு வருவது... சிறுமிகளுக்கு சமமாய் விளையாடுவது... மணப்பெண்ணுக்குத் தோழியாய் இருந்து அலங்காரம் பண்ணுவது....


இதுதான் கௌசல்யாவின் விசேஷ குணம்... எதையுமே இழுத்துப் போட்டுக் கொண்டு பொறுப்போடு சுத்தமாய், பிறர் மெச்சும்படி எந்தப் பணியையுமே செய்வது அவளுக்குக் கைவந்த கலை.

எனக்கு சட்டென்று ராதிகாவின் ஞாபகம் வந்தது. என் மனைவி. ராதிகாவிடம் இத்தனை மென்மையையும், சிரத்தையையும் எதிர்பார்க்க முடியாது. கௌசல்யாவைப் பார்க்கும்போதெல்லாம் நான் செய்த தவறு விளங்குகிறது.

பணத்திற்கு ஆசைப்பட்டு விட்டால் - அது ஆடச் சொன்னால் ஆட வேண்டும். நிற்கச் சொன்னால் நிற்க வேண்டும். என் தலைவிதி - என்னவென்று எனக்குத் தெரிகிறது.

ராதிகா மீது கோபப்பட்டு என்ன பிரயோஜனம்?

அவள் வசதியான வீட்டுப் பெண். செல்லமாய் வளர்ந்த பெண்... தான், தன் சுகம் என்று வாழுபவள்.. நான் அவளுடன் சகித்துக் கொண்டுதான் வாழுகிறேன். ஆனால் அவளிடம் அன்பையோ, காத



எம்.எல்.ஏக்களை ஏப்ரல் முட்டாள்களாக்கலாமா?

! ''அமைச்சர் பதவிக்கு ஆசைப்படும் எம்.எல்.ஏக்கள் கேரள முதல்வர் ஆன்டனி வீட்டுக்குப் போய் அங்கு விளையாடும் குழந்தைகளைக் கொஞ்சினார்கள். 'அப்பாவைப் போலவே இருக்கானே' என்று ஐஸ் வைத்தார்கள். அப்புறம் தான் அவர்களுக்குத் தெரிந்தது, அவை பக்கத்து வீட்டுக் குழந்தைகளென்று!'' - இப்படியொரு தகவலை திருவனந்தபுரம் வானொலியில் நிகழ்த்திய உரையில் சொன்னார் எம்.எல்.ஏ. லோனப்பன் நம்பாடன்! இந்த திடுக்கிடும் உரையின் இறுதியில் ''இன்று ஏப்ரல் 1 அல்லவா....'' என்று கூறி முடித்து விட்டார்! சபாநாயகரும் எம்.எல்.ஏக்களும் 'விட்டேனா பார்!' என்று விளக்கம் கேட்டு வானொலி நிலைய இயக்குனருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்!

!! செங்கனூர் கிறிஸ்டியன் காலேஜில் ப்ரீ டிகிரி ஸ்பெஷல் இங்கிலீஷ் பரீட்சை. எழுத வந்தவர் ஒரே ஒரு மாணவர். அவர் வந்த பிறகுதான் கேள்வித்தாள் வராதது 'கண்டு பிடிக்கப்'பட்டது. உடனே யூனிவர்சிடிக்கு போன் செய்தார்கள். 'மாணவனை விட்டு விடாதீர்கள்; இதோ கேள்வித்தாள் அனுப்புகிறோம்' என்று பதில் வந்தது. கொஸ்டின் பேப்பர் இரண்டு மணி நேரம் கழித்து வந்தது. அதுவரை சிறை வைக்கப்பட்ட மாணவரும் எழுதிப் போனார்!

!!! பெண் எழுத்தாளர்களான வத்சலா, நிரஞ்சனா ஆகியோர் முறையே எழுதியுள்ள 'சிரஸ்ரணா', 'நெல்லு' என்ற நாவல்களில் வரும் பெண் கதாபாத்திரங்கள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளனர்?

- இது கேரளா யூனிவர்சிடி எம்.ஏ. பரீட்சையில் கேட்கப்பட்ட கேள்வி. இந்தக் கேள்வி அத்தனை மாணவர்களையும் ஒட்டுமொத்தமாக விடை தெரியாமல் திகைக்க வைத்தது. காரணம், வத்சலா, நிரஞ்சனா என்ற புனைபெயர்களில் எழுதுவோர் ஆண்கள். வத்சலா எழுதிய நாவல் நெல்லு; நிரஞ்சனா எழுதிய நாவல் சிரஸ்மரணா! இது மாற்றப்பட்டது மட்டுமல்ல; சிரஸ்மரணாவில் பெண் பாத்திரமே கிடையாது!

திருவனந்தபுரத்திலிருந்து : எஸ்.எஸ். மணி

லையோ எதிர்பார்க்க முடியவில்லை. அப்போதெல்லாம் கௌசல்யாவின் ஞாபகம் வரும்.

''பணத்திற்காக - என் மீதான காதலை முறித்தாயே... இப்போது சந்தோஷமாகவா இருக்கிறாய்?'' என்று பரிகாசத்துடன் கௌசல்யா கேட்பது போல் இருக்கும்.

''ஹாய் சங்கர்...'' என்று ஒரு குரல் அழைக்கவே திரும்பினேன். கௌசல்யா தன் கணவருடன் நின்று இருந்தாள். சினேகமாய் சிரித்தேன்.

''இவர் என் கணவர்... இது சங்கர்- என் அத்தைப் பையன்'' என்று கௌசல்யா அவள் கணவனையும், என்னையும் ஒருவருக்கொருவர் அறிமுகப் படுத்தினாள்.

''ஆமா... ஏன் ராதிகா கல்யாணத்துக்கு வரலை?'' என்று கேட்டாள்.

''அவளுக்கு உடம்பு சரியில்லை'' என்று ஒரு பொய்யைச் சொன்னேன். ராதிகாவிற்கு என்னோடு வெளியே வரப் பிடிக்காது.

''ஒரு நாளைக்கு ராதிகாவைப் பார்க்க வரணும். நீங்க ரெண்டு பேரும் பேசிட்டு இருங்க'' என்று கௌசல்யா கூட்டத்தினுள் கலந்து விட்டாள். கௌசல்யாவின் கணவனைப் பார்த்தேன். நல்ல பர்சனாலிட்டி. பாங்கில் பணி புரிவதாகக் கேள்விப்பட்டேன். இவன் நல்லவனாக, இதமானவனாக இருக்கக்கூடும். கௌசல்யா கொடுத்து வைத்தவள். அதனால்தான் முன்னைக்கு இப்போது பூரிப்புடன் பளிச் சென்று இருக்கிறாள்.

அவளது திருமணத்திற்கு முந்திய சாதாரண வாழ்க்கையை நான் நினைத்துப் பார்த்தேன்.

அப்போதெல்லாம் அவள் வீட்டிற்கு அடிக்கடி போனேன். கௌசல்யாவைப்

பார்க்கத்தான். .கௌசல்யா காலேஜில் பைனல் இயர் படித்துக் கொண்டு இருந்தாள். அப்போது கௌசல்யாவின் வீடு நிறைய கஷ்டத்தில் இருந்தது. நிறைய உறுப்பினர்கள். குறைவான வருமானம். கௌசல்யாவிடம் நான் அவளை விரும்புவதாகக் கூறினேன். என் காதலை வெளிப்படுத்த, என் உத்தியோகம் எனக்கு தைரியத்தைத் தந்தது.

அடிக்கடி கௌசல்யாவுடன் சுற்ற ஆரம்பித்தேன். கௌசல்யாவும் என்னை நேசித்தாள் என்றுதான் கூற வேண்டும். என்னை மணம் செய்து கொண்டால் - சுமைகள் அற்ற வாழ்க்கை வாழலாம் என்று அவள் கனவு கண்டு இருக்கலாம்.

எனக்கு வீட்டில் வரன் பார்த்தார்கள். எனக்கு வீட்டில் பெண் பார்ப்பதை கௌசல்யாவிடம் சொல்லவில்லை. ஏன்? கௌசல்யாவை நான் உண்மையாக விரும்பவில்லையா? ஒரு டைம் பாஸுக்காக அவளைப் பார்க்கிறேனோ... பேசுகிறேனோ... நேசிப்பது போல் பாவனை செய்கிறேனா?

ராதிகாவைப் பெண் பார்க்கப் போய் இருந்தேன். எல்லோருக்கும் பிடித்துப் போயிற்று. வசதியான இடம் வேறு. ராதிகாவையும், ராதிகாவின் வசதியையும் காணும் போது - கௌசல்யாவின் மீது இருந்த கொஞ்ச நஞ்ச காதலும் கசந்து போனது.

ஒரு மாலையில் - கௌசல்யாவிடம் ராதிகாவை மணக்க இருப்பதைச் சொன்னேன். தயக்கத்துடன்தான். கௌசல்யா கோபப்படுவாள், ஆத்திரம் கொள்வாள் என்று எண்ணினேன். அவள் சாதாரணமாய்த்தான் இருந்தாள். 'அப்படியா... சந்தோஷம்' என்றாள். விரக்தியுடன் சிரித்தாள். அவள் சிரித்து முடித்த போது, லேசாய் அழுது இருந்தாள். நான் ரொம்ப காலம் அந்தப் புன்னகையையும் அழுகையையும் மறக்க முடியாதவனாய் இருந்தேன்.

என் திருமணத்துக்குப் பிறகு கௌசல்யாவுக்கும் கல்யாணம் ஆயிற்று. கல்யாணத்திற்கு நான் செல்லவில்லை. பிற்பாடு மாதத்திற்கு ஒருமுறையாவது அவளை எங்கேனும் சந்திக்க நேரிடும்.

ஒவ்வொரு மாதமும் அவளது அழகும் கம்பீரமும் கூடிக் கொண்டே போயிற்று. நல்ல கணவன் கிடைத்த சந்தோஷம் என்று விளங்கிற்று.

ஆனால் நான் ஒவ்வொரு மாதமும் உடைந்து கொண்டு போவதாய் தோன்றியது. வாழ்க்கையை பாசாங்குடன் வாழ்ந்தால் அப்படித்தான் நேரும்..

கௌசல்யாவிற்கு நான் வாழும் வாழ்க்கை தெரியும். அவள் என்னை விசாரிக்காவிடினும் ஒரு பார்வை பார்ப்பாளே... அதில் பரிகாசம் இருக்குமா, பரிதாபம் இருக்குமா என்று தெரியவில்லை.

வாழ்க்கை பற்றிய படிப்பினை எல்லாமே கடந்து முடிந்த பிறகுதான் புரிகிறது. வாழ்க்கை என்ன என்பதை அறிவதற்குள்ளாகவே பாதிக்கு மேலான வாழ்க்கை கழிந்து விடுகிறது.

மண்டபம் நிறைந்திருந்தது. கௌசல்யாவின் கணவன் என்னிடம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தான். எனக்கு வார்த்தை வரவில்லை.

நான் அவனை அன்பாக, சிநேகத்துடன் தழுவிக் கொண்டு நின்றேன்.

சேலத்துக்காரர்களே சிரிக்க வைக்கத் தயாரா?

உங்கள் மூளையின் தமாஷ் செல்களை தூசி தட்டி, பிரதி எடுத்து, கார்டில் நிரப்பி உடனே அனுப்புங்கள்! கோவை, தஞ்சை வாசிகளுக்கு அப்புறம் சிறப்புப் பக்கங்களில் இடம்பிடிக்கப் போவது நீங்கள்தான். ஆரம்பித்தாயிற்றா?

— ஆசிரியர்

நீங்கள் கேட்டவை : தராசு

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

? 'மதிய உணவுத் திட்டம் நாடு முழுவதும் அமுலாகும்' என மாதவராவ் சிந்தியா அறிவித்துள்ளது பற்றி...?

! ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டு தவிக்கப் போகிறார்கள். எச்சரிக்கை தேவை. மக்களுக்கு இது போன்ற சலுகைகள் தந்தால் அடுத்தடுத்து வரும் அரசுகள் (எந்தக் கட்சியானாலும்) அதை அதிகரிக்க முடியுமே தவிர, குறைக்கவோ, நீக்கவோ முடியாது. பெற்றோரைப் பொறுப்பற்றவர்களாக்கி அரசே பொறுப்புக்களை ஏற்பதால் வோட்டு கிடைக்கலாம்; கல்வியோ, தேசப் பொருளாதாரமோ மேம்படாது.

● கே.கே. வெங்கடேசன், சென்னை.

? உங்களை இந்தியாவின் சர்வாதிகாரியாக நியமித்தால் என்ன செய்வீர்கள்?

! மெய்யான ஜனநாயகத்தை மலரச் செய்வேன்!

● டி.எஸ். கிருஷ்ணன், திருப்பரங்குன்றம். ☐

? ப. சிதம்பரம் பதிலையே கண்டித்து, சரியாக பதில் கூறுமாறு சொல்லியிருக்கிறாரே சபாநாயகர்?

! ' அமைச்சராக மட்டுமே பதில் கூறி நழுவாமல் அரசின் பிரதிநிதியாக இருந்து பொறுப்புடன் பேசுங்கள்' என்று கேட்டிருக்கிறார். சிதம்பரமும் கண்ணியமாக ஏற்றிருக்கிறார். பார்லிமெண்டரி ஜனநாயகத்தின் பலத்தை உணர்த்தும் சம்பவம்.

☐ ரூ. 25 பரிசுபெறுபவர்:
டி.எஸ். கிருஷ்ணன், 81, சன்னதித் தெரு,
திருப்பரங்குன்றம் - 625 005.

● ஜெ. ஜெயக்குமார், பொள்ளாச்சி.

? இலங்கை அதிபர் சந்திரிகா, 'முன்னாள் பிரதமர் ராஜிவைக் கொன்றது விடுதலைப்புலிகள்தான்' என்று கூறியுள்ளாரே?

! அமைதிக்கு ஆசைப்பட்டு நா காத்தவர், ஆசை நிராசையாக, இப்போது உண்மையை உரைக்கிறார்!

● எல். எம். அபிதாட்சயா, மதுரை

? "செயலற்ற பிரதமர்" என முதல்வர் சட்ட சபையில் இந்தியப் பிரதமரை அழைத்தது நியாயமா?

! ஆர்ப்பாட்டம் பண்ணினால்தான் செயல்திறன் உள்ளவர் என்று அர்த்தமில்லை; அமைதியாகவும் செயலாற்ற முடியும் என்பது 'ஜெ'யின் சர்வாதிகார சுபாவத்துக்குப் புரிய வராத ஒன்று.

● ஜெ.பாலா, இடைப்பாடி.

? சோஷலிஸத்தையும் முதலாளித்துவத்தையும் தவிர மனித வாழ்க்கையை நடத்திச் செல்ல வேறு பொருளாதார வழியே கிடையாதா?

! இருக்கிறதே! கவனிப்பாரின்றிக் கிடக்கும் காந்தியப் பொருளாதாரம்தான் அது!

● தமிழ்ப்பாரதி, நெல்லிக்குப்பம்.

? எதிர்கட்சிகள் நடத்திய பந்த் பெரு வெற்றி பெற்ற நிலையில் முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல், பந்த் முழுத் தோல்வி என்று அரசு அறிவித்துள்ளதே?

! பூசணி சோற்றில் மறைய மறுக்கிறதே! மறைக்க முயன்றவர் அரசியல்வாதிகளாக இருந்தாலும் பாதகமில்லை. தமிழக அரசின் தலைமைச் செயலர் கட்சிக் கண்ணோட்டத்தில் பேசியிருப்பது கண்டிக்கத் தக்கது.

● ஞானாம்பாள் செல்வம், பட்டுக்கோட்டை.

? தமிழரசி இதழில், 'கல்கி கோட்டான் ஜாக்கிரதை' என்று உங்களுக்கு எச்சரிக்கை

• ஆழம் தெரியாமல்...



• பதிலை கண்டித்து...



• ஆசை நிராசையாக....



• தற்கொலைப் படை.....



விடப்பட்டிருக்கிறதே, கவனித்தீர்களா?

! வதந்திகளையும் ஊகங்களையும் வைத்து எழுதுவதற்கும் அப்படி எழுதுவதை அங்கத பாணியில் கிண்டல் பண்ணுவதற்கும் இடையே உள்ள வித்தியாசம் புரியாமல் பதறுகிறவர்களைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

கழகமே கோயில்; ஜெயலலிதாவே தெய்வமாமே?

● எஸ். அருள்மொழி, காட்டூர்.

? 'முதல்வரைக் காக்க ஒன்றரைக் கோடி அ.தி.மு.க. தொண்டர்கள் தற்கொலைப் படைகளாக மாறி தியாகம் பண்ணத் தயார்' என்று சொல்கிறாரே செங்கோட்டையன்?

! இப்படியெல்லாம் பேசுவது வன்முறையைத் தூண்டிவிடுவதற்கு ஒப்பாகும்; சட்டத்துக்கு முரணானது என்பது நமக்குப் புரிகிறது; சட்ட அமைச்சர் கே.ஏ.கே.வுக்குப் புரிகிறதாகத் தெரியவில்லை. முதல்வரைக் காப்பாற்றக் கூடியது தொண்டர்கள் அல்ல, வாய்மை மட்டுமே. அதை அவர் என்றோ துறந்தாகி விட்டது!

● அ. பழனி, வெங்கிட்டம்பாளையம்.

? கழகமே கோயில், ஜெயலலிதாவே தெய்வமாமே?

! ஆமாமாம்! சேடப்பட்டியே மணி அடிக்கும் பூசாரி, சசிகலாவே எக்ஸிகியூடிவ் ஆபீஸர்; பல்லக்கு தூக்க மந்திரிகளிடையே நீ, நான் என்று போட்டி!

● தென்றல் பிரியன், மேலூர்,

? ஜெ.க்கு முன்பு இருந்தவர்களும் இனிமேல், வரப்போகிறவர்களும் ஊழலே செய்யாதவர்களா என்ன? ஜெயை மட்டும் தாக்குகிறீர்களே?

! இது என்ன கேள்வி ஸார்! நேற்று ஊழல் பண்ணினவர்களை நேற்று கண்டித்தோம். நாளை ஊழல் பண்ணப் போகிறவர்களை நாளை விமர்சிப்போம். இன்று ஊழல் செய்து கொண்டிருப்பவர்களை இன்று தாக்குகிறோம். தாக்குதலின் தீவிரம் ஊழலின் அளவுக்கு ஏற்ப அதிகரிக்கிறது.

● எச். எஸ். மணி, திருச்சி.

? நாடாளுமன்ற இடைத் தேர்தல்களை திடீரென்று ரத்து செய்தது சரியா?

! சரியல்ல. பொதுத் தேர்தலே நெருங்கி வரும்போது இடைத் தேர்தல் இப்போது அவசியமில்லை என்பதாக, தேர்தல் அறிவிப்புக்கு முன்பே சேஷனுக்கு எடுத்துக் கூறப்பட்டது. அப்போது அந்தக் கருத்தை ஏற்காதவர், இடைத் தேர்தல்களுக்கான ஏற்பாடுகள் நடக்கத் தொடங்கிய பிறகு ரத்து செய்வது துக்ளக் தர்பாராகத்தான் தெரிகிறது.

● எச். மோகன், மன்னார்குடி.

? 'பிரதமர் பதவிக்கு சேஷன்தான் தகுதியானவர்' என்று முன்னாள் துணைப் பிரதமர் தேவிலால் கூறியிருப்பது பற்றி...?

! சேஷன் தகுதியானவரோ இல்லையோ, தேவிலால் தாம் தகுதியானவர் அல்ல என்று ஒரு வழியாகப் புரிந்து கொண்டு விட்டதற்காக நன்றி!

● ஜெ. கண்ணன், சென்னை

? தர்மம்தான் கடைசியில் ஜெயிக்கும் என்று படித்திருக்கிறோம். தர்மம் எங்கே இருக்கிறது? அதர்மம்தானே ஜெயிக்கிறது?

! "தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும் எனும் இயற்கை மர்மத்தை நம்மாலே உலகங்கற்கும்" என்ற வார்த்தைகளை அர்ச்சுனன் பாரதியின் பாஞ்சாலி சபதத்திலே எவ்வளவு அவநம்பிக்கையான சூழலில் நம்பிக்கையோடு சொல்கிறான் என்று எண்ணிப் பாருங்கள். சோர்வு நீங்கும்.

* துக்ளக் தர்பார்...



* தகுதி அல்ல....



* அமைதி.....



* ஆர்ப்பாட்டம்....



நெஞ்சை அள்ளும் தஞ்சை!

தஞ்சை பெரியகோவில் நந்தி

தமிழகத்தின்
முதல்
கட்அவுட்.

காவேரி

பகிரதனைத்
தேடும்
பாவை.

கல்லணை

காண்ட்ராக்டர்களிடம்
சிக்காததால்
வந்த
காரணப் பெயர்.

திருவையாறு தியாகையர்

A
Keyboard
for
Karnatic
Music

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தமிழுக்கு
ஜெ!

சரஸ்வதி மகால் நூலகம்

தியாகராஜ பாகவதர்
நடித்த
படம்
ஓடும்
ஏஸி தியேட்டர்

"சொன்னேனில்லே, ராஜ பரம்பரைன்னு!"
-தஞ்சை - 1, டி.வி.சோமசுந்தரம்.





தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை

"தமிழகம் தற்போது
அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது"
திருவையாறு. "வர்ஷாந்த்"

லவ்

அவன்
போட்ட பச்சரிசி
கோலம் நோக்கி
எறும்புகள்
- என் மனசு
சுமந்து!
தஞ்சை - 2, ஹரணி.

இந்தியா!

வேட்பாளர் ஏஸியில்
வாக்காளர் தூசியில்.

சட்டமன்றத்தில் சடுகுடு!
பாராளுமன்றத்தில் சரிவிடு!

முறிந்தது!

கடன்
அன்பை முறிக்கும்
-கடை வாசகம் கண்டு
அன்பை முறித்துக்
கொண்டேன்....
கடன் வாங்காமல்!
தஞ்சாவூர், ராஜபாரதி.


பெயர்க் காரணம்!

தஞ்சை நகரில் தெற்கு வீதி என்ற சிறிய வீதியில், பதினைந்து வங்கிகள் அடுத்தடுத்து அமைந்திருக்கின்றன. இந்த வீதியை Bank Street என்று சொல்கிறார்கள்!
தஞ்சாவூர், வீரசேனன்.

காலேஜ் அகராதி!

ஒட்ட'கம்' - லிப்ஸ்டிக் பார்ட்டி

நெஞ்சை அள்ளும் தஞ்சை!



எக்ஸ்ட்ரா ஸ்ட்ராங் என்றால் என்ன?

ஜிலிப்பா - சிரிக்கும் பெண்
கிராஸ்டாக் - பெண்ணின் அண்ணன்
மில்க் ஹவுஸ் - குண்டான பெண்
எக்ஸ்ட்ரா டாக்ஸ் - மேக்கப் பெண்
எக்ஸ்ட்ரா ஸ்ட்ராங் - தங்கையோடு செல்லும் பெண்

மதுக்கூர்,
கஸ்தூரி சீனிவாசன்.

சிங்கப்பூர் ரிட்டர்ன்!

பட்டுக்கோட்டையிலிருந்து பேராவூரணிக்குச் செல்லும் டவுன் பஸ் ஒன்றிற்குப் பெயர் 'Open University'. அந்த பஸ்ஸில் பல இருக்கைகள் இருக்காது. உட்காரக் கூடிய சீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் ஜன்னல் சட்டங்களும் இருக்காது... அதனாலே இப்பெயர்!

● பட்டுக்கோட்டை பெரிய தெருவிலுள்ள ஒரு சந்துக்குப் பெயர் 'தாலி அறுப்பான் சந்து'! இந்த சந்தின் வழியாக வரும் பெண்களின் தாலி பகல் பொழுதிலும் திருடர்களால் அறுக்கப்பட்டதால் இப்பெயர் வந்தது!

பட்டுக்கோட்டை காலேஜில் காதில் விழுந்தது:

"டேய் மாப்ளே! காலேஜை பாதியிலே டிஸ்கன்டினியூ பண்ணிட்டு சிங்கப்பூர் போனியே, எப்படா வந்தே...? மொட்டையெல்லாம் வேற போட்டிருக்கே...?"

"போன வாரம்தான்டா வந்தேன்..." சிங்கப்பூர்ல நல்லா சம்பாதிச்சு திரும்பினா மொட்டை போடுறேன்னு வேண்டிக்கிட்டேன்... அதான் மொட்டை."

"டேய், ஒரு வாரத்துல எப்படிடா மொட்டை மண்டையில இவ்வளவு முடி வளரும்? சிங்கப்பூர் போயி 'ஓவர் ஸ்டே' பண்ணின உன்னைய புடிச்சு மொட்டை போட்டு இங்கே அனுப்பிப்புட்டானுவ... நீ என்னடான்னா சாமிக்கு மொட்டை போட்டேன்னு சொல்றே... வுட்டா பிரேமானந்தாவுக்கே நீ 'லிங்கம்' எடுத்துக் கொடுப்பேடா...!"

பட்டுக்கோட்டை,
ச. ராதாகிருஷ்ணன்.

● "சபாநாயகரை ஆண்டு விழாவுக்குக் கூப்பிட்டது தப்பாப் போச்சு."

"ஏன், என்னாச்சு?"

"யாரும் பேசக் கூடாதுன்னுட்டார்."

வலங்கைமான், வெங்கட்.

● "உன் மாஜி காதலி, உன்னை ஏன் இப்படித் திட்டறா?"

"'ரொம்ப போரடிக்குது. மறுபடி காதலிக்கலாமா'ன்னு கேட்டேன்..."

தஞ்சை - 1, டீ.வி.சோமசுந்தரம்.

பிரதமர் சிரிக்காவிட்டாலும்...

திருபுவனத்தில் தசாவதாரத்தில் ஒன்றான நரசிம்ம அவதாரத்துக்கென்று தனியாகக் கோயில் உள்ளது. (பெயர் : ஸ்ரீசரப மூர்த்தி) இவ்வூர் மக்கள் இக்கோயிலை P.M. கோயில் என்று வேடிக்கையாக அழைத்துச் சிரிக்கின்றனர்!

● அப்பூதியடிகள் வாழ்ந்த ஊரான திருவையாறுக்கு அருகில் உள்ள திங்களூரில் பாம்பு கடித்து இறந்ததாக இன்றுவரை வரலாறு இல்லை. காரணம், இவ்வூருக்குத் திருநாவுக்கரசர் வந்தபோது பாம்பு கடித்து இறந்த அப்பூதியடிகள் மகனை உயிர் பிழைக்க வைத்ததுதானாம். மேலும் இவ்வூர்க் கோயில் குளத்தில் நீராடினால் விஷம் இறங்கி விடுமாம்.

தஞ்சாவூர், அய்யாறு ச. புகழேந்தி.



யாருடா அது
ஜெலலிதாவைக்
குறைசொல்லிப் பேசறது?

கிளிக் :
சாரி



தொட்டில் சுகம் படகில் இருக்க, கட்டில் எதற்கு?

கிளிக் :
பார்வதீசம்



"கறுப்பிலும் ஓர் அழகுன்னு சொல்லப்
போய்த்தான்
கறுப்புப் பணம் பண்றாங்க போல!"



• டூயட் : தேவதையா?

**SUCCESS IS A PUBLIC AFFAIR,
FAILURE IS A PRIVATE FUNERAL**
— RUSSEL

அன்புள்ள பாலு,

என்னிடமிருந்து ஒரு கடிதத்தை நீ எதிர்பார்த்திருக்க மாட்டாய். நான் யாரென்று சொல்லட்டுமா? நான்தான்.... உன் மனச்சாட்சி... மறுபக்கம்... subconscious mind... எது வானாலும் சரி!

ஏக வசனத்தில் 'நீ' என்று உன்னை அழைப்பதற்கு நீ வருத்தப்பட மாட்டாய் என்று எனக்குத் தெரியும். 'நீ'யென்று அழைக்கப்படுகின்ற இடங்களிலேதான் நெருக்கமும் பாசப் பிணைப்பும் அதிகமான உரிமையும் இருக்கும்.

உனது பேத்தி ஜனனி கூட 'பாலு தாத்தா' என்றுதானே உன்னைப் பெயர் சொல்லி அழைக்கிறாள்? அதற்காகக் கோபித்துக் கொள்கிறாயா என்ன?

என்னை நீ கோபித்துக் கொண்டாலும் பரவாயில்லை. உனக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுத வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே நினைத்துக் கொண்டிருந்தேன். திடீரென்று துணிச்சல் வந்தது; இப்பொழுது எழுதுகிறேன்.

ஒரு வாரத்திற்கு உன்னிடமிருந்து ஓடி ஒளிந்து கொள்வேன். ஆம்! உன் கோபம் குறையும் வரை உன் மனச்சாட்சி தலைமறைவாகி விடும்.

இப்படி உன்னிடம் 'ஜோக்' அடிப்பதை நீ ரசிக்க மாட்டாய்! ஆனால் என்ன செய்வது?

My way of joking is to tell the truth; that is the funniest joke in the world!

சொன்னது யார் தெரியுமா?
BERNARD SHAW.

அவ்வப்பொழுது எனக்குத் தோன்றும். *1995* K.B.க்கு *1965* K.B.யாக உனக்கு ஒரு கடிதம் எழுத வேண்டுமென்று! சரியான சந்தர்ப்பங்கள் கிட்டியதில்லை.

விஷயத்திற்கு வருகிறேன் :

உனது படைப்புக்கள் மிகப் பெரிய வெற்றி பெறும் நேரங்களிலெல்லாம், வெற்றிக்குக் காரண கர்த்தாக்களை வரிசையாகப் பட்டியல் போட்டு, பத்தாவது ஆளாக ஏதோ போனால் போகிறதென்று உனது பெயரைக் கடைசியில் போட்டுக் கொள்வாய். இது humility அல்ல! பொய்யான அடக்கம்.

ஏனெனில் தோல்விகள் நேரும் போது அதற்குக் காரணமாக அந்த ஒன்பது பேரையும் பட்டியலில் முதலாவதாக எழுதி விட்டு பத்தாவது ஆளாக உன் பெயரைப் போட்டுக் கொள்கிறாயா? அதுதான் இல்லை!

Failureக்கு உன்னை மட்டும்தான் காரணமாகச் சொல்லிக் கொள்கிறாய். நீ மட்டுமென்ன, படைப்பில் பங்குகொண்ட அத்தனை பேரும் உன்னைத்தான் காரணமாகச் சொல்வார்கள். சிலர் தங்கள் தங்கள் வட்டங்களுக்குள் சொல்லிக் கொள்வார்கள்; பலர் வெளிப்படையாகவே சொல்வார்கள்!

இதைத்தான் Russel சொன்னான் : "வெற்றி என்பது ஒரு பொது விஷயம்; தோல்வியென்பது தனிப்பட்டவரின் ஈமச் சடங்கு" என்று.

ஆனால் உண்மையென்னவோ இது தான்: Soldiers win battles; But generals get the credit! நெப்போலியன் சொன்ன மாதிரி

சினிமாவைப் பொறுத்தவரை சிப்பாய்கள் எனப்படுபவர்கள் உன்னைப் போல இயக்குநர்களும் உங்கள் உதவியாளர்களும்தான்.

வெற்றிக்கனி கிடைத்தால் அதைத் தட்டிச் செல்கின்ற generals யாரென்று நான் சொல்லத் தேவையில்லை.

'டூயட்' திரைப்படம் எடுக்கும் போது நீ பட்ட உழைப்பும், சிந்திய வியர்வையும் சந்தித்த கஷ்டங்களையும் நான் அறிவேன். அறுபது வயதைத் தாண்டியவன் மாதிரியா நீ அந்தப் படத்திற்காக உழைத்தாய்? இப்பொழுதுதான் முதல் திரைப்படத்தை இயக்குகின்ற ஒரு DFT மாதிரியல்லவா ஓடியாடி மலைகளையும் மடுக்களையும் ஏறி இறங்கி, அலைகளில் நனைந்து, கொட்டும் மழையில் உன்னையே கரைத்துக் கொண்டு பணிபுரிந்தாய்!

அந்தப் படத்தின் அற்புதமான இசையை வெளிக்கொண்டு வர மட்டும் ஏறத்தாழ நாற்பது நாட்கள் உழைத்தாயே! 'Duet' இசை ஆல்பம் A.R. ரகுமானின் மிகச் சிறந்த இசை ஆல்பமாகக் கருதப்பட்டதே!

கத்ரி கோபால்நாத் என்கிற அற்புத saxaphone இசைக் கலைஞனை எப்படி வெகுஜனரீதியாகப் பேசப்படுகிற அளவுக்கு உயர்த்தி விட்டாய்!

கே. பாலசந்தர்

ஒளிப்பதிவாளர் ரகுநாத ரெட்டி என்கிற உனது அரசவைக் கலை நுணுக்க வல்லுநரை எப்படி ஒரு தூக்குத் தூக்கி நிறுத்தியது அந்த டூயட் திரைப்படம்!

ஆனால்... ஆனால் என்ன?

Nothing succeeds like success. உனக்குத் தெரியுமே!

'டூயட்' படம் ஆரம்பிப்பதற்கு முன் இளையதிலகம் பிரபு அவர்களுடன் நீ பேசிக் கொண்டிருந்த போது, பிரபுவிடம் நீ கேட்டது நினைவிருக்கிறதா? "படத்தின் முடிவு எப்படியிருக்க வேண்டும்? நூறு படங்கள் நடித்து முடித்து விட்ட பிரபுவின் தனிப்பட்ட ரசிகர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்கின்ற அளவில் இந்தப் படத்தில் நான் என்னெல்லாம் செய்ய வேண்டுமென்று" நீ கேட்டதற்கு பிரபு என்ன சொன்னார்?

"பிரபு படத்தை நீங்கள் இயக்கவில்லை; K.B. படத்தில் இந்த பிரபு நடிக்கிறான்" என்று பிரபு ரத்தினச் சுருக்கமாகச் சொன்னாரே! நினைவில்லையா?

ஆனால் என்ன ஆயிற்று?

விநியோகஸ்தர்களின் விருப்பு, வெறுப்புகள், உடன் இருந்தவர்களின் ஆலோசனைகள், விசிறிகளின் எதிர்பார்ப்புகள், முதல் பெஞ்ச் ரசிகர்களின் ரசனைகள் என்று நீயே ஏதேதோ எண்ணிக் கொண்டு கடைசியில் நடந்ததென்ன?

அது K.B. படமும் இல்லாமல், பிரபு படமும் இல்லாமல் ஒரு இரண்டும் கெட்டான் படமாக ஆகி விட்டதைப் பலர் உன் மீது குற்றம் சுமத்தினார்களே!

"I cannot give you a formula for success; But I can give you a formula for failure: Try to please everyone!" என்று யாரோ ஒரு புண்ணியவான் சொல்லியிருப்பது உன் டூயட் விஷயத்தில் எவ்வளவு உண்மையாகி விட்டிருக்கிறது!

எல்லோரையும் திருப்திப்படுத்த நினைத்து ஓடாக உழைத்து, விழலுக்கு இறைத்த நீராகி கடைசியில் நீ யாரையுமே திருப்திப்படுத்தவில்லையென்பது உனக்குப் புரிந்தால் சரி!

உனது படத்தில் டிரம்கள் மலைச்சரிவில் உருண்டு வருவதும், நாயகன் பத்துப் பேரை புரட்டிப் புரட்டி அடிப்பதும், காதல் பாடல் காட்சிகளில் 50, 60 பேர் ஒரே மாதிரி உடையணிந்து கொண்டு கூட்டமாக நடனம் ஆடுவதும்....

உனது படத்திலாவது இந்த அதீத கற்பனை மசாலாக்கள் இருக்காது என்று நினைத்து வரும் ரசிகர்களுக்கு எத்தனை பெரிய ஏமாற்றம்! சரி அய்யா! கற்பனையில் 60 பேர் என்ன, 100 பேர் வேண்டுமானாலும் நடனம் ஆடி விட்டுப் போகட்டும்; இங்கே கோடம்பாக்கத்து ஸ்டூடியோக்களிலேயே ஒரு மாயாஜால செட்டைப் போட்டு எடுத்திருக்கலாமே!

நடனம் அமைத்துக் கொடுத்த ராஜு சுந்தரம் அவர்களை எத்தனை பாராட்டினாலும் தகும்! அது வேறு விஷயம். ஆனால் எதற்கு ராஜஸ்தான் அரண்மனைகளும், அந்த மணல்பரப்புகளும், ஒட்டகங்களும்? அதிலும் மூன்று ஊர்கள், 500, 600 கிலோ

மீட்டர் என்று 100 பேரை அழைத்துக் கொண்டு ஊர் ஊராக... டேரா மாற்றி....

எத்தனை செலவு? தேவையா உனக்கு! 'எனக்கும் குரூப் டான்ஸ் எடுக்கத் தெரியும்' என்று யாரிடம் நீ காட்டிக் கொள்ள வேண்டும்? இனிமேல் உனக்கு யார் சர்டிபிகேட் கொடுக்க வேண்டும்?

காதலின் நளினத்தை எடுத்துக்காட்ட உனக்கு சொல்லியா தர வேண்டும்? 'மரோ சரித்ரா'வில் காதலன், காதலி பின்னால் 100 பேர் நடனம் ஆடினார்களா? காதலி வயிற்றிலே பம்பரம் விட்டானே கமல்... அந்த ஒரு 'ஷாட்'டையே சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாரே உருதுக் கவிஞரும் இயக்குநருமான குல்ஸார் அவர்கள்.

'வறுமையின் நிறம் சிவப்பு' படத்தில் சிப்பி இருக்குது; முத்துமிருக்குது; திறந்து பார்க்க நேரமில்லேடி ராஜாத்தி! என்று ஸ்ரீதேவியின் வாய் வழி வந்த ட்யூனுக்கு வார்த்தைகளைப் பொருத்திப் பொருத்திப் பாடி தன் காதலை வெளியிட்டானே கமல்...!

வேறு எந்த திரைப்படத்திலும் இப்படி ஒரு நளினமான காதல் பாடலைப் பார்த்ததேயில்லையென்று இந்தி இசையமைப்பாளர்கள் லட்சுமிகாந்த் - பியாரிலால் அவர்களும், கவிஞர் ஆனந்த் பக்ஷி அவர்களும் வாய் விட்டுப் பாராட்டி விட்டு அதே effectஐ இந்திப் பாடலிலும் கொண்டு வர அவர்கள் பட்ட பாடும் சிரமங்களும்... உனக்கு நினைவில்லையா?

இவ்வளவு ஏன்? நீ எடுத்த 'அழகன்' படத்தில் மம்முட்டியும் பானுப்ரியாவும் டெலிபோனிலேயே பேசிக் கொண்டிருப்பதை...

சங்கீத ஸ்வரங்கள்
ஏழே கணக்கா?
இன்னும் இருக்கா?
என்னவோ மயக்கம்!

என்கிற overlap பாடல் காட்சியில் இரவு முழுவதும் அவர்கள் டெலிபோனிலேயே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இரவு முழுவதும் off செய்யப்படாத T.V. பெட்டியின் காலை ஆரம்ப இசையுடன் முடிக்கப்பட்டிருக்கும் அந்த காதல் காட்சியின் புதுமையாகட்டும், நேர்த்தியாகட்டும்....

காற்றுக்கென்ன வேலி?
கடலுக்கென்ன மூடி?

என்று ஒரு கன்றுக்குட்டியைப் போல் உள்ளம் துள்ளுகின்ற நாயகி சுஜாதாவின் உணர்ச்சிப் பிரவாகத்தைக் காட்டும் 'அவர்கள்' படத்துப் பாடலாகட்டும்...

இவையனைத்தையும் உனக்கே நான் நினைவுபடுத்துவது கொல்லன் தெருவில் ஊசி விற்பதைப் போல் தோன்றுகிறதா?

அன்றைக்கு 'நீர்க்குமிழி' என்கிற தலைப்பிலே நீ முதல் படம் எடுக்கத் தொடங்கிய போது உன்னைச் சுற்றியிருந்தவர்கள் அத்தனை பேரும் sentimental ஆக அந்தத் தலைப்பு வேண்டாம் என்று சொன்ன போதெல்லாம் அந்த நாடகத் தலைப்பை மாற்ற முடியாது என்று தீர்மானமாக இருந்த K.B.ஐ நினைவு இருக்கிறதா உனக்கு?

"மேஜர் சந்திரகாந்த்" திரைப்படமாக ஆகும் போது இசையமைப்பாளராக நீ சொன்ன V.குமாருக்கு பதில் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களைப் போட வேண்டுமென்று மதிப்பிற்குரிய ஏ.வி.எம். அவர்கள் தனது விருப்பத்தை வெளியிட்ட போது பிடிவாதமாக குமார்தான் வேண்டும் என்று நீ சொன்னதும், உனது convictionஐ மதித்து குமாரே இசை அமைக்கட்டுமென்று பெரிய மனதுடன் ஏவி.எம். அவர்களை ஒப்புக் கொள்ள வைத்த அந்த K.B.ஐ நினைவிருக்கிறதா?

ஏன்? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட, ரோஜா திரைப்படத்தை மிகுந்த பொருட்செலவில் தயாரிக்கத் திட்டமிட்டிருந்த நேரத்தில் அந்தப் படத்திற்கு ஒரு புதியவரை இசையமைப்பாளராகப் போடலாம் என்று நீ மணிரத்தினம் அவர்களிடம் insist பண்ணியதும் உனது convictionம், மணிரத்தினம் அவர்களின் அசாத்திய தன்னம்பிக்கையும் சேர்ந்து செயல்பட்டு A.R.ரகுமான் என்கிற ஒரு இசைப் புயலின் சகாப்தம் தொடங்கக் காரணமாக இருந்த அந்த K.B. ஐ நீ மறந்து விட முடியுமா?

எனக்கென்னவோ அந்த K.B.தான் பிடித்திருக்கிறது.

ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு கலைஞனின் புகழ் என்பது அவனது நிழலைப் போல! சில நேரங்களில் முன்னால் செல்லும்; சில சமயம் பின்னால் வரும்; பாதி நேரம் கலைஞனை விடக் குட்டையாக இருக்கும். மீதி பாதி நேரம் மிக மிக நீளமாக இருக்கும்.


அதற்காகவெல்லாம் உனது conviction லிருந்து நீ அவ்வப்பொழுது மாறி விடக் கூடாது. Conviction என்பது பிடிவாதமல்ல. உள்மனத்தின் தீர்ப்பு; அதன் மீது உனது நம்பிக்கை.

இப்படிக்கு,
உன்னில் பாதி - உன் மறுபக்கம்

(தொடரும்)

பிரிவுகள் வேண்டும்!

சூரியதாஸ்



ஜனனத்தில் மனசு
சந்தோஷப்படுவதற்கும்
மரணத்தில் கொஞ்சம்
அழுவதற்கும்
பிரிவுகள் வேண்டும்.

பூமிகூடச்
சூரியனிலிருந்து
சிதறி விழுந்த
சின்னத் துண்டுதான்.

குரங்கிலிருந்து மெல்ல
வால் பிரிந்தபோது
வந்த வடிவமல்லவா
மனித இனம்.

கூடுவிட்டுக் குஞ்சு
பிரியும் போதுதானே
சிறகிருப்பதன்
சிறப்பு புரிகிறது!

பிரிவுகள் இருப்பதால்தானே
கற்புள்ள
கட்சிக் கொடியின் கீழ்
கூடிநிற்க முடிகிறது.

உதடுகள் இரண்டும்
ஒட்டிக் கொண்டால்
மனித குலத்தின்
ஒரே தாய்மொழி
முனகலாகும்.

பாம்புச் சட்டைபார்த்துச்
சிறுவர்கள்
பரவசப்படுவதெப்படி?

கூட்டுப்புழு
வண்ணத்துப் பூச்சியாய்
வானில் பறக்குமா?!

சூரியனின் சுயநிறத்தை
வானவில் எப்படி
வரைந்து காட்டும்?

பிரிவுகள் இல்லையானால்...
இதயத்தைச்
சுண்டியிழுக்கும்
காதலியின்
இரட்டைச் சடையிருக்காதே!

தபால் துறையும்
தந்தித் துறையும்
தலை முழுகப்படும்.

பிரிவுகள்
சுவையானவை
சுகமானவை.

மனித இனத்திலும்
மனத்திலும் தவிர
எல்லாப் பிரிவுகளையும்
ஏற்கச் சம்மதம்.

வட்டமேஜை

காடுகளே மேல் என்று கருதிவிடப் போகிறார்கள்!

♦ எமர்ஜென்சியின் போது கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல், துக்ளக்கையே நிறுத்தி விட்ட 'சோ', ஈகின் டீ.வி.க்காக தன் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காததில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?
அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

♦ உலகத்தையே தன் கொடுங்கோல் ஆட்சியால் நடுநடுங்க வைத்த முசோலினி, ஹிட்லர் வரலாற்றை ஜெயலலிதா ஒருமுறை திரும்பிப் பார்ப்பது அவருக்கு நல்லது. தமிழக போலீஸின் வரம்பு மீறிய அக்கிரமங்களுக்கு என்றாவது ஒருநாள் பதில் சொல்லியாக வேண்டும்.
பூனாம்பாளையம்,
என். ஆர். சுப்பிரமணியன்.

♦ 'ஜெயந்திக்கு இந்த கதி; ஜனங்களுக்கு என்ன கதி?' தலையங்கம் மிகக் கூர்மையாக எழுதப்பட்டுள்ளது. இதைவிட புலி, சிங்கம் வாழும் காடுகளே மேல் என்று மக்கள் நினைத்து விடப் போகிறார்கள்!
திண்டுக்கல், ஜனனி பார்கவி.

♦ சம்பாதிக்கும் தொகை குறைவோ, அதிகமோ – செய்யும் தொழிலில் ஆத்ம திருப்தியுடன் பணிபுரிந்தாலே புகழ்பெற முடியும் என்பதை காவேரியால் தெரிந்து கொள்ள முடிந்தது.
பெருந்துறை, செழியவர்தனா.

♦ ஒரு நடிகையின் பேட்டியை இப்படி மாறுபட்ட முறையில் தாங்கள் அணுகியதற்குப் பாராட்டுக்கள். காவேரியின் தெளிவான பேச்சு, ஒரு சிறந்த இடத்தை அவர் அடைவார் என்பதை எடுத்துக் காட்டுகிறது.
ஈரோடு, டி. சந்திரன்.

♦ அரசியல் பிரபலங்களின் அவலமான நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்றால் ராதாபாய் போன்ற அச்சவுணர்வற்ற, நெஞ்சுரமிக்க வீராங்கனைகள் நாட்டில் பெருக வேண்டும்!
கும்பகோணம், கே. என். பாலகிருஷ்ணன்.

♦ விடாமுயற்சி செய்து வெற்றி பெற்ற ராதாபாய் பெண்களுக்கு ஒரு வழிகாட்டியாய் இருக்கிறார், பாராட்டுக்கள்.
சென்னை - 75, ச. அருட்செல்வன்.

♦ "டீ.வி. டிப்ஸ்" பிரமாதம். எல்லோருக்கும் ரொம்பவும் உபயோகமான விஷயங்கள்.
மதுரை - 16, பி. ராஜா.

♦ 'பசும்பொன்' விமர்சனத்தில், 'கொஞ்சம் கட்டம் தாண்டி வெளியே வருவார் என்று நம்பலாமா?' என்று நீங்கள் கேட்டவுடனேயே கிராமத்துக் காதலையும், சாதியத்தையும் தவிர்த்து படம் எடுக்கப் போவதாக பாரதிராஜா அறிவித்து விட்டாரே!
திருவாரூர், மு. தனகோபாலன்.

♦ சில நேரங்களில் ஒருவரிடம் உள்ள குறைபாடுகளே அவர்களைப் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்ல உதவுகிறது; நம்பிக்கை மட்டும் இருந்தால் போதும் என்பதை தெளிவாக விளக்கியது "குயிலோசை". ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்!
திருச்சி -2, அக்கரைப்பட்டி கனகராஜ்.

♦ கல்கி 7.5.95 இதழில் கல்லூரி மாணவி தீபா கூறியது போல், "சின்னத் திரைக் கதைகள்" கே. பாலசந்தர் அவர்களின் இயக்கத்திலோ அல்லது தயாரிப்பிலோ உருவாகவில்லை. தீபா விரும்பிப் பார்க்கும் அந்நிகழ்ச்சியை "சரோ ஆர்ட் கிரியேஷ"னுக்காக திருமுருகன் இயக்குகின்றார்.
சென்னை - 93, ரா. கணபதிசுப்பிரமணியன்.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

பார்க் டவுன்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 584354

கிளை அலுவலகங்கள்: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582, 416417

P-995,இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை-40 போன் 6262656, 6280750



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு *
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- விதமும். 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர்

10ஆம் ஆண்டு முடிவில் ரூ.50,000/- பெறுவீர்

அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில்

ரூ.1 கோடி பெறுவீர்

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ. 100/-	25 Yrs	Rs.3,00,000

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535

பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
குறைந்த 10 ஆயிரம் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேமிப்பு திட்டம்
10% P.a.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக டெபாசிட் செய்யும்போதே வழங்கப்படும்.
* தனிபோனஸ் டெபாசிட் திட்டம் 20%
குறைந்த அளவு ரூ 20,000 டெபாசிட் காலம் 5 ஆண்டுகள்

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

❑ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❑ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❑ வெள்ளி விடுமுறை

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka